


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 14 இதழ் - 02 - மே 2022*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*
*தி.ரத்தினசபாபதி*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 45.00, ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*


உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.


**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1
படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்........................................ 04

2
காங்கிரஸ் ஆட்சியில் உயர்கல்வியில்
தமிழ் ஆதரவும் எதிர்ப்பும்
டாக்டர். சு.நரேந்திரன்........................................ 09

3
2022ல் விளாதிமிர் இலியிச் லெனின்
பிறந்தநாள் செய்தி
ந.முத்துமோகன்........................................ 17

4
முதல் ராஜராஜ சோழனின் குலசாமி
அ.கா.பெருமாள்........................................ 19

5
தாராள அனுமதி கொடுக்கும் பெற்றோர்கள்
மருத்துவர். ப.வைத்திலிங்கம்................................ 25

6
பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் காவிதி
மு.கலையரசன்........................................ 28

7
ஜப்பானிய செவ்வியல் இலக்கியங்கள்:
காலமும் கருத்தும்
முனைவர் இரா.ரம்யா........................................ 43

8
திராவிட மாடல் மீட்டுருவாக்கம்
இராபர்ட் கால்டுவெல்
ச.சுபாஷ் சந்திரபோஸ்........................................ 51

9
உயிரளபெடை
முனைவர் செ.கஸ்தூரி........................................ 63

10
முடிவில்லாமல் நீளும் கேள்விகள்
ஜெ.அரவிந்தன்........................................ 67

11
குட்டிரேவதி சிறுகதைகள்
பெண்ணுடலின் மொழி
சுப்பிரமணி இரமேஷ்........................................ 71

படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்



# தென்கலை வைணவர்கள்

**காதரின் யங்: (2021) கிளர்ந்தெழுந்த மாற்றங்கள்**

(தமிழ்நாட்டின் சமயம், சாதி, அரசியலில் பிராமணர் அல்லாத தென்கலை வைணவர்களின் பங்களிப்பு).

*katherine Young (2021)Turbulent Transformations. Non Brahmin srivaisnavas on Religion, Caste And Politics in Tamil Nadu. Orient Black Swan, Hyderabad. 500 029*

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

இந்நூலிற்கான தரவுகளில் ஒரு பகுதி வாய்மொழித் தரவுகளாகும். நூலின் தலைப்பிற்கேற்ப இத்தரவுகள் பிராமணர் அல்லாதாரிடம் இருந்தே சேகரிக்கப் பட்டுள்ளன. இத் தரவுகள் சேகரிப்பிற்கான நேர்காணலை தென்கலை வைணவப் பிரிவைச் சேர்ந்த செட்டியார், தலித், இசை வேளாளர், நாயுடு, பிள்ளை, ரெட்டியார், சாத்தாதர், வன்னியர், யாதவர், வேளாளர் ஆகிய சாதியினரிடம் நிகழ்த்தியதாக நூலின் அறிமுக உரையில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர், வைஷ்ணவர் என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறார்கள். அத்துடன் பாகவதர் (பக்தர்கள்) என்றும் இராமனுஜ தாசர் என்றும் இவர்கள் தம்மை அழைத்துக் கொள்கின்றனர். தம் நேர்காணல்களின் போது தலித்துகளும் தலித் அல்லாதாரும் தலித் என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தவில்லை என்கிறார். தீண்டாமைக் கொடுமைக்கு

ஆட்பட்டிருந்த மக்கள் பிரிவினரை வைணவர்களாக மாற்றிய இராமானுஜர் அவர்களுக்கு இட்ட பெயர் ‘திருக்குலத்தார்’ என்பதாகும். ஆனால் இவர் சந்தித்த தலித் வைணவர்கள் இச் சொல்லைப் பயன்படுத்தாது ஹரிஜன், ஆதி திராவிடர் என்ற சொற்களையே பயன்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.


**வாய்மொழி வரலாறு**

நம் காலத்திய பிராமணர் அல்லாத வைணவர்களின் வரலாறு மறைந்து வருகிறது என்று கருதும் நூலாசிரியர் மரபு குறித்த நினைவுகளும் அறிவும் குறைபாடு உற்றதே காரணம் என்கிறார். இதை ஈடு செய்யும் வகையில் பிராமணர் அல்லாத ஸ்ரீவைஷ்ணவர்களின் வாய்மொழி வரலாற்றைப் பயன்படுத்தியுள்ளார். வாய்மொழி வரலாறு என்பது குறித்த வரையறையாக சிறிய அளவிலான மேற்கோள் ஒன்றை இது தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த மேற்கோளின்படி, வாய்மொழி வரலாறு என்பது தனி மனித நினைவுகளைச் சேகரித்தும் பதிவுசெய்தும் வரலாற்று ஆவணமாக்குதல் ஆகும். இது மானுட அனுபவங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பது குறித்து அறிய உதவுவதுடன் மட்டுமின்றி மக்களின் கடந்த காலம் எப்படி இருந்தது என்பதையும் அதை அவர்கள் எவ்வாறு எதிர் கொண்டார்கள் அல்லது உணர்ந்தார்கள் என்பதையும் அறிய உதவும் சிறந்த முறையாகும்.

வாய்மொழி வரலாற்றின் இப் பண்பாடானது ஆய்வுக்கு உதவிகரமானது என்றாலும் தம்மைப் பொறுத்த அளவில் பிராமணர் அல்லாத ஸ்ரீவைஷ்ணவர் குறித்த தமது ஆய்வுக்குப் போதாததாகவே இருந்தது என்கிறார். ஸ்ரீவைஷ்ணவம் ஆய்வுக்காக கல்வெட்டுகளின் துணையுடன் எழுதப்பட்ட வரலாற்று அரசியல் நூல்கள், காலனிய ஆட்சியின் போது வெளியான விவரச் சுவடிகள் (கெசட்டியர்) நீதிமன்றத் தீர்ப்புகள், பிராமணர் அல்லாதார் வெளியிட்ட சிறு நூல்கள், செய்தித்தாள்களில் வெளிவந்த கட்டுரைகள் என்ற அச்சுப் பனுவல்களைப் படித்தறிந்துவிட்டே இந் நூலாசிரியர் தகவலாளர்களிடம் நேர்காணல்களை நடத்தி உள்ளார். அவரது தகவலாளர்களும் நூலாசிரியர். படித்தறிந்த செய்திகளையே கூறியுள்ளனர் ஆவணங்களில் இடம் பெறாத செய்திகள் அவர்களிடமிருந்து கிடைக்கவில்லை. சமூகவியல் ஆய்வுகளில் எழுத்தாவணங்களின் போதாமையை நூலாசிரியர் உணர்ந்தமை இங்கு வெளிப்படுகிறது.

இருப்பினும் வாய்மொழித் தரவுகள் இந்நூலில் குறிப்பிடத் தக்க அளவில் இடம் பெற்றுள்ளன என்று கூற இயலும். மூன்றாவது இயலில் சென்னை அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நான்காவது இயலில் புதுச்சேரி அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஐந்தாவது இயலில் திருஅரங்கம், தஞ்சாவூர்ப் பகுதிகளிலும் நேரகாணல்கள் வழி அவர் கேட்டறிந்த வாய்மொழி வரலாற்றுச்செய்திகளைப் பயன்படுத்தி உள்ளார்.

ஏழாவது இயலில் கோவிலை மையமாகக் கொண்ட அரசியலையும் நீதிமன்ற வழக்குகளையும் குறிப்பிட்டுள்ளார். கோவில்கள் ஏராளமான விளைநிலங்களையும். பிற சொத்துக்களையும் வழிபடும் மக்களையும் கொண்டிருப்பதால் இதை நிர்வகித்தல் தொடர்பான முரண்பாடுகள் எழுவது இயல்பான ஒன்று. மேலும் வடகலை, தென்கலை என்ற இரு வைணவப் பிரிவினரும் ஒரே கோவிலை தம் வழிபாட்டிற்காகக் கொண்டிருக்கும் போது இது சற்று வீரியமாகவே வெளிப்படுவது இயல்பானதுதான். பிராமணர் ஆதிக்கம் செலுத்தும் கோயில்களில் வழிபாடு, வழிபாட்டுப் பாடல் பாடுதல், குருக்களாகச் செயல்படல் என்பனவற்றை மையமாகக் கொண்டே சமத்துவம் இன்மை வெளிப்படுகிறது என்பது நூலாசிரியரின் கருத்தாகும். மேலும் வடகலை வைணவம் பிராமணர்களையும் தென்கலை வைணவம் மிகுதியான எண்ணிக்கையில் பிராமணர் அல்லாதாரையும் கொண்டிருக்கும் நிலையில் இம் முரண்பாடு சற்று ஆழமாகவே வெளிப்படும். இவ்வகையில் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பாரத்தசாரதி கோயில் நடைமுறை உரிமைகள் தொடர்பாக வடகலையாருக்கும் தென்கலையாருக்கும்





இடையே எழுந்த முரண்பாடுகளையும் நடந்த வழக்குகளையும் ஆய்வாளர் அர்ச்சுண் அப்பாத்துரையின் கட்டுரை ஒன்றை அடியொற்றி சில செயதிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

**வழிபாட்டில் சமத்துவம்:**

பார்த்தசாரதி கோயில் நிர்வாகம் தொடர்பாக சில முடிவுகளை எடுக்கும் போது நிர்வாகிகளிடையே வாக்கெடுப்பு நடத்தும் முறை இருந்துள்ளது. இதில் பிராமணர் அல்லாதாரின் வாக்களிப்பு உரிமையைப் பறிப்பதன் வாயிலாக கோயில் நிர்வாகத்தில் அவர்களின் பங்களிப்பை இல்லாதாக்க பிராமணர்களான வடகலையார் முடிவு செய்தனர். இம்முடிவை நிறைவேற்றும் வழிமுறையாக உறுப்பினர்களுக்குக் கல்வித்தகுதித் தேர்வையும் கட்டணத்தையும் அறிமுகம் செய்தனர். இதை எதிர்த்துப் பிராமணர் அல்லாத தென்கலையார் நீதி மன்றம் சென்றனர். வழக்கில் இறுதிவரை அவர்களால் வெற்றிபெற இயலவில்லை. இருப்பினும் பிராமணர் அல்லாதார் இயக்கம் தென்கலையாரை நிமிரச் செய்துள்ளது.

வைணவ பாகவதர்கள் (பக்தர்கள்) கோயிலுக்குள் எந்த வாயில் வழியாக நுழைய வேண்டும் எங்கு அமர வேண்டும் எங்கே எப்போது தீர்த்தம் பிரசாதம் சடகோபம்* பெறவேண்டும் என்பதில் பாகுபாடு முன்பு இருந்துள்ளதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். 1944 க்கும் 1968க்கும் இடைப்பட்ட காலத்தில் நம்பிள்ளை சபா என்ற அமைப்பைச் சேரந்த. நாயுடு சமூகத்தினர் பிற பிராமணர் அல்லாத சமூகத்தினருடன் இணைந்து திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் நிலவிய சாதிப் பாகுபாட்டிற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். 1959இல் இந்து அறநிலையத் துறை கோயில்கள் மடங்கள், அறக்கட்டளைகள் ஆகியனவற்றின் நிரவாகத்தை கவனிக்கத் தொடங்கியது.

1964 இல் நாயுடு சமூகத்தினர் பார்த்தசாரதி கோயிலில் தீர்த்தம் வழங்க பிராமணருக்கும் பிராமணர் அல்லாதாருக்கும் தனித்தனிப் பாத்திரங்கள் பயன்படுத்துவதாகவும் தீர்த்தம், சடகோபம் இரண்டும் பிராமணருக்கு முதலில் வழங்கப்படுவதாகவும் சடகோபம் பிரமணர் அல்லாதாருக்கு அரிதாகவே பயன்படுத்தப்படுவதாகவும் குற்றம்சாட்டினர். இக் குற்றச்சாட்டை அறநிலையத் துறைக்கு அனுப்பினர். இதை ஆராய்ந்த அறநிலையத்துறை ஆணையர் இப்பாகுபாட்டை நிறுத்தும்படி ஆணையிட்டார். அத்துடன் முதலில் தீர்த்தம் பெறும் மரபுரிமை பெற்றிருந்த 'ஆதியபாகக் கோஷ்டி'என்ற பிராமணக் குழுவுடன் ஏனைய பிராமணர்கள் கலந்து நிற்கக் கூடாது என்றும் ஆணை பிறப்பித்தார்.

பிராமணர் தரப்பினர் இதற்கு மறுப்புத் தெரிவித்தனர். இவை நீண்ட காலமாக நடைமுறையில் இருந்தவை முன்னோர்களால் வழங்கப்பட்டவை. கல்வெட்டுக்களில் பதிவானவை என்றனர். அத்துடன் பிராமணத் துறவிகள் சிலருக்கும் அறங்காவலர் சிலருக்கும் சிறப்புரிமைகள் உண்டு என வாதிட்டனர். ஆனால் இந்துஅறநிலையத் துறையின் ஆணையர் இக் கருத்துக்களைப் புறந்தள்ளினார்.

குற்றச்சாட்டுகளை முன் வைத்த மனுதாரர்கள் மரபு சார்ந்த விதிவிலக்குகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். இங்கு சிக்கல் என்பது பிராமணர், பிராமணர் அல்லாத பக்தர்களுக்கு இடையில் காட்டப்படும் வேறுபாடுதான் என்று ஆணையர் சுட்டிக்காட்டினார். இது ஒரு பொதுப் பிரச்சினை என்பது அவரது கருத்தாக வெளிப்பட்டது. இந்துஅறநிலையத் துறையின் 1959 ஆண்டுச் 106 ஆவது சட்டப் பிரிவானது பிரசாதம் அல்லது தீர்த்தம் வழங்கலில் சாதி, பாலினம் பிறந்த ஊர் என்பதன் அடிப்படையில் பாகுபாடு காட்டுதல் கூடாது என்று விதித்துள்ளதையும் எடுத்துரைத்தார்.

1964 இல் பார்த்தசாரதி கோயில் நிகழ்வைப்போல் 2014இல் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள்கோயிலிலும் கோயில் வழிபாட்டில் சமத்துவம் இன்மைக்கு எதிரான குரல் ஒலித்தது. தென்கலையாரில் பிராமணர் அல்லாத பக்தர்கள் இக் கோயிலின் வழிபாட்டில் சமத்துவம் நிலவுவதாகக் கூறி கோயிலுக்கு வெளியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது ஒரு நீண்டகாலச் சிக்கலின் வெளிப்பாடாகும்.கோயில்வழிபாட்டில் சமத்துவம் இன்மைக்கு எதிராக பிராமணர் அல்லாதார் சென்னை

★ இதை 'சடாரி' என்றும் குறிப்பிடுவர். பெருமாள் கோயிலில் ஆசி வழங்குவதற்காகப் பக்தர்கள் தலையில் வைத்து எடுக்கப்படும் வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களால் ஆன திருமாலின் பாதம் பொறிக்கப்பட்ட சிறு கிரீடம்.



உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தனர். இவ் வழக்கின் தீர்ப்பு 2008 இல் வழங்கப்பட்டது. வழிபாட்டில் கலந்து கொள்வோரிடையே பாகுபாடு காட்டக் கூடாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இருப்பினும் மாற்றம் எதுவும் நிகழவில்லை.

பிராமணர் அல்லாதவர்கள் மணவாள மாமுனிவர் (தென்கலை ஸ்ரீவைஷ்ணவ ஆச்சார்யார்களில் ஒருவர். கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்). சந்ததியின் மைய வாசல் வழியாகச் சென்று வழிபடமுடியாது. அங்கு திவ்வியபிரபந்தம் ஓதலாகாது. வழிபாட்டின்போது பின் வரிசையிலேயே நிற்கவைக்கப்பட்டனர். இதை எதிர்த்தே இப்போராட்டம் நிகழ்ந்தது. இப்போரட்டத் திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தீண்டாமை ஒழிப்பு முன்னணி, திராவிடர் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், சி.ஐ.டி.யூ தொழிற்சங்கங்கள் ஆகியன இப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கின. மையப் பாதை வழியாக பிராமணர் அல்லாதார் செல்வதைத் தடுத்ததாகக் கூறுவதை பிராமணர் தரப்பு மறுத்தது. ஆனால் புனித நூல்கள் ஓதுவது பிராமணர்களுக்கு நீண்ட காலமாக உள்ள உர்மை என்று கூறியது.

நூலாசிரியர் மேற்கொண்ட நேர்காணலின் போது பிராமணர் ஒருவர் திவ்விய பிரபந்தம் ஓதும் குழுவில் பிராமணர் அல்லாதாரைச் சேர்த்துக் கொள்வதில்லை என்று கூறியள்ளார். ஆனால் திருமலையில் உள்ள உடையவர்(இராமானுஜர்) சந்நதியில் சாத்தனியா (சாத்தாத) ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆழ்வார்களின் பாடல்களைப் பாடியதாக 15ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. கல்வெ எட்டு குறிப்பிடும் சாத்தானியார்கள் சூத்திரர்கள் என்று கோயில் ஒழுகு நூல் குறிப்பிட்டுள்ளது. இராமானுஜரின் (12 ஆவது நாற்றாண்டு) இறுதி ஊர்வலத்தில் 900 பூணூல் அணியாத ஸ்ரீவைஷ்ணவர்கள் கலந்து கொண்டு திவ்வியபிரபந்தத்தில் 3000 பாடல்களைப் பாடியதாக குருபரம்பரை (குருபரம்பரை பிரபாவம் 6000) நூல் குறிப்பிடுகிறது. எஞ்சிய 1000 பாடல்களை பிராமணர்கள் தாளத்துடன் பாடி உள்ளார்கள்.

திருஅரங்கம் வரலாறு கூறும், கோயில் ஒழுகு நூல் சூத்திரர்களான சாத்தானியர்களுக்கு திருஅரங்கம் கோயிலில் பிராமணர்களுக்குப் பின்னால் அமர்ந்து திவ்விய பிரபந்தம் பாடும் உரிமையை இராமானுஜர் வழங்கியிருந்ததைக் குறிப்பிட்டுள்ளது. இவ் உரிமையின்படி திவ்விய பிரபந்தத்தின் முதல் இரண்டு அடிகளைப் பிராமணர்களும் இறுதி இரண்டு அடிகளை சாத்தானியர்களும் பாடுவர்.இந் நடைமுறை 1942 வரை நடைமுறையில் இருந்துள்ளது. பின்னர் நீதிமன்றம் வழி இவ்வுரிமை பறிக்கப்பட்டுள்ளது. இது குறித்து திவ்விய பிரபந்தத்தை தமிழ் வேதம் என்றும் இது சூத்திரர்களுக்கும் பெண்களுக்கும் உரிய புனித நூல் என்றும் வைணவ ஆச்சார்யார்கள் கூறிவந்த நிலையில் இவ்விரு பகுதியினரும் திவ்விய பிரபந்தம் பாட பெரிய வைணவக் கோயில்களில் அனுமதி மறுக்கப்பட்டது என்கிறார் நூலாசிரியர்.


இந்நிகழ்வுகளை முன் நிறுத்தி அவர் கூறிச் செல்லும் செய்திகள் பண்பாட்டு ஆய்வுகளுடன் நெருக்கமான தொடர்புடையவை.

திருஅரங்கம், திருவல்லிக்கேணி கோயில்களில் திவ்விய பிரபந்தம் பாடும் உரிமை தங்களுக்கு மட்டுமே உரிமையானது என்பதில் தென்கலை வைணவப் பிராமணர்கள் ஏன் குறியாக இருந்தனர் என்ற வினாவை இந்நூலாசிரியர் எழுப்பி அதற்கு விடையும் பகர்ந்துள்ளார். இவை குறித்து அடுத்த இதழில் காண்போம்.

*தொடரும்*

கட்டுரையாளர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்,
மார்க்சிய சிந்தனையாளர்

## விரைவில்
## நியூ செஞ்சுரி புத்தக நிறுவன வெளியீடாக...




**ப.க.பொன்னுசாமியின் படைப்புலகம்**

*சொற்சித்திரங்கள் - திறனாய்வுகள்*

தொகுப்பாசிரியர்

**சுப்ரபாரதிமணியன்**


'இவருடைய கட்டுரைகள் அறிவியல் சிற்பி ஒருவர் தம் சொல்திறன் கொண்டு செதுக்கிய இலக்கியக் கலைச் சிற்பங்களாகுமெனில் மிகையாகாது.'

***- தமிழண்ணல்***

'பொன்னுசாமி கல்வித்துறைக்குச் செல்லாதிருந்தால் நல்ல கட்டுரையாளனாக விளங்கியிருக்கக் கூடும். இவருடைய விஞ்ஞான அறிவு ஏட்டுச்சுரைக்காய் அல்ல என ஒவ்வொரு கட்டுரையும் தெளிவு படுத்துகிறது.'

***- அசோகமித்திரன்***

## ஆறாம் திணை பதிப்பகத்தின் வெளியீடாக




- ஈடிணையற்ற இந்திய வரலாற்று ஆய்வாளரும் மூலச் சிறப்பு வாய்ந்த மார்க்சியச் சிந்தனையாளருமாகிய டி.டி. கோசம்பியின் வாழ்க்கை வரலாறு, அவர் மேற்கொண்ட முக்கியமான ஆய்வுகளின் சுருக்கங்கள், இதுவரை தமிழில் வெளிவராத கட்டுரைகளின் தமிழாக்கம் ஆகியவற்றின் தொகுப்பாக;
- எழுத்தாளர் **மூ. அப்பணசாமி** தொகுத்து எழுதி, மொழியாக்கம் செய்து அளிக்கும்;
- தமிழ்நாட்டின் தலைசிறந்த மார்க்சிய அறிஞர்களான **ஆ. சிவசுப்பிரமணியன், ந. முத்துமோகன்,** ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக வரலாற்று ஆய்வுத்துறைப் பேராசிரியர் **எஸ். குணசேகரன்** ஆகியோர் எழுதியுள்ள அணிந்துரைகளுடன்.

## வரலாறு - பண்பாடு - அறிவியல்:
## டி.டி. கோசம்பியின் வாழ்க்கையும் ஆய்வுகளும்

விலை
**ரூ. 400**

**350** பக்கங்கள்
முன்வெளியீட்டுப் பதிவில்
**ரூ. 300**

நூல் டி.டி. கோசம்பியின் 115 ஆம் ஆண்டு பிறந்த நாளான 2022 **ஜூலை 31** அன்று வெளிவருகிறது.

**ராயல் அளவு (150 x 230 mm) | இயற்கை வண்ண மேப்லித்தோ தாள் அழகிய வடிவமைப்பு | சிறந்த பைண்டிங்**

பதிவுசெய்துகொள்ள ஜீபே எண்: **G-Pay 88389 69909**

# காங்கிரஸ் ஆட்சியில் உயர்கல்வியில் தமிழ் ஆதரவும் எதிர்ப்பும்



டாக்டர் சு. நரேந்திரன்

**கல்லூரிகளில் தமிழ்**

காமராசரின் அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியத்தின் தமிழ்ப் பயிற்றுமொழித் திட்டத்திற்குக் காங்கிரஸ் கட்சியில் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அன்றைய மத்திய அமைச்சரும் காங்கிரஸ் தலைவருமான சுப்பராயன், சி.சுப்பிரமணியத்தின் இத்திட்டத்தை மறைமுகமாக எதிர்த்து வந்தார். சிவாஜிகணேசன் 1960ஆம் ஆண்டு ஏற்பாடு செய்த பாரதி விழாவில், "கிராமணியார் தமிழைப் படிக்கச் சொல்லுகிறார். தமிழன் சிலப்பதிகாரத்தையும் புறநானூற்றையும் படித்துவிட்டால் அவனுக்கு உத்தியோகம் கிடைத்துவிடுமா?" (ம.பொ.சி. 1974: 888) என சுப்பராயன் கேள்வி எழுப்பினார். சுப்பராயனின் இக்கருத்து விழாவில் பெரும் குழப்பத்தை விளைவித்தது. அவரைத் தொடர்ந்து பேசிய ம.பொ.சி. தமிழ்ப் பயிற்றுமொழியாவதற்கும், தமிழை மொழிப்பாடமாகப் படிப்பதற்கும் உள்ள வேறுபாடுகளை கீழ்க்கண்டவாறு விளக்கினார்.

"நான் தமிழ்தான் படிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. பொது அறிவுக்கான வரலாறு, பொருளாதாரம், கணக்கு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களைத் தமிழின் மூலம் படிக்கச் சொல்லுகிறேன். தமிழைப் படிப்பது வேறு; தமிழில் படிப்பது வேறு, இலையைச் சாப்பிடுவது வேறு, இலையில் சாப்பிடுவது வேறுதானே!"

ஆங்கிலத்தை ஒரு மொழி என்ற அளவில் தினமும் ஒரு பகுதி நேரத்தில் படிப்பதை எதிர்க்கவில்லை; ஆதரிக்கிறேன் என்று கூறி, மேலும் 1937இல் டாக்டர் சுப்பராயன் சென்னை மாநிலக் கல்வி அமைச்சராக இருந்தபோதுதான் முதல்வர் இராஜாஜி உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தமிழை மட்டுமே பயிற்றுமொழியாக்கினார். அப்போதே "அடுத்த கட்டத்தில் கல்லூரிகளிலும் தமிழ் மட்டுமே பயிற்று மொழியாகும் என்று சுப்பராயன் மாநில கல்வி அமைச்சர் என்ற முறையில் அறிவித்ததையும் நினைவு கூறுகிறேன்" என்று தெரிவித்தார்.

காங்கிரஸ் அமைச்சரவையின் பயிற்றுமொழித் திட்டத்திற்குக் கட்சியில் போதிய ஆதரவில்லை என்பதை இக்குழப்பம் விளக்குகிறது. இக்கூட்டம் சென்னையிலுள்ள ஆபட்ஸ்பரி தங்கும் விடுதியில் நடந்தது. இக்குழப்பம் 'ஆபட்ஸ்பரி குழப்பம்' என வழங்கப்பட்டது.

இதே காலகட்டத்தில் அறிஞர்கள் கல்வியாளர்களிடையேயும் பயிற்றுமொழி ஆதரவு, பயிற்றுமொழி எதிர்ப்பு என இரு அணிகள் உருவாகின. பயிற்றுமொழி ஆதரவு அணியில் பாவேந்தர் பாரதிதாசன், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் முதலிய அறிஞர் பெருமக்கள் அணிவகுத்து நின்றனர். ஆங்கில ஆதரவு அணியில் ஏ.இலட்சுமணசாமி முதலியார், ஏ.ராமசாமி முதலியார் போன்றோரும் தேசியத்தின் பேரால் போலித்தனம் புரிவோரும் அணிவகுத்து நின்றனர். (த.சுந்தரராஜன் 1988.84). இவ்வாறு தமிழ்ப் பயிற்றுமொழித்திட்டம் ஆதரவு/ எதிர்ப்பு அணிகளால் அரசியலாக்கப்பட்டது.

இந்திய நடுவண் அரசின் பல்கலைக்கழக நல்கை ஆணையம் 1959ஆம் ஆண்டு ஆந்திராவில் உள்ள ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் எஸ்.கோவிந்தராஜுலுவைத் தலைவராகக் கொண்டு பதினைந்து கல்வியாளர்கள் உள்ளிட்ட செயலாக்கக்குழுவை (Working Group) உருவாக்கியது. இக்குழு பயிற்றுமொழி தொடர்பாக பத்தொன்பது பரிந்துரைகளை 30.12.1960 இல் நடந்த பல்கலைக்கழக நல்கை ஆணையக் கூட்டத்தில் வழங்கியது. பயிற்றுமொழி தொடர்பான அரசின் தலையீட்டைப் பற்றிக் கூறுகையில், "பயிற்றுமொழி என்பது பல்கலைக்கழகங்களின் பொறுப்பு. இது குறித்து அரசுடனோ அல்லது வேறு யாருடனோ எந்தக் கருத்தும் பகிர்ந்துகொள்ள வேண்டியதில்லை." (The Hindu, 24.01.1961) என அறிவித்து இளநிலை வகுப்புகளில் (BA.., B.Sc.,) ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாக நீடிக்க வேண்டும் எனவும் பரிந்துரை செய்தது.

தமிழ்ப் பயிற்றுமொழித் திட்டத்தைக் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்ட காலகட்டத்தில் பல்கலைக்கழக மானியக்குழுவின் அறிக்கை பற்றிய கேள்வியை சட்டமன்றத்தில் ஏ.ஏ.ரஷீத் என்ற உறுப்பினர் எழுப்பினார். கல்லூரிகளுக்குப் பயிற்றுமொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் கொடுக்க வேண்டும். கல்லூரிகளின் சுதந்திரத்தில் அரசு தலையிடக்கூடாது என்ற பல்கலைக்கழக நல்கைக்குழுவின் (1961) பரிந்துரைகளை அவர் சுட்டிக் காட்டினார். அவருக்குப் பதிலளித்த அமைச்சர் சி.சுப்பிரமணியம், "கோவை அரசுக் கல்லூரியில் மூன்றாண்டு கலையியல் படிப்புக்கான முதல் ஆண்டில் தமிழ்வழிக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வகுப்புகளுக்கான பாடநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்வழிக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. அரசு உதவி பெறும் கல்லூரிகளில் தமிழ்வழிக் கல்வியை அரசு கட்டாயப்படுத்தாது. இப்பிரச்சனையில் நிர்வாகங்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது" (G.O.No.841/ Education, Dated 18.04.1961) என்றார்.

**முன்னோடித் திட்டம் - செயல்பாடுகள்**

முன்னோடித் திட்டத்தைச் செயல்முறைப்படுத்தும் முயற்சியாக கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி, பொள்ளாச்சி நாச்சிமுத்துக்கவுண்டர் கல்லூரி ஆகியவற்றில் தமிழ்வழிக் கல்வி தொடங்கப்பட்டது. கோவை அரசுக் கல்லூரியில் தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டத்திற்கு 1960 - 1961 ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் (Orientation Courses) நடத்தப்பட்டன. பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் மட்டுமே வகுப்புகள் எடுக்க அனுமதிக்கப்பட்டனர்.

சென்னையில் உள்ள ராணிமேரி கல்லூரி, சென்னைக் கலைக்கல்லூரி, கும்பகோணம் அரசு கலைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்புகள் 1962 -63 கல்வியாண்டு வரை ஆங்கிலவழியிலேயே நடந்துவந்தன. இந்த மூன்று கல்லூரிகளும் 1963-64 கல்வியாண்டில் தமிழ்வழியில் இளங்கலைக் கல்வியைக் கற்பிக்க அனுமதி வேண்டின. ராணி மேரி கல்லூரி வரலாறு(Branch I), பொருளாதாரம் (Branch IV) ஆகிய துறைகளிலும், கும்பகோணம் அரசுக் கல்லூரி பொருளாதாரத் (Branch IV) துறையிலும் தமிழ் வழி வகுப்புகள் தொடங்க அனுமதி வேண்டின.

கோவையில் 1960-1961ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த வரலாறு (Branch - I), பொருளாதாரம் (Branch - IV) புவியியல் (Branch - V) ஆகிய துறைகளுக்கு அந்த மூன்று கல்லூரிகள் அனுமதி வேண்டியிருந்ததால் அரசு உடனே அனுமதியளித்தது.

அரசு அனுமதித்த இடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

| கல்லூரி | இடம் | துறை | எண்ணிக்கை |
|---|---|---|---|
| ராணிமேரி கல்லூரி சென்னை | சென்னை | பிரிவு *I*<br>வரலாறு பிரிவு *IV*<br>பொருளாதாரம்<br>பிரிவு *V* புவியியல் | 10 |
| அரசுக் கலைக் கல்லூரி சென்னை | சென்னை | பிரிவு *I*<br>வரலாறு பிரிவு *IV*<br>பொருளாதாரம் | 10 |
| அரசுக் கலைக் கல்லூரி, கும்பகோணம் | கும்பகோணம் | பிரிவு *IV*<br>பொருளாதாரம் | 15 |

***(G.O.No.746, Education, Dated 08.04.1963)***

அனுமதிக்கப்பட்ட துறைகளின் துணைப் பிரிவுகளிலும் வகுப்புகள் தமிழிலேயே நடத்தப்படவேண்டும் என ஆணையிட்டது. தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவாகக் கருத்துக்கள் பரவியதைத் தொடர்ந்து **1959** ஆம் ஆண்டு அரசு அறிவித்தபடி **1963-64** ஆம் கல்வியாண்டில் அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்றுமொழியாக்கத் திட்டமிட்டது. இத்திட்டத்திற்காக **1961-62, 1962-63, 1963-64** ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்த நிதி பின்வருமாறு.

*1961 - 1962 ரூ 8,77,000*

*1962 - 1963 ரூ 15,37,000*

*1963 - 1964 ரூ 11,37,700*

நிதி ஒதுக்கிய அரசு **1963-1964** ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் உள்ள ஆசிரியர்களுக்கு ஒரு பயிற்சி வகுப்பை நடத்தத் திட்டமிட்டது. இப்பயிற்சி வகுப்பு **1963** மே, ஜூன் மாதங்களில் கோடை விடுமுறையில் கோவை அரசுக்கல்லூரியில் ஐந்து வாரங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டது.

### கல்லூரித் தமிழ் குழுவின் செயல்பாடுகள்

கல்லூரித் தமிழ்க் குழுவின் செயல்பாடுகளுக்குத் தமிழகம் முழுதும் இருந்த வரவேற்பு, ஆசிரியர்களிடம் இருந்த ஈடுபாடு பற்றிய தகவல்களை அக்குழுவின் செயல்நிலை அறிக்கைகளின் வழி அறியமுடிகிறது.

“தமிழில் கல்லூரிப் பாடங்களை நடத்துவதற்கு ஆசிரியர்களின் ஆர்வமும் தகுதியும் எந்த நிலையில் இருக்கின்றன என்பதைக் குழு அறிந்து கொள்ள விரும்பிற்று. அதன்படி மாநிலத்தில் உள்ள எல்லாக் கல்லூரிகளுக்கும் சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. பல்வேறு கல்லூரிகளிலிருந்து வந்த பதில்கள் கல்லூரித் தமிழ்க் குழுவினருக்கு உற்சாகமூட்டக் கூடியவையாக இருந்தன. தமிழில் பாடங்களை நடத்துவதற்கு ஆசிரியர்கள் ஊக்கம் காட்டியிருக்கின்றனர். ஓரளவேனும் தயக்கம் இருக்கக்கூடும் என்று நினைத்த குழுவினருக்கு இந்த மகிழ்ச்சியான முடிவு எதிர்பாராததாக அமைந்தது.” (ச.ம.ந.1.04.1963.437) என்றவாறு அமைந்திருந்தது. மேலே எடுத்துக்காட்டப்பட்ட குழுவின் செயல் அறிக்கைகளிலிருந்து குழுவின் செயல்பாடுகளையும் ஆசிரியர்களிடம் இருந்து வரவேற்பையும் அறியமுடிகிறது.

### மாணவர்களுக்கு ஊக்கத்தொகை

தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவர்களுக்காக ஊக்கத்தொகை கொடுப்பது குறித்து அரசு விவாதித்தது இறுதியில் தமிழ்வழிக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.30/- வீதம் ஊக்கத்தொகை வழங்க அரசு ஆணை வெளியிட்டது (G.O.Ms.No.**2445** P.H.(Education) Unted **22.11.1960**).

அரசின் இந்த ஆணையைத் தொடர்ந்து கோவை கலைக்கல்லூரியில் 1960-61 ஆம் கல்வியாண்டில் தமிழ்வழியில் கல்வி கற்ற முப்பத்தைந்து மாணவர்களுக்குத் தமிழ்வழிக் கல்விக்கான ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டது (G.O.Ms. No.**142**.P.H.(Education) Dated **27.01.1961**).

### காங்கிரசில் குழு மனப்பான்மை

தமிழைப் பயிற்றுமொழி ஆக்குவது தொடர்பான சிக்கலில் தமிழகக் காங்கிரஸ் கட்சியில் இரண்டு குழுக்கள் செயல்பட்டு வந்தன. தமிழ்ப்பயிற்று மொழியாவதற்கு ஆதரவாக சி.சுப்பிரமணியம், கு.அருணாசலம், தி.சு.அவினாசிலிங்கம், பி.எஸ்.கோவிந்தசாமி ஆகியோர் இருந்தனர். காமராசர் தன் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த சி.சுப்பிரமணியத்துக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில் **1962** ஆம் ஆண்டு புதிய கல்வி அமைச்சராக பக்தவத்சலம் பதவி ஏற்றார். தொடக்கத்தில் பயிற்சிமொழி ஆதரவு கருத்துக்களைத் தெரிவித்த பக்தவத்சலம் காலப்போக்கில் இத்திட்டத்தைத் தோல்வியடையச் செய்யவேண்டும் என்ற நோக்கமுடையவராக இருந்துள்ளார் என்பதைத் “தமிழைப் பயற்சிமொழியாக்கக் கட்டாய முறையை நாம் கையாள முடியாது. தமிழுக்காகப் பரிந்து பேசுவோர் அதனைப் பயிற்சிமொழியாக்குவதற்கு ஆதரவான சூழ்நிலையை உருவாக்கும் பிரச்சாரம் செய்ய வேண்டும். வருகிற கல்வியாண்டில் தமிழ்ப் பயிற்சிமொழித் திட்டம் விரிவுபடுத்தப்பட மாட்டாது. நன்கு யோசித்த பின்னரே அது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும்.” (ம.பொ.சி.**1974.891**) என்ற அவர் கூற்றால் அறிகிறோம்.

மொத்தத்தில் பழைய கல்வியமைச்சர் சி.சுப்பிரமணியம் 1963-64 ஆம் கல்வியாண்டில் அனைத்துக் கல்லூரிகளிலும் பி.ஏ படிப்புக்குத் தமிழ் பயிற்று மொழியாக்கப்படும் என்று பிரகடனம் செய்திருந்ததை அரசு முழு அளவில் அமல் நடத்தாதென்ற நிலை ஏற்பட்டது. சி.சுப்பிரமணியம் காலத்தில் பயிற்சிமொழி பற்றிய வாதம் பிரதிவாதத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாதிருந்த தமிழக முதல்வர் கு.காமராசரும் அமைச்சர் பக்தவத்சலத்தின் மாறுதல் நிலையை ஆதரித்து வெளிப்படையாகவே அடிக்கடி அபிப்பிராயம் தெரிவிக்கலானார் (விடுதலைக்குப் பின் தமிழ் வளர்த்த வரலாறு, ம.பொ.சி., பக்.98)

இதன் காரணமாகத் தமிழரசுக் கழகம் ‘ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு’ என்ற பெயரில் மாநாடுகளையும் பொதுக் கூட்டங்களையும் தமிழகம் முழுவதும் நடத்தி இக்கழகத்தின் தலைவர் ம.பொ.சி பயிற்றுமொழியாக, ஆங்கிலம் நீடிப்பதால் விளையும் கேடுகளை விளக்கி பல நூல்களை எழுதி வெளியிட்டார். (எ.கா)

1. பாரதியும் ஆங்கிலமும்
2. காந்தியடிகளும் ஆங்கிலமும்
3. தமிழா?ஆங்கிலமா?
4. தமிழும் கலப்படமும்
5. ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு
6. மொழிச்சிக்கலும் மாநில சுயாட்சியும்.
7. இன்பத் தமிழா? இந்தி, ஆங்கிலமா? போன்ற நூல்கள் வெளியிடப்பட்டன.

இக்காலகட்டத்தில் பயிற்சி மொழிப் பிரச்சனை குறித்து கலைக்கதிர் இதழ் சார்பில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

**காலனி ஆதிக்கக் கொள்கை பக்தவத்சலம் வழியாக**

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஆரம்பப் பள்ளிகளில் 3 வது வகுப்பிலேயே ஆங்கில மொழி போதனை ஆரம்பமானது. ஆரம்பப் பள்ளிகளில் அன்னிய மொழிக் கல்வியை புகுத்தக் கூடாது என்பது காந்தியடிகளின் கொள்கை. அதன்படி தி.சு.அவினாசிலிங்கம் செட்டியார் கல்வியமைச்சராக இருந்தபோது அவரால் ஆரம்பப் பள்ளியிலிருந்து ஆங்கிலக் கல்வி அகற்றப்பட்டு உயர்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டது.

பின்னர் சி.சுப்பிரமணியம் கல்வி அமைச்சராக இருந்த போதே 5 ஆம் வகுப்பில் ஆங்கில மொழி போதனை புகுத்தப்பட்டது. அதன்பிறகு பக்தவத்சலம் கல்வி அமைச்சரான பின் 4ஆம் வகுப்பிற்கு ஆங்கிலம் வழி பயிற்று மொழி விரிவுபடுத்தப்பட்டு, 1963 இல் 3 ஆம் வகுப்பிலும் ஆங்கில மொழிக் கல்வி திணிக்கப்பட்டது. ஆம், பிரிட்டிஷ் காலத்திய நிலையில் ஆங்கிலக் கல்வி முறை அமலுக்கு வந்தது.

**சமாதானம் சொல்லப்பட்டது**

5ஆம் வகுப்பில் ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்ட போது கல்லூரிகளில் தமிழே போதனா மொழியாக்கப்படுவதால் மாணவர்களுடைய ஆங்கில மொழி அறிவின் தரம் குறைந்திருக்குமென்றும் அதனை ஈடுசெய்யவே 3 ஆம் வகுப்பு தொடர்ச்சியே ஆங்கிலக் கல்வி போதிக்க வழி செய்யப்படுவதாகவும் சமாதானம் சொல்லப்பட்டது. இப்படியாக தமிழக அரசு ஆங்கில வழிக் கல்வியை ஆதரித்த நிலையில் 1965 ஆம் ஆண்டு சனவரி 26இல் குடியரசு நாளன்று இந்திய அரசியல் அமைப்பு சட்டவிதிகளின்படி இந்தி மட்டுமே மைய அரசின் பிரதான ஆட்சி மொழியாக அமலுக்கு வருகிறது என்ற பிரகடனம் டில்லியிலிருந்து வெளியானது. இத்திட்டம் முந்தியே அமலாகி விட்டதால் மாணவர்கள் அதற்கு முந்திய நாளே இந்திக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தொடங்கினர். இதனால் தமிழ்நாட்டில் பயங்கரமான அளவில் போராட்டம் வெடித்தது.

இதன் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் ராசேந்திரன் போராட்டத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்டார். 20.1.1965 இல் கீழப்பழூர் சின்னசாமி பெட்ரோல் ஊற்றிக் கொண்டு தீக்கிரையானார். இதே போல் கோடம்பாக்கம் த.மு.சிவலிங்கம் விருகம்பாக்கம் ஏ.அரங்கநாதன், ஆசிரியர் வீரப்பன், கோவை முத்து, கீரனூர் முத்து, மாயூரம் சாரங்கபாணி ஆகியோரும் இப்போராட்டத்தில் உயிரை மாய்த்துக் கொண்டனர். விராலிமலை சண்முகம் நச்சுமருந்து தின்று உயிர்துறந்தார். உலக வரலாற்றில் மொழியின் புகழ்பாடி வீரமரணம் அடைந்த தமிழர்கள் இவர்கள் என்றால் மிகையில்லை.

இம்மொழிப் போர் புரட்சிக்குக் கலைஞர் கருணாநிதிதான் காரணம் என்று அரசு குற்றம் சாட்டி 1965 பிப்ரவரி 16 ஆம் நாள் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு 63 நாள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். (இந்தி எதிர்ப்பு வரலாறு, புலவர் த.அழகரசன்,பக்.33).

இறுதியில் அப்போதைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி கொடுத்த உறுதிமொழி காரணமாகவும் மத்திய அமைச்சர்கள் சி.சுப்பிரமணியம், ஏ.வி.அழகேசன் ஆகியோர் தாங்கள் வகித்த பதவிகளிலிருந்து விலகியதன் விளைவாகவும் தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போர் ஓய்வு பெற்றது.

பக்தவத்சலம், 1956இல் கொண்டு வந்த தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்திற்குத் தடையாய் இருந்தார். அவர் 1963 ஆம் ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பிலிருந்து பதினோராம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு பிரிவில்

ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்க வகை செய்யும் சட்டம் இயற்றினார்.

### கல்லூரியாசிரியர்களுக்குப் பயிற்சி

கோவையில் 1963-64 இல் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளில் பங்கேற்க பல ஆசிரியர்கள் விருப்பம் தெரிவித்தபோதும் அரசுக்கல்லூரி ஆசிரியர்கள் இருபத்தைந்து பேருக்கும் தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஐந்து பேருக்கும் மட்டுமே பயிற்சி அளிக்கப்பட்டது. சென்னை மாநிலக்கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் வேலாயுதன், கோவைக்கலைக் கல்லூரியைச் சார்ந்த திரு.என்.அனந்தபத்மநாபன், வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கே.ஆர்.அனுமந்தன் ஆகியோரைப் பயிற்சி அலுவலர்களாகக் கொண்டு இப்பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இதற்கிடையில் அரசு தமிழ்வழிக் கற்கும் மாணவர்களுக்கு ரூ.30./- உதவித்தொகை அளித்ததோடு முன்னோடித் திட்டத்தில் பங்குபெற்ற மாணவர்களுக்குக் கல்விக் கட்டண விதிவிலக்கும் அளித்தது. இருப்பினும் மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை. தமிழ்ப் பயிற்றுமொழி இயக்கம் நலிவடைந்துவிடுமோ என்ற பரவலான கருத்து தமிழகம் முழுவதும் எழுந்தது. இதன் எதிரொலிகள் சட்டமன்ற விவாதங்களிலும் இடம் பெற்றன என்பதை, "தமிழ்ப் பயிற்சிமொழியாக இருக்கும் கல்லூரிகளுக்கு மாணவர்கள் வரவில்லை என்று சொன்னார்கள். நான் ஏற்கனவே ஓர் இடத்தில் சொல்லியிருக்கிறேன். ஓர் இடத்தில் ஆங்கிலம் பயிற்சிமொழியாக இருக்க வேண்டுமென்ற நிலையை வைத்துவிட்டு இன்னோர் இடத்தில் தமிழ்ப் பயிற்சிமொழித் திட்டத்தை வைத்திருப்பதன் காரணமாகத்தான் மாணவர்கள் வரமுடியாத சூழ்நிலை நிலவுகிறது. பயிற்சிமொழியாகத் தமிழ் எடுத்துப் படித்தவர்களுக்குத்தான் உத்தியாகத்திற்கு எடுப்பதில் முக்கியத்துவம் கொடுக்கப் போகிறோம் என்றால் தானாகவே இதற்கு முக்கியத்துவம் வந்துவிடும். ஆகவே நம்முடைய தமிழ்மொழியை உயர்நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் அமைச்சர் அவர்களுக்கு இருக்குமானால் ஒரு பாதுகாப்பை உறுதிமொழியை அமைச்சர் கொடுக்கவேண்டும்." (ச.ம.ந.1963.306) என்ற புலவர் க.கோவிந்தனின் கருத்துவழி அறிகிறோம்.

### அண்மைக் கால வரலாற்றைப் பாருங்கள்

கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கலாம் என்று தமிழக அரசு 1959இல் ஓர் ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணை 1937இல் பள்ளிகளில் பயிற்சி மொழி பற்றிய ஆணை போன்று திட்டவட்டமானதாக இல்லை. கலைத்துறைப் பாடங்களை விரும்பினால் தமிழில் நடத்தலாம். ஆங்கிலமும் பயிற்று மொழியாகத் தொடர்ந்து நீடிக்கும் என்ற நிலை இருந்ததால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இதைக் கொண்டு வந்த போது பல தடைகளை எழுப்பினர். நூல்கள் இல்லையே என்றனர். தரம் கெட்டுப் போகும் என்றனர். இவற்றையெல்லாம் கேட்ட அரசு தன் ஆணையில் சில நெளிவு சுழிவுகளையும் நுழைக்க வேண்டியதாயிற்று. கல்லூரிகளில் கலைத்துறைப் பாடங்களை விரும்பினால் தமிழில் கற்பிக்கலாம் என்று அதற்காகக் கற்போர்க்கும், கற்பிப்போர்க்கும் சில சலுகைகள் தரப்படும் என்றும் கூறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

1937ல் சென்னை மாநிலத்தில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய மொழி பேசுவோர் இருந்தனர். பயிற்றுமொழி பற்றிய ஆணை பிறப்பிக்கப்பட்ட பொழுது மற்ற மொழியினர் ஏற்றுக் கொண்ட காரணத்தால், தமிழர்களும் மறுப்பு கூறாமல் ஏற்றுக் கொண்டனர். இதற்கு நாட்டுப்பற்றும் ஓர் காரணமாக இருந்தது. 1959 இல் நிலைமையே வேறு. சென்னை மாநிலத்தில் தமிழ் ஒன்றே வட்டார மொழி.

1959 முதல் தமிழகத்தின் கல்லூரிகளில் கலைத்துறைப் பாடங்கள் தமிழில்தான் பயிற்றுவிக்கப்படும் என்று அரசு திட்டவட்டமாக அறிவித்திருந்தால் இன்று அறிவியலும் அந்த நிலையை எட்டி இருக்கும். சட்டத்தாலும், ஐயுறவாலும் அதனைச் செய்யத் தவறிய காரணத்தால் இடர்பாடுகள் ஏற்பட்டன. தமிழில் பயின்றால் தரம் கெட்டுப் போய்விடும். தமிழில் பாடநூல்கள் இல்லை. அறிவியல் மற்றும் கலைத்துறைப் பாடங்களை தமிழில் எழுதக் கலைச்சொற்கள் இல்லை. இவற்றைக் கூறியே மக்களை அச்சத்திற்கும், அவலத்திற்கும் ஆளாக்கினர். இதற்கு உண்மையான காரணம் பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழியாக இருந்ததுதான். அது அவர்கட்கு ஓர் நல்ல அடிப்படையாயிற்று. இதனைக் கண்ட வல்லவர்களின் உள்ளத்தில் அச்சமும், வஞ்சனையும் உருவாயின. எனவே 1959ல் அரசு ஆணையைக் கண்டு குறை கூறினர். 1959ல் அரசு ஆணையை எதிர்த்தவர்களின் ஆசைக்கு இணங்க மழலையர் பள்ளிகளில் 3ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் பயிற்று மொழி ஆனது.

### கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்று மொழி

1959 ஆம் ஆண்டு தமிழக அரசு ஆணையை நிறைவேற்ற அரசினரின் ஏட்டுக் கல்லூரிகள் இருப்பினும் அதில் கோவை அரசினர் கல்லூரி முன்னோடிக் கல்லூரியாகத் தேர்வு செய்யப்பட்டது. இந்தப் பாடத்திட்டத்தை அமல்படுத்த ஜி.ஆர். தாமோதரன் கல்லூரி தமிழ்க்குழு அமைக்கப்பட்டது. இக்குழு பரிந்துரைகளுக்கு மாநிலக் கல்வி அறிவுரைக் குழுவும் ஆதரவு அளித்தன் பொருட்டு, 1963-64இல் பயிற்றுமொழி ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாற்ற வேண்டும் என்று ஆணை வந்தது. மேலும் 1948லேயே

துணைவேந்தர்களின் கல்விக்குழு, பல்கலைக்கழக அளவில் பயிற்று மொழியாக ஆங்கிலத்தை மாற்றுவது வரும் 5 ஆண்டுகளுக்குள் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தாலும் உயர்கல்வி அமைப்புகளிடமிருந்து எதிர்ப்பு தொடக்கத்தில் இல்லை. கல்லூரிகளில் பாடநூல்கள் இல்லை என்ற நிலையைக் களைய 1959இல் கல்லூரித் தமிழ் கல்விக் குழு ஒன்று தோற்றுவிக்கப்பட்டு, பின் 1962ல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்(Tamilnadu Text Book Society) தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் புகுமுக வகுப்பு இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்பு வரை நூல்களை வெளியிட்டது. இவற்றுள் 416 நூல்கள் கலைப் பாடத்திற்கும் 418 நூல்கள் அறிவியல் பாடத்திற்கும் உரியவை. ஆனால் 1962ல் சட்டசபை விவாதத்தில் தமிழ் வழி பயில மாணவர்களிடையே ஆர்வமில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது. 1962இல் இடைநிலைக் கல்வியில் ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கில வழிக் கல்வியைத் தொடங்க 65 பள்ளிகளுக்கு இசைவளிக்கப்பட்டது. அதன் வெளிப்பாடு 1962க்குப் பின்னர் மிகுதியாயிற்று. 1965க்குப் பின்னர் அதன் உத்வேகம் மிகமிக அதிகமாயிற்று.

பொதுமக்களுக்கும், பள்ளி நிருவாகத்தினருக்கும் ஆங்கில வழிக் கல்வியில் இருந்த ஆர்வத்தைக் கருத்தில் கொண்டு ஆங்கில வழிப் பிரிவுகளை அதிகமாக்க அரசு முடிவு செய்தது. 1967ல் நடந்த மாநிலக் கல்வித்துறை மாநாட்டில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும், வட்ட தலைநகரங்களில் ஆங்கில வழிப் பள்ளிகளில் பிரிவுகளைக் கூடுதலாக்கவும் பரிந்துரைக்கப்பட்டது. ஆக அன்றைய அரசு அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளில் 100 ஆங்கில வழிப் பிரிவுகள் கூடுதலாகத் தொடங்குவதற்கு அனுமதியளித்தது.

### 10. ஆணையங்களும், பரிந்துரையும் (1964)

தமிழகத்தில் தமிழ்வழிக் கல்விக்கான ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் நடந்தேறிய காலகட்டத்தில் இந்திய அரசின் முடிவின்படி பேராசிரியர் டி.எஸ்.கோத்தாரியைத் தலைவராகக் கொண்டு ஒரு கல்வி ஆணையம் உருவாக்கப்பட்டது. இந்த ஆணையத்தில் இந்தியாவின் முக்கியக் கல்வியாளர்கள் உறுப்பினர்களாக இடம்பெற்றனர்.

தேசிய அளவிலான கல்விமுறையை உருவாக்குவது, அனைத்து நிலையிலும் கல்வியை வழங்குவதற்கான பொதுக்கொள்கையை உருவாக்குவது ஆகியவை இந்த ஆணையத்தின் நோக்கங்களாகும். பயிற்றுமொழியின் அவசியத்தையும் வட்டாரமொழிகளில் அறிவியல் நூல்களைத் தயாரிக்கும் முயற்சிகளைப் பற்றிய பரிந்துரைகளையும் இந்த ஆணையம் வழங்கியது.

“பள்ளி, கல்லூரி நிலைகளில் பயிற்றுமொழியாக இருப்பதற்குத் தாய்மொழியே மிகச் சிறந்தது. எனவே மேனிலைக்கல்வியில் வட்டார மொழிகளே பயிற்றுமொழிகளாகப் பின்பற்றப்பட வேண்டும். வட்டார மொழிகளில் இலக்கியங்களும், குறிப்பாக அறிவியல், தொழில்நுட்ப நூல்களைத் தயாரிக்க முனைப்பான செயலாக்கம் தேவைப்படுகிறது. இப்பணி பல்கலைக்கழக மானியக்குழு பரிந்துரை செய்யும் பல்கலைக்கழகங்களின் பொறுப்பில் விட வேண்டும். வட்டாரப் பயிற்றுமொழி வாயிலாகக் கற்றவர்களுக்கு உயர்சேவைகள் வேலை வாய்ப்புக்கள் தடைப்படாத வண்ணம், வட்டார மொழிகளையே அப்பகுதிகளின் நிர்வாக ஆட்சிமொழியாகக் கூடிய விரைவில் செயல்படுத்த வேண்டும்.” (Kothari Commission Report 1964:154).

வட்டாரமொழிகளின் வழி கற்பது அறிவு வளர்ச்சிக்குப் பயன்படும். மாணவர்களின் சுமையைக் குறைக்கும். வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்படவேண்டும் என்று இக்குழு பரிந்துரை செய்துள்ளது. கல்லூரிகளில் தமிழ் விவாதங்கள் தமிழ்வழிக் கல்லூரிக்கல்வி பயின்ற மாணவர்களுக்கு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டபோது அரசு கல்விக்கட்டணச் சலுகையையும் உதவித் தொகையையும் வழங்கியது. இருப்பினும் தமிழ்வழிக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. தமிழ்வழிக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை குறையத் தொடங்கியதைக் கண்டித்து கண்டனங்கள் எழுந்தன.

அன்றைய எதிர்க்கட்சித்தலைவர் இரா.நெடுஞ் செழியன் பயிற்று மொழித்திட்டத்தில் இருந்து அரசு பின்வாங்கக் கூடாது எனவும் 1959 ஆம் கல்வியாண்டில் அறிவித்தபடியே 1963-1964 கல்வி ஆண்டில் தமிழ்வழிக் கல்லூரிக் கல்வியை அனைத்துக் கல்லூரிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தீர்மானம் கொண்டு வந்தார். அவருடைய உரையின் சுருக்கம் வருமாறு:

“பி.ஏ., வகுப்பில் தமிழ் என்று வைத்துவிட்டு இடையிலே புகுமுக வகுப்பில் (P.U.C) தமிழைப் புகுத்தும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை. பத்தாவது வரையில் தமிழிலேயே படித்துவிட்டு மீண்டும் ஓராண்டுக் காலம் ஆங்கிலத்திலேயே படித்துவிட்டு மறுபடியும் தமிழிலேயே பி.ஏ.வகுப்பிலே படிக்க வேண்டும் என்று இருப்பது சரியான முறையல்ல. அரசாங்க வேலைவாய்ப்பிலே முதல் சலுகை கொடுக்கப்படும் என்ற வகையில் முயற்சிகளை அரசினர் மேற்கொண்டிருந்தால் இந்தச் சிக்கல் வர நியாயமே இல்லை. கல்லூரிகளில் (தனியார் உட்பட) கலையியல் பாடங்களைத் தமிழில் கொண்டுவர இயலாது. ஆங்கிலத்தில்

தான் வைத்துக் கொள்வோம் என்று கூறுகின்ற கல்லூரிகளுக்கு அரசாங்க மானியம் குறைக்கப்படும் என்ற கொள்கையை நிலைநாட்டுவதில் தவறு இல்லை. 1963-1964இல் கல்லூரிகளில் கலையியல் பாடங்களைத் தமிழில் போதிப்பது என்ற விதியை மாற்றாதீர்கள்.'' (ச.ம.ந.1963. 461-465).

பயிற்றுமொழித் திட்டம் காலதாமதப் படுத்தப்படுவதாக அன்றைய எதிர்க்கட்சி உறுப்பினர் மதியழகன், தமிழ்வழிக் கல்லூரிக்கல்விக்கான ஆணையைப் படிக்க ஆரம்பித்தார்.

அந்த ஆணையின் வரிகள் வருமாறு: "In order to commence the change over during the year 1963-64…"

ஆணையைப் படித்துக்காட்டிய பிறகு மதியழகனுக்குப் பதில் அளித்த கல்வி அமைச்சர் பக்தவத்சலம், "இப்போது வாசித்ததைக் கனம் அங்கத்தினர் எல்லாரும் கேட்டிருக்கிறார்கள். அது 1962-1963 இல் தொடங்குவது பற்றிய In order to commence என்று இருக்கிறது. Adopt என்று இல்லை. (திரு.கே.ஏ.மதியழகன் குறுக்கிட்டார். "இன்னொரு பேஜைப் படித்துக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. இதிலே 'கமென்ஸ்' என்றுதான் இருக்கிறது." (ச.ம.ந. 1961. 470), என்றார். பக்தவத்சலத்தின் இப்பேச்சு தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் பின்னடைவுக்குக் காரணமாக அன்றைய காங்கிரஸ் அரசு இருந்துள்ளது என்பதை ஐயத்திற்கிடமின்றித் தெளிவாக்குகிறது. இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், மதியழகன், கருணாநிதி ஆகியோர் வெளிநடப்பு செய்தனர்.

1963-1964ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டு இருந்த இத்திட்டம் தொய்வடைந்ததைத் தொடர்ந்து பயிற்றுமொழிக் கல்வி சாத்தியமில்லை என்ற எண்ணம் அரும்பத் தொடங்கியது.

### தமிழ்வழிக் கல்லூரிக் கல்வி மதிப்பீட்டுக் குழு

இந்நிலையில் 1965 ஆம் ஆண்டு தமிழ்ப்பயிற்று மொழித்திட்ட மதிப்பீட்டுக்குழு அமைக்கப்பட்டது. 1966 து.ப.அங்கமுத்து என்ற சட்டமன்ற உறுப்பினரின் கேள்விக்குப் பதிலளித்துப் பேசிய பக்தவத்சலம், "தமிழ்மொழி வாயிலாக இம்மாநிலத்திலுள்ள கல்லூரிகளில் பயிற்சிமொழி அளிப்பதில் ஏற்படும் கல்வி மேம்பாட்டை மதிப்பிடுவதற்காகவும் ஆங்கிலத்தின் மூலம் பயிற்சி அளிப்பதையும் தாய்மொழி வாயிலாகக் கல்வி அளிப்பதையும் ஒப்பிட்டு ஆராயவும் தமிழ்ப் பயிற்சிமொழித் திட்ட மதிப்பீட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது." (ச.ம.ந.05.08.1966:433) என்றார்.

அக்குழு விரைவில் அறிக்கை அளிக்க இருப்பதாகவும், தமிழ்ப் பயிற்றுமொழித்திட்டமே அரசின் இறுதி இலட்சியம் எனவும் எல்லாக் கலைக்கல்லூரிகளிலும் கலையியல் பாடங்கள் (P.U.C) 1966-1967 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்க ஆணையிட்டிருப்பதாகவும் தெரிவித்தார். 1959 இல் திட்டமிட்டிருந்தபடி புகுமுக வகுப்புப் படிப்புகளைத் தமிழ்வழியில் தொடங்க முடியாமல் அன்றைய காங்கிரஸ் அரசு தோல்வியடைந்து.

### இராஜாஜியின் திடீர் இந்தி எதிர்ப்பு

இக்காலகட்டத்தில் இராஜாஜி 1967 ஆம் ஆண்டில் சுதந்திரா கட்சியை ஆரம்பித்த நிலையில் ஏற்கனவே இந்தியை ஆதரித்து இந்தியை இந்தியாவிற்கே முன் மாதிரியாக பாடமொழியாகத் தமிழகத்தில் திணித்த இராஜாஜி "இந்தி ஒரு நாளும் கூடாது. ஆங்கிலமே எந்நாளும் வேண்டும்" என முழக்கம் எழுப்பினார். இந்தியை ஆட்சி மொழியாக்குவதைத் தொடர்ந்து அமல் செய்தால் இத்துனைக்கண்டம் பதினைந்து பகுதிகாளாகத் தனித்துப் பிரிந்துவிடும் என்றும் கூறினார். இச்சமயத்தில்தான் மூதறிஞர் இராஜாஜி தி.மு.கவுடன் தேர்தல் கூட்டு வைத்துக்கொண்டார். பயிற்று மொழித் திட்டத்தைத் தம் கொள்கையாகக் கொண்டு தமிழால் முடியும் என்ற நூலை 1942 இல் எழுதிய இராஜாஜி இக்காலகட்டத்தில் தமிழ்ப் பயிற்று மொழியாகும் திட்டத்தை எதிர்க்கத் தொடங்கினார். ஆங்கிலமே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்ற புதிய கருத்தையும் தெரிவித்தார்.

### கல்லூரிகளில் தமிழ் திட்டம் தோல்வி

1966 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அன்றைய அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அத்தீர்மானப் பட்டியலில் உள்ள எட்டாவது தீர்மானம் வருமாறு.

"இந்த அரசாங்கம் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாடமொழியாக ஆக்கவும் தமிழ் வகுப்புகளில் சேர மாணவர்களுக்கு தனிச்சலுகைகளும் வசதிகளும் அளிக்கவும், 1956 ஆம் ஆண்டில் ஆட்சிமொழிச் சட்டத்தைச் செம்மையாக்கவும், விரைவாக நடைமுறைக்குக் கொண்டுவரவும், தமிழை மாநிலத்தில் ஆட்சி மொழியாக்கவும் பரவலான முறையில் நடைமுறைப் படுத்தவும் தவறிவிட்டது." (ச.ம.ந.05.08.1966:579)

பக்தவத்சலம் அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் சட்டமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது. எனினும் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய பக்தவத்சலம், "முன்பு புகுமுக வகுப்பில் ஆங்கிலத்தில் படிப்பு,

அது இரண்டு கெட்டான் தனமாக இருந்தது. அங்குப் படித்துவிட்டு அதுவும் புரியவில்லை. பி.ஏ.வில் போய் கஷ்டப்படவேண்டும். சீராக நடத்த வேண்டுமென்று இந்த ஆண்டு இரண்டு பல்கலைக்கழகங்களுக்குச் சொன்னேன். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். சர்க்கார் கல்லூரிகளில் மட்டுமல்ல, மற்ற கல்லூரி புகுமுக வகுப்புகளில் குறைந்தபட்சம் 80,90 பேர்கள் தமிழில் இருக்க வேண்டுமென்று போட்டோம். போட்டது மட்டுமல்ல முன்பெல்லாம் 2, 3, 10, 5 என்று கணக்குக் கொடுப்பேன், கொடுத்திருக்கிறேன். இருக்கிற கணக்கைத்தான் கொடுக்கமுடியும். இப்போது 2700 மாணவர்கள், 600 மாணவிகள் இன்று புகுமுக வகுப்பில் தமிழைப் பாட மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றால் இந்த சர்க்கார் இதில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. இதில் சீரிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை யார் மறுக்கமுடியும்?''(ச.ம.ந. 05.08.1966:553) என்றவாறு குறிப்பிட்டுள்ளார். கல்லூரிகளில் தமிழ்வழித் திட்டத்தைச் செயல்படுத்தத் தவறிய அரசின்மீது கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் போது அதைப்பற்றி விவாதிக்காமல், காலம் கடந்து நடைமுறைப் படுத்தப்பட்ட புகுமுக வகுப்பு அறிமுகத்தைச் சாதனையாகக் காட்டிய அன்றைய கல்வி அமைச்சரின் பேச்சு தமிழ்வழிக் கல்லூரிக் கல்வித் திட்டம் தோல்வியடைந்ததை உறுதிப்படுத்துகிறது.

தமிழகத்தில் தமிழ்வழிக் கல்லூரிக் கல்வி நடைமுறைப்படுத்தப் படுவதற்காகத் தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டமும், அதனைத் தொடர்ந்து விரிவாக்கத் திட்டமும் தோல்வியடைந்தன என்பதை மேலே எடுத்துக்காட்டப்பட்ட சட்டமன்றப் பேச்சுகளின் வழியாகவும், நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வழியாகவும் அறியமுடிகிறது.

**தோல்விக்கான காரணங்கள்**

கல்லூரிகளில் தமிழ்வழிக் கல்வித்திட்டம் பற்றி ஆய்வு செய்த சிவனுபாண்டியன் தோல்விக்கான காரணங்களைப் பின்வருமாறு தொகுத்து, ''புகுமுக வகுப்பில் ஆங்கிலவழிக் கல்வியும் முதுகலை வகுப்பில் ஆங்கிலவழிக் கல்வியும் நடைமுறையில் இருந்ததால் இளங்கலை வகுப்பில் தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவில்லை. வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்ற உத்தரவாதம் அறிவிக்கப் படவில்லை. இராஜாஜி, பக்தவத்சலம் போன்ற தலைவர்களின் தமிழ்ப் பயிற்று மொழி பற்றிய முன்பின் முரணான கருத்துக்கள். தமிழ்ப் பயிற்றுமொழித் திட்டத்தை எதிர்த்த தமிழர்கள் வெளிமாநிலத்தவர் பிறமொழியாளர்கள் (அ) இருமொழியினரின் எதிர்ப்பு உணர்வு. கல்லூரிகளில் தமிழரல்லாதோரின் தலைமை/அரசின் வேகமின்மையும், பயிற்றுமொழித் திட்டத்தை விரிவுபடுத்தாமையும், நூல்கள் இன்மையும். ஆங்கிலப்புலமை இல்லாமல் போய்விடும் என்ற அச்சம் ஆசிரியர்களிடம் கல்வி கற்பிப்பதில் இருந்த குழப்பம், கல்வி அதிகாரிகள், இரண்டு துணைவேந்தர்களின் (சர் இராமசாமி, ஏ.லட்சுமணசாமி முதலியார்) எதிர்ப்பு, அரசின் மொழிக்கொள்கை (மத்தியத் தேர்வுகளில் இந்தி, ஆங்கிலம், மட்டுமே தேர்வுமொழி), இந்தியும், ஆங்கிலமும் மட்டுமே எதிர்கால வாழ்வுக்குப் பயன்படக் கூடியவை என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் செயல்பட்ட அரசின் ஆட்சிமொழிக் கொள்கை, தாய்மொழிப் பற்றின்மை, உலக மதிப்பு ஏற்படாது என்ற அவநம்பிக்கை, கல்வித்தரம் குறையும் என்ற அச்சம், விருப்பத் தேர்வாகத் தமிழ்வழிக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது'' என்று கூறியுள்ளார். தமிழ்வழிக் கல்லூரிக் கல்வி தோல்வியுற்றதற்குப் பல்வேறு காரணங்கள் இருப்பினும் அடிப்படையான காரணம் தமிழ்வழிப் படித்தோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்பது சட்டமாக்கப்படாததேயாகும். இது குறித்துப் பலமுறை சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியும் அவர்களின் கருத்தை அன்றைய காங்கிரஸ் அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ் ஆட்சி மொழி உட்பட பல முக்கியமான நிகழ்வுகள் நடந்த காலத்தில் தி.மு.க சட்டமன்றத்தில் இல்லை. அதே சமயம் மத்திய ஆட்சியிலிருந்த காங்கிரசோ இந்தியைத் திணிக்கும் விதத்தில் வரிசையாக ஆறு, ஏழு உத்தரவுகள் வெளியிட தமிழகம் கொந்தளித்தது. 1965 ஜனவரி 26 ஆம் நாளைத் துக்க நாளாக அறிஞர் அண்ணா அறிவித்த நிலையில் சென்னை மாநில முதல்வர் பக்தவத்சலம் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் 25.01.1965 அன்று தொடங்கி 15.03.1965 வரை 50 நாட்கள் தொடர்ந்தது. 18 நாட்கள் அரசு நிர்வாகமே செயலிழந்தது. இந்திய அரசியலைப்புச் சட்டம் 243 ஆம் விதியைத் திருத்தக் கோரி பலர் உயிர் துறந்தனர்.

இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி ''நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப்படும்'' என்று உறுதியளித்தார். 1968 ஆட்சி மொழித் திருத்தச் சட்டம் இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சி மொழியாக இருக்கும் என்று அறிவித்தது. இதுவே தமிழக மொழிப்போர் வரலாறு ஆகும். அந்த ஆண்டு சென்னை (தமிழ்நாடு) தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்று காங்கிரஸ் தோல்வியைத் தழுவியது.

●

கட்டுரையாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர்.
மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

கட்டுரை



2022ல்


# விளாதிமிர் இலியிச் லெனின்

## *பிறந்தநாள் செய்தி*

ந.முத்துமோகன்

*1870* ஏப்ரல் 22 ஆம் நாள் ரஷ்யாவில் விளாதிமிர் இலியிச் லெனின் பிறந்தார். 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதி ரஷ்ய நாட்டுக்கு மிகவும் கலவரமான காலக்கட்டம். கசாக்கிய விவசாயிகளின் கிளர்ச்சி. நாடு முழுவதும் நரோத்னிக்குகள் எனப்படும் வெகுமக்களியப் புரட்சியாளர்களின் சிறிய, பெரிய எழுச்சிகள். நரோத் என்ற சொல்லுக்கு மக்கள் என்று பொருள். உழைப்பாளி விவசாய மக்களை இச்சொல் குறிப்பாக அறிமுகப்படுத்தும். முடியாட்சியை வீழ்த்தி விவசாயிகள் நில உரிமைகளைப் பெறவேண்டும் என்று மக்கள் முனைந்து நின்ற காலம் அது.

1887ல் லெனினது அண்ணன் அலெக்சாண்டர் உல்யானவுக்கு 21 வயது. அன்றைய மிகச்சூடான ரஷ்ய அரசியலை அலெக்சாண்டர் காத்திரமாகப் பிரதிபலித்தார். பீட்டர்ஸ்பெர்க் அரசு பல்கலைக்கழகத்தில் உயிரியல் பயின்று கொண்டிருந்தவர். பல்கலைக் கல்வியோடு ‘நரோத்னய வோல்யா’ (மக்கள் விருப்பம்) என்ற தீவிரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டு வேலை செய்து கொண்டிருந்தார்.




*அண்ணன் உல்யானவும் அவரது தோழர்களும் ஆட்சியிலிருந்த ஸார் அலெக்சாண்டர் III என்பவரை கொலை செய்யத் திட்டமிட்டார்கள் என்று கைது செய்யப்பட்டார்கள். ஆறு ஆண்டுகளுக்கு முன்னதாகக் கொலை செய்யப்பட்ட அலெக்சாண்டர் II குறித்த குற்றத்திற்காகவும் லெனினது சகோதரர் கைது செய்யப்பட்டார். அவரும் அவரது நண்பர்கள் நால்வரும் தூக்கிலிடப்பட்டனர். அண்ணனை இழந்த லெனின் அதிர்ச்சியில் உறைந்து போனார். விளாதிமிர் லெனின் இளமையில் சந்தித்த மிகப்பெரும் நெருக்கடி இது. அண்ணனிலிருந்து நான்கு ஆண்டுகள் வயதில் குறைந்தவர் லெனின்.*

*அக்காலத்தில் ரஷ்யா முழுவதிலும் நிகழ்ந்து கொண்டிருந்த ஆயுதம் தாங்கிய எழுச்சிகள் குறித்த சிந்தனையில் ஆழ்ந்தார் லெனின். அண்ணனும் நண்பர்களும் இத்தனை தீவிரமான ஆயுத எழுச்சியில் ஈடுபட்டது குறித்து தொடர்ச்சியான சிந்தனையில் ஆழ்ந்தார் லெனின். அண்ணனைப் பற்றி மட்டுமல்ல, ரஷ்யா முழுவதிலும் பரவிக் கிடந்த மக்கள் போராட்டங்களை முன்னிறுத்தி லெனின் சிந்தித்தார். தொழிற்சாலைச் சுரண்டலுக்கு ஆட்படுத்தப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தைப் பற்றி லெனின் சிந்தித்தார். ரஷ்யாவின் நிலமற்ற ஏழை விவசாயிகள், அவர்களது விடுதலைக்கான வழி என எல்லாத் திசைகளை நோக்கியும் லெனினது சிந்தனை பரவி ஓடியது.*

*மார்க்சும் ஏங்கெல்சும் லெனினது எண்ண ஓட்டங்களில் நீங்காத இடம் பெற்றனர். ரோசா லக்சம்பர்கின் வெகுமக்கள் திரள், வெகுமக்கள் திரளின் போராட்டம், வெகுமக்கள் திரளின் வன்மையான போராட்டம் என்ற கருத்து அவருக்கு வழிகாட்டியது. தனிமனித பயங்கரவாதமல்ல, மக்கள் திரளின் ஒன்றுபட்ட போராட்டம் என்ற வியூகம் அவர் கண் முன் தோன்றியது. ரஷ்ய சமூக சனநாயகத் தொழிலாளர் (RSDLP) கட்சியை வலுப்படுத்துவது ஒன்றே சரியான வழி என்பதைப் புரிந்து கொண்டார். இதுவே லெனின் தேர்ந்தெடுத்த ரஷ்யப் புரட்சிக்கான பாதை. இந்தத் தருணத்தில் தான், தனிமனித பயங்கரவாதம் என்ற நிலையிலிருந்து லெனின் வெகுமக்கள் அரசியல் என்ற போராட்ட உத்தியை எட்டுகிறார்.*

*இப்போது புரிகிறது, தாரிக் அலியின் லெனின் பற்றிய நூலின் முதல் இயல் 'ஏன் பயங்கரவாதம்' என்ற தலைப்பின் கீழ் அமைந்துள்ளது. அது வெறுமனே லெனினது அண்ணன் உல்யானவ் பற்றியது மட்டுமல்ல. அது 19 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளைப் பற்றியது மட்டுமல்ல. அது இன்றைய 21 ஆம் நூற்றாண்டின் உலக அரசியலைப் பற்றியது. பெருந்தொற்றும், சோவியத் தலைமையை இழந்ததால் விளைந்த நெருக்கடிகளும் உலக மக்களைச் சிக்கல்களுக்குள் ஆழத்தும் போது நமக்குத் தேவையான அரசியலைச் சென்று சேர்வதற்கான சூசகமான வழிகளை தாரிக் அலி அவரது நூலின் முதல் இயலில் கட்டியெழுப்புகிறார். அன்று அண்ணனை இழந்த லெனினுக்குத் தோன்றிய மாற்று வழி, அது மக்கள் திரளின் போராட்ட வழி.*

*லெனின் அவரது 'ஏப்பிரல் மாதத்து ஆய்வு முடிவுகள்' என்ற சிந்தனைக் கொத்தில் "சோசலிசத்திற்கான போராட்டமும் சனநாயகத்திற்கான போராட்டமும்" என்ற ஒரு வியூகத்தை வகுத்தார். அதுவே ரஷ்யத் தொழிலாளிகளையும் விவசாயிகளையும் அக்டோபர் புரட்சியில் கொண்டு சேர்த்தது.*

*இன்று சதுக்கங்களில் திரளும் உழைப்பாளிகளும், "நாங்கள் 99 சதவீதம்" என குரல் கொடுக்கும் இளைஞர்களும், பெண்களின் பாதுகாப்புக்கும் சம உரிமைகளுக்கும் உறுதியளியுங்கள்! எனக் கூடி வரும் மகளிரும் ஒன்றுபடுங்கள் எனக் கூறும் போராட்டத் திரட்சி கூடி வருகிறது!*

*கறுப்பின மக்களின் உயிர்களும் அபூர்வமானவை தான் என்ற உணர்வு கூடி வருகிறது!*

*ஒற்றைப் பாலம் ஒன்றின் நடுவில் இன்றைய இந்திய ஸார் மன்னரை இருபுறமும் மறித்து மடக்கும் விவசாயிகளின் போர்க்குணத்தைக் கண்டு வருகிறோம்! கானகங்களை அழித்து கனிமங்களைக் கொள்ளையடிக்கும் ஏகாதிபத்திய கார்ப்பரேட்களை விரட்டியடிப்போம் என்ற குரல் எங்கும் ஒலித்து வருகிறது! உலகமெங்கும் பல நாடுகளில் நெருக்கடிகளின் வெடிப்புகளைக் கேட்க முடிகிறது. ஒன்றுபடுவோம்! போராடுவோம்! என்ற குரலின் எதிரொலிகளை எங்கும் கேட்க முடிகிறது!*

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர்,
மார்க்சிய ஆய்வாளர்.

# முதல் ராஜராஜ சோழனின் குலசாமி



அ.கா.பெருமாள்

குலசாமி என இன்று பாமர மக்களால் சாதாரணமாய் வழங்கும் சொல் தமிழ் லெக்சிகனில் இல்லை, தமிழக அரசு வெளியிட்ட மு சண்முகம்பிள்ளை தொகுத்த அகராதியில் இல்லை. கிரியா அகராதியில் கூட சேர்க்கப்படவில்லை, ஆனால் இந்த அகராதிகளில் குலதெய்வம், குலதேவதை என்னும் சொற்கள் உள்ளன . இந்தச் சொல்லுக்கு வழிவழியாக வழிபடப்படும் தெய்வம் என்றும் ஒரு குலத்துக்கே உரிய தெய்வம் என்றும் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது.

பழைய அகராதிகளில் மட்டுமல்ல வலைத்தளங்களில் கூட குலதெய்வம் என்ற சொல்லே கையாளப்படுகிறது. பெரும்பாலும் குலதெய்வம் என்பது வைதீகச் சார்புடன் குறிக்கப்படுகிறது என்பது முக்கியமான செய்தி. திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில் அவர் எங்கள் குலதெய்வம் என்று கூறுகிறார். சிவப்பிரகாசரின் ஒரு பிரபந்த நூலில், நினையாம் குலதேவதையாய் வழிபட்டு என வருகிறது.

இப்படியாக வருகின்ற பழைய நூல்களில் குலதெய்வம் என்பது வைதீகச் சார்புடன் மட்டுமல்ல நாட்டார் மரபு தொடர்பு இல்லாமலே கூறப்படுகின்றது. இப்போது குலசாமி என்ற சொல் பரவலாக அறியப்பட்ட ஒன்று எந்த அகராதியிலும் இல்லாத இந்தச் சொல் பாமர மக்களிடம் மட்டுமல்ல படித்தவர்களும் பயன்படுத்தப்படும் சொல்லாகிவிட்டது.

குலசாமி என்ற சொல் கிராமத்து மக்களால் உருவாக்கப்பட்டது என்றாலும் இதை வெகுஜன மக்களிடம் கொண்டு சென்றவர்கள் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்கள் என்பதையும் இங்கு சொல்ல வேண்டியிருக்கிறது. குலசாமி என்ற சொல் இன்றைய நிலையில் நாட்டார் வழக்காறு சார்ந்தே பேசப்படுகிறது.

குலசாமி வழிபாட்டைப் பரவலாக்கிய வர்களில் ஜோதிடருக்குப் பெரும் பங்கு

உண்டு என்றாலும் பழைய மதப்பிரச்சாரகர்களுக்கும், குறி சொல்லும் நடமாடும் சில சாதியினருக்கும் பங்குண்டு.

வில்லிசை நிகழ்ச்சியில் பாடப்படும் கதைப்பாடல்களில் குலசாமி பற்றிய குறிப்பு வருகிறது. ஒரு கதைப்பாடலின் கதாநாயகி குழந்தையில்லாமல் வருத்தப்படுவாள். அவளைக் கோவில் தோறும் சென்று வழிபடுமாறு பெரியோர்கள் அறிவுறுத்துவர். கணவனும் சொல்லுவான். அவளும் போவாள். பலன் கிடைக்காது.

தற்செயலாகக் குறி கூறும் குறத்தி ஒருத்தியைச் சந்திப்பாள். அவள் குலசாமியை வழிபடுமாறும் குலசாமியின் கோவில் பாழடைந்து கிடப்பதாகவும் பாடுவாள். குறத்தி சொன்னதை அப்படியே கேட்டு குலசாமி கோவிலுக்கு போவாள் கதாநாயகி. இதற்கு பலன் கிடைக்கும். இது போன்ற நிகழ்வுகள் சிதம்பர நாடார் கதை, பலவேசம் சேர்வைக்காரர் கதை, உடையார் கதை, தோட்டுக்காரி அம்மன் கதை, மாலையம்மன் கதை எனப் பத்துக்கு மேற்பட்ட கதைப்பாடல்களில் காணப்படுகின்றன.

நாட்டார் தெய்வங்களில் எல்லா தெய்வங்களும் குலசாமிகளாக இருப்பதில்லை உதாரணம் முத்தாரம்மன், சந்தன மாரியம்மன், சாஸ்தா எனச் சில தெய்வங்கள் பல குடும்பங்களுக்கும் ஜாதிகளுக்கும் குலசாமியாக இருக்கின்றன, ஆணோ பெண்ணோ கொலைப்பட்டு வழிபாடு பெறுவது என்பது ஒரு கருத்தாக்கம். அப்போது அத்தகைய தெய்வங்கள் ஏற்கனவே வழிபாடு பெறுகின்ற பிரபலமான தெய்வங்களுடன் இணைந்து வழிபாடு பெறுவதும் உண்டு. இத்தகைய தெய்வங்களை அடையாளம் காண்பதில் சில சிக்கல்களும் உண்டு.

இறந்து போனவர்கள் அல்லது கொலைபட்டவர்கள் எல்லோரும் தெய்வமாக மாறுவது என்பது பொது விதியல்ல; சாவு என்பது எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான விளைவை உண்டாக்காது; தமிழகத்தில் பழைய வரலாற்றில் நவகண்டம் கொடுத்தவர்களும் உடன்கட்டை ஏறியவர்களும் தெய்வமாக மாறுவது என்பது சாதாரணமாக இருந்தது. பின்னர் இவர்கள் குலசாமியாக மாறினார்கள்.

ஜப்பானில் தற்கொலையால் வரும் இறப்பு கொடூரமானதல்ல. ஆனால் நம்முடைய பண்பாட்டில் இது நேர்மாறானது. வரலாற்றுக் காலத்தில் இருந்தே கொலைப்பட்டு தெய்வம் ஆதல் என்பது சாதாரணமாக தொடர்கிறது. இது பற்றிய விரிவான ஆய்வை பேரா. ராமச்சந்திரன் போன்றவர்கள் செய்திருக்கின்றார்கள்.

நாட்டார் தெய்வங்களில் புராணம் அல்லது மரபு வழியே வழிபடப்படும் தெய்வங்களுக்கும் கொலைப்பட்டு தெய்வமாகும் சாமிகளுக்கும் உள்ள வித்தியாசங்கள் சிலவற்றைக் கூறலாம். அவை பற்றிய கதைப்பாடல்கள், விழாச் சடங்குகள் நடக்கும் முறை, விழாவின் கூறாக நடக்கும் கலைகளின் நிகழ்த்துமுறை, சாமியாடும் முறை உயிர்ப் பலி கொடுக்கும் முறை எனப் பல சொல்லிக்கொண்டு போகலாம். இவற்றில் குலசாமி வழிபாட்டு முறையும் அடங்கும்.

ஒருமுறை என் நண்பனின் குலசாமி கோவிலில் நடந்த படுக்கை, சிறப்பிற்கு (சிறிய விழா) அழைத்திருந்தான். கடற்கரையை ஒட்டிய இலந்தவிளை என்ற அந்த கிராமத்தில் நடந்த சிறப்பு விழாவில் நண்பனின் குடும்பத்தினர் மட்டுமே கலந்துகொண்டார்கள்.

அந்தக் குலசாமியை இசக்கி என்று அழைத்தார்கள். கோவில் அமைப்போ முக்கிய தெய்வத்தின் அலங்காரமோ பொதுவான இசக்கிக்குக் உரியதாகவே இருந்தது. இசக்கி வேறு வேறு சாதிகளுக்குரிய குலசாமியாகவும் இருந்தாள். அப்படியானால் இது பொதுவான இசக்கி என்று நினைத்தேன்

அன்று மாலையில் அந்த இசக்கிக்கு வழிபாடு ஆரம்பித்தபோது ஒரு வேறுபாடு இருப்பதை கவனித்தேன். படைப்புப் பொருள்களில் வித்தியாசமான உணவுப்பண்டங்கள் இருந்தன, பலி கொடுக்கப்படவேண்டிய ஆடு தலைகீழாகவும் கால் மேலாகவும் தொங்கவிடப்பட்டிருந்தது. பலி கொடுப்பவர் ஆட்டின் கழுத்தில் கூர்மையான கத்தியால் குத்தினார். ரத்தம் பலிபீடத்தில் விழும்படி செய்தார். இந்த ஒரு நிகழ்ச்சி எனக்கு அந்த இசக்கி என் நண்பரின் குடும்பத்தின் முன்னோடி என்பதை உணர வைத்தது. பின்னர் என் சந்தேகத்தை அவரது உறவினரிடம் பேசித் தீர்த்து கொண்டேன்.

புராணச் சார்பு அல்லது வேள்வியில் பிறந்து தெய்வமாக மாறிய நாட்டார் தெய்வத்திற்குப் பலி கொடுககும் போது ஆட்டின் தலையை மேலே இருக்கும்படியும் பலி பீடத்தை தொட்டு இருக்கும்படியும் கட்டியிருப்பார்கள். அப்போது ஆட்டின் கழுத்தைக் கீறி கால் வழியாக ரத்தம் விழும்படி செய்வார்கள். இந்தப் பொது முறையிலிருந்து குலசாமிக்குக் கொடுக்கப்படும் பலியின் முறை வேறுபட்டிருக்கும்

பொதுவாக குலசாமி சடங்குகளும் விழாக்களும் கோலாகலமாக கொண்டாடப்படுவதில்லை. வில்லுப்பாட்டு, கணியான் ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளை நடத்துவதும் இல்லை. பெரும்பாலும் சாமியாடி என்ற ஒருவர் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். மற்ற தெய்வங்களுக்கு சாமியாடும் முறையிலிருந்து இது வேறுபட்டும் இருக்கும்.

சங்க காலம் முதலே நாட்டார் தெய்வ மரபில் சைவத்தின் தாக்கம் அதிகம் உள்ளது. இது இன்று

வரை தொடர்கிறது, தென் தமிழ் மாவட்டங்களில் இது குறித்த செய்திகளை இன்றும் தேட முடியும். தென் தமிழ் நாட்டு தெய்வங்களின் பிறப்பு பற்றிய செய்திகள் வில்லிசைப் பாடல்களிலும் கணியான் ஆட்டப் பாடல்களிலும் உள்ளன. இவை முழுக்க சைவச்சார்பு உடையவை.

தேவர்களின் வேண்டுதலால் சிவனின் அருளாசியால் மஞ்சள் கிடாத்தில் கால சாமி பிறப்பதாக அச்சில் வராத காலசாமி கதை எடு கூறும். இங்கு காலசாமி சைவ அடையாளத்துடன் காட்டப்படுகிறார்.

பலவேசக்காரன் கதை என்னும் அச்சில் வராத ஏடு பலவேசக்காரன் என்ற தெய்வம் சிவனின் நெற்றியிலிருந்து பிறப்பதாகக் கூறும். பார்வதியின் அம்சமாக முத்தாரம்மன் பிறப்பதாக முத்தாரம்மன் வில்லுப்பாட்டு கூறும். அச்சில் வராத பிரம்மசக்தி அம்மன் கதை ஏட்டில் பார்வதி தனது அம்சமாகப் பிரம்மசக்தியை பிறப்பித்துள்ளதாக வருகிறது

முத்தாரம்மன் (பார்வதி) தாருகனை வதைத்த போது. பெருகும் ரத்தத்தைத் திரட்டினாள். அப்போது வண்டிமலையன், வண்டிமலைச்சி ஆகியோர் பிறந்தனர் என்று முத்தாரம்மன் கதை கூறும், முத்தாரம்மனை நீராட்ட முகர்ந்த நீரில் சந்தனம மாறன், முத்துத்தம்பி, முத்துக்குமரன் ஆகிய மூவரும் பிறந்தனர் என முத்தாரம்மன் கதை கூறும்.

அச்சில் வராத மன்னன் கருங்காலி கதை அல்லது வாதைகள் கதை பாதாள அறையில் இருபத்தி ஒரு வாதைகள் பிறந்ததாகக் கூறும். இவை சிவனின் அம்சமாக சுடலை மாடனின் காவலர்களாக உள்ளன. சிவனுக்கு கணங்கள் இருப்பது போன்று சுடலை மாடனுக்கு வாதைகள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்ட தெய்வங்கள் எல்லாமே இப்போதும் வழிபாடு பெற்றுக் கொண்டிருக்கின்றன. சிவன் அல்லது பார்வதியின் அம்சம் அல்லது இவர்களின் அருளால் பிறந்தவை என்பது பொதுப்பண்பு. இந்தப் பொதுவான விஷயங்கள் குலசாமியிலிருந்து இவற்றை வேறுபடுத்துகின்றன.

சிவ கணங்கள் பற்றிய சிவ புராண கதைகள் நாட்டார் தெய்வங்களின் சிலவற்றின் தோற்றத்திற்குக் காரணமாய் இருந்தன.

வைதிகத் தெய்வமாகவும் நாட்டார் தெய்வமாகவும் சில தெய்வங்கள் வழிபாடு பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை மிக அபூர்வமானவை. இப்படியான தெய்வங்கள் சேத்திரபாலனும் ஒன்று.

சேத்திரபாலன் என்ற தெய்வம் பிற்காலச் சோழப் பேரரசின் மிகச்சிறந்த மன்னனான முதல் ராஜராஜ சோழனின் குலதெய்வம் என்பதை ஒரு கல்வெட்டு கூறுவதாக குடவாயில் பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

கும்பகோணம் அருகே உள்ள திருவலஞ்சுழியில் ஏரண்ட முனிவர் வழிபட்ட தேவாரப்பாடல் பெற்ற தலம் ஒன்று இருக்கிறது. கபாலீஸ்வரர் கோவில் என்னும் பெயரில் உள்ள இங்கே விநாயகருக்கும் சேத்திரபாலருக்கும் தனித்தனி கோவில் உள்ளது. விநாயகர் பாற்கடலில் கிடைத்த நுரையால் உருவாக்கப்பட்டவர் என்பது ஐதீகம்.

இங்கு இருக்கும் சேத்திரபாலனுக்கு முதல் ராஜராஜனின் மனைவிகளுள் ஒருத்தி நிபந்தம் கொடுத்திருக்கிறாள். ஸ்ரீ ராஜராஜ தேவர் மகாதேவியார் தொடங்கியன. லோகமாதேவி உய்யக்கொண்டார் வளநாட்டு என்ற கல்வெட்டு இந்த நிபந்தத்தைக் கூறுவதாக குடவாயில் பாலசுப்பிரமணியம் குறிப்பிடுகிறார்

இந்த சேத்திரபாலனுக்கு முதல் ராஜராஜ சோழனும் அவனது சகோதரி குந்தவி தேவியும் நிபந்தம் கொடுத்திருக்கின்றனர். 1902 ல் எடுக்கப்பட்ட இந்த நிபந்த கல்வெட்டில் வேறு செய்திகள் இல்லை.. இந்த சேத்திரபாலன் யார்? இவர் வைதிக தெய்வமா? நாட்டார் தெய்வமா? தமிழகத்துக்கு பூர்விகமாக உள்ள தெய்வமா? வட நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டதா? இப்போது யார் இந்த தெய்வத்தை வழிபடுகின்றார்கள் அல்லது இந்த தெய்வம் பைரவர் வடிவம் பெற்றுள்ளதா ? இதுபோன்ற கேள்விகளுக்கு நாட்டார் வழக்காற்று மரபில் பதிலைத் தேட முடியும்.

சேத்திரபாலன் வைதீக கோவில்களிலும் நாட்டார் கோவில்களிலும் வழிபாடு பெறுகின்றவன். இந்தியா முழுக்க அறியப்பட்டவன். "இவனைக் குறித்த ஒரு பயமும் கூட உண்டு." தமிழகத்தில் நாட்டார் தெய்வ கோவில்களில் நாட்டார் அம்சத்துடன் வழிபாடு பெற்று வருகின்றான். வைதீகக் கோயில்களில் வேறு அடையாளங்களுடன் வழிபடப்படுகின்றான்

தட்சன், தாட்சாயணி சிவன் தொடர்பான சிவபுராணக் கதை பல வழிபடு தெய்வங்களாகும். நாட்டார் கலைகளுக்கும் சிற்பங்களுக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் அமைதியான காரணமாய் இருந்ததை இன்றும் தேடமுடியும்.

தட்சனை அழிக்க வந்த வீரபத்திரன் வைதீக மரபிலும் நாட்டார் மரபிலும் வழிபடு தெய்வமாக இருக்கின்றான். தட்சனுக்கும் வீரபத்ரனுக்கும் நடந்த போரில் வீரபத்திரன் வெற்றிபெற்றான். இதில் சேத்திரபாலனுக்கும் பங்கு உண்டு. இதனால் இவன் வழிபடு தெய்வமாக இருக்கின்றான் என்ற ஒரு கதையும் உண்டு.

தட்சன், வீரபத்திரன், போரின் உச்ச கட்டத்தில் தட்சனை கொல்லமுடியாமல் வீரபத்திரன் தவித்தபோது விஷ்ணு தன் கையில் இருந்த சக்கராயுதத்தைத் தட்சன் மேல் எறிந்தான். அது தட்சனின் கழுத்தை பதம் பார்த்து பின் திரும்பி வந்தது. ஆனால் விஷ்ணுவின் கையில் வராமல் சுற்றிக் கொண்டே நின்றது. அப்படி இருந்தால் உலகம் அழிந்துவிடும் என்று சிவன்



சேத்திரபாலனிடம் சக்கராயுதத்தை பிடித்து உலகை காப்பாற்றுமாறு பணித்தான். இப்படி ஒரு கதை சிவபுராணத்தில் பிற்சேர்க்கையாக உள்ளது.

ஜைன சமயத்தில் ஷேத்திர பாலன் தெய்வமாகவே போற்றப்படுகிறான். இங்கு இவனுக்கு மூன்று கண்கள் நிர்வாணியாக இருக்கிறான். வாகனம் நாய். பைரவர் கோலம் ராஜஸ்தான் மாவட்டத்தில் ஜைனர்களிடம் சேத்திரபால வழிபாடு உண்டு.

ஜைன சுவேதாம்பிரர் பிரிவினர் வழிபாட்டில் சேத்திரபாலன் பரிவார தெய்வமாகவும் இருக்கிறான் ஒன்று முதல் அறுபத்தி நான்கு யோகிகள் வழிநடத்த நாயுடன் வலம் வருகிறான்.

பிற தெய்வங்களிலிருந்து சேத்திரபாலனை வேறுபடுத்துவது இது தொடர்பான தொன்மங்கள் தாம். அர்த்தசாஸ்திரம் சேத்திரபாலனே பயிரிடப்பட்ட நிலங்களின் கண்காணிப்பாளர் என்று கூறும்.. இவன் விளைச்சல் நிலங்களின் பாதுகாவலன் என்னும் பொருளிலேயே தென்னிந்திய கிராமங்களில் வழிபடப்படுகிறான்.

பலராமன் நீர் மேலாண்மையுடன் தொடர்பு படுத்திப் பேசப்படுகிறான். இவனது கையிலுள்ள ஏர் ஆயுதம் நீரைக் கட்டுப்படுத்துவது. நீரை உற்பத்தி செய்வது என்ற தொன்மம் உண்டு. பலராமன் நீர் தொடர்பான கடவுள் என்பது போன்று சேத்திரபாலன் விளைச்சல் நிலத்தின் கடவுளாக கருதப்படுகிறான்.

நாட்டார் மரபில் பைரவ வழிபாடு எப்போது வந்தது என்பதைத் துல்லியமாக கூற முடியாது. ஆனால் தேவர் என்ற ஜாதி தொடர்பான தகவல்களையும் காளி கோவிலில் உள்ள பைரவர் முறையினையும் ஓரளவு தொகுத்து பார்க்கின்றபோது பைரவர் வழிபாடு நாட்டார் வழிபாட்டில் கலந்து விட்டது என்பதை ஊகிக்க முடியும்.

ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் காப்புப் பாடலில் பழைய பைரவரைப் பற்றி கூறுகிறார். பைரவர் உடையில்லாமல் இருப்பார். பாம்பைக் கங்கணமாக அணிந்திருப்பார். கையில் தமருகம், காலிலே கழல், கறுப்புச்சட்டை அணிந்து இருப்பார். என்ற வர்ணனையை சோழர் காலத்து நிகழ்வாகக் கொள்ளலாம்.

ஒட்டக்கூத்தர் குறிப்பிடும் சட்டைநாதர் என்ற வழக்கு இப்போது உள்ளது. ஸ்ரீவைகுண்டம் அருகே கொக்கராயக்குறிச்சி என்ற ஊரில் அஷ்ட பைரவருக்கு தனி சன்னதி உள்ளது. இங்கு இவர் சட்டைநாதர் எனப்படுகிறார். திருநெல்வேலி, தூத்துக்குடி பகுதியில் சட்டைநாதர் என்பது சிவனைக் குறிப்பிடும் சொல்லாக ஆள் பெயராக வழங்குகிறது.

நாட்டார் வழக்காற்றில் சட்டநாதன் சேத்திரபால னாகவும் கொள்ளப்படுகிறார். சேத்திரபால பைரவர் சட்டநாதன் என்னும் பெயர்களை வைதீகத்தில் இருந்து நாட்டார் மரபு பெற்றதாகவே கொள்ளலாம்.

தமிழகத்தில் வீர சைவர் அல்லது சைவ சமயம் சார்ந்த சிலர் பைரவ வழிபாட்டுடன் தொடர்புடையவர்களாய் இருந்தனர். இவர்களைப் பற்றிய விரிவான ஆய்வு நடந்ததாகத் தெரியவில்லை. தமிழகத்தின் முருகன் கோவிலுடன் தொடர்புடையவரால் அறியப்பட்ட பண்டாரம் என்னும் சாதியின் உட்பிரிவுகள் 19 க்கு மேல் உள்ளன. இவற்றில் பைரவி, வைராவி, யோகீஸ்வரர், ஆண்டிப்பண்டாரம் போன்ற ஜாதியினரைப் பற்றி நாட்டார் மரபில் நிறையக்கதைகள் உள்ளன. இவர்களில் கன்னடம், தெலுங்கு பேசுகின்றவர்களும் உண்டு.

தமிழக கோவில்களின் வாயில் காவலராக வைராவி சாதியினர் இருந்தனர். "இருந்து சாப்பிடுவான் பூசாரி, குத்துப்பட்டு சாப்பிடுவான் வைராவி" என்னும் பழமொழி தென் தமிழகத்தில் உண்டு.

பிற்காலச் சோழர் காலத்தின் ஆரம்பத்தில் வைதீக கோயில்களில் ஆகம முறை நெறிப்படுத்தப்பட்ட பின்பு வழிபாட்டில் மாற்றம் ஏற்பட்டது. நாயக்கர் ஆட்சியின்போது தமிழகத்தில் வீர சைவ மரபு செல்வாக்கடைய ஆரம்பித்தது. உதாரணமாக சங்கரன்கோவில் சங்கர நயினார் கோவிலில் வீரசைவர்கள் பெருமளவு செல்வாக்கு உடையவராய் இருந்தனர் என்பது ஒரு செய்தி.

தமிழக நாயக்கர் காலத்தில் தாய்த்தெய்வ வழிபாடு செல்வாக்குப் பெற்றது. இக்காலத்தில் தென் தமிழகத்தில் கிராமங்கள் தோறும் அம்மன் கோவில்கள் உருப்பெற்றன. இது தொடர்பான வழக்காற்றுக் கதைகள் புராணக் கலப்புடன் கூறப்பட்டன. இக்காலகட்டத்தில் சேத்திரபாலன் சில மாற்றங்களுடன் வைரவராக காளி அம்மன் கோவில்களில் வழிபாடு பெற்றார்.

சேத்திரபாலன் தொடர்பான நாட்டார் வழக்காற்றில் பெருமளவில் பேசப்படாத, அச்சில் வராத இரண்டு கதைப்பாடல்கள் உள்ளன. இந்தக் கதைப்பாடல்களில் உள்ள விஷயங்களின் அடிப்படையில் வைதீகம் நாட்டார் மரபின் பரிமாற்றத்தை ஊகிக்க முடிகிறது.

**பின் இணைப்பு**

பெருமாள்சாமி கதையும் சோமாண்டி கதையும்,

திருவரங்கம் கோவில் பூசகர்களுக்குள் ஏற்பட்ட மாறுபாட்டின் காரணமாக பூசகன் ஒருவன் ஊரைவிட்டு குடிபெயர்ந்து திருவனந்தபுரத்திற்குப் புறப்பட்டான். அவனுடன் ஸ்ரீரங்கநாதனும் சேர்த்துகொண்டார். உதவிக்கு சேத்திரபால பூதம், ஈஸ்வர கால பூதம் சங்கிலி பூதம் ஆகியனவும் இணைந்தன. எல்லோரும் தமிழகத்தில் பல இடங்களில் சுற்றி வந்து விட்டு திருக்குறுங்குடி நம்பி கோவிலுக்கு வந்தனர். ரங்கன், பூதங்களிடம் நீங்கள் இங்கே இருக்கலாம். நான் அனந்தபுரம் போகிறேன் என்றார்.

பூதங்களின் பிறவி பற்றிய வரலாறு, சோமாண்டி கதை என்னும் தலைப்பில் வந்திருக்கிறது. இதன் முழு வடிவம் அச்சில் வரவில்லை. மூன்று பூதங்களும் சிவனின் ஆணையால் வேள்வியில் பிறக்கின்றன. பிறந்ததும் சிவன் தங்களுக்குத் துணையாக அனந்தபுரம். செல்லப் பணிக்கிறான். பூதங்கள் செல்லுகின்றன. திருக்குறுங்குடியில் ரங்கனின் ஆணைப்படி தங்கி வழிபாடு பெறுகின்றன.

பூதங்களுக்கு பூசை செய்தவனை ஒரு சமயம் காட்டு விலங்கு கொன்றுவிடுகின்றது பூசை நின்றது. நாட்கள் சென்றன. சேத்ரபால பூதம் திருக்குறுங்குடி மணியக்காரன் கனவில் சென்றது. காஞ்சிபுரத்திலிருந்து சந்தன வாழ்நம்பி என்பவன் தன் மனைவியுடன் வருகிறான். அவன் எங்களுக்குப் பூசை செய்யட்டும் என்று சொன்னது.

மணியக்காரன் சந்தனவாழ் நம்பியைக் கண்டுபிடித்து பூசைக்கு ஏற்பாடு செய்கிறான். அவனுக்கு வேறு வசதிகளையும் செய்து கொடுக்கிறான். அந்த நம்பிக்கு குழந்தைப்பேறு இல்லை. அதனால் குறுங்குடி நம்பியை வேண்டித் தொழுகிறாள் சந்தனவாழ் நம்பியின் மனைவி சோமாண்டி.

நம்பியின் கனவில் திருமால் வந்தார். நம்பியிடம் "உனக்கு புத்திரப்பேறு உண்டு ஆனால் அந்த ஆண்மகன் ஏழு வயதில் இறந்துவிடுவான்" என்று சொன்னார். நம்பியின் மனைவி சோமாண்டி எப்படியாவது சரி மலடி என்ற பெயர் போகுமே என்று நினைத்தாள்.

அவளுக்கு குழந்தை பிறந்து வயது ஏழு ஆனது. ஒருநாள் சந்தன வாழ் நம்பி போகும்போது அந்த மகனும் உடன் சென்று விட்டான். பாதிவழியில்தான் நம்பி அதை கண்டுபிடித்தான். வேறு வழியில்லை மகனை அழைத்துச் சென்றான். கோவில் பிரகாரத்தில் மகனை எழுப்பி விட்டு மூன்று பூதங்களுக்கும் பூசை செய்தான். மகன் இருப்பதை மறந்து விட்டு கோவில் கதவை மூடிவிட்டு வீட்டுக்கு வந்து விட்டான்.

மகன் இல்லாமல் கணவன் திரும்புவதை கண்ட மனைவி குழந்தை எங்கே என்று கேட்டாள். அப்போதுதான் நம்பிக்கு மகனின் நினைவு வந்தது. மகனை அழைத்து வருகிறேன் என்று திரும்பிப் போனான். அதற்குள் பூதங்கள் கோவில் கதவை பூட்டி விட்டன. நம்பி பூதங்களை அழைத்தான். "மறையவனே இந்த கோவிலின் வழிமுறை உனக்குத் தெரியாதா ஒரு நாளில் ஒருமுறைதான் கதவு திறக்கப்படும். நாளை வா அழைத்துச் செல். அதுவரை அவன் பத்திரமாக இருப்பான்" என்று சொன்னது.

மறையவன் வீட்டுக்கு வந்தான். நடந்ததைச் சொன்னான். மனைவி மகன் இல்லாமல் நான் உயிர் தரியேன் எப்படியாவது போ அழைத்து வா என்று சொன்னாள். நம்பி மீண்டும் கோவிலுக்கு போனான். பூதங்களே கதவைத் திறந்து விடுங்கள். இல்லை என்றால் பரவாயில்லை, நிற்கின்றேன் மகனை தூக்கி போடுங்கள் பிடித்துக் கொள்கிறேன் என்றான்.

பூதங்களுக்கு கோபம் வந்தது. மேலை வாசலுக்கு வா மகனைப் பிடித்துக்கொள். துண்டை விரித்து காட்டு என்றது நம்பி. அப்படியே நின்றான். பூதங்கள் அவன் மகனின் கை, கால், தலை என ஒவ்வொன்றாகப் பிய்த்து வெளியே தூக்கிப் போட்டன

குழந்தையை பூதங்கள் கொன்றுவிட்டன என்றதும் நம்பிக்கு கோபம் வந்தது. அழுது அரற்றினான். அவன் மனைவி இந்த பூதங்களை பழிவாங்க வேண்டும் என்றாள். காளிப்புலையன் உதவியை நாடுவோம் என்றான் நம்பி. காளிப்புலையன் பூதங்களில் சங்கிலிபூதம், ஈஸ்வரகால பூதம் இரண்டையும் பிடித்து பெட்டியில் அடைத்தான். சேத்திரபால பூதம் தப்பிவிட்டது. காளி இரண்டு பூதங்களையும் கரையாளர் ஒருவரின் நிலத்தில் புதைத்தான். சேத்திரபால பூதம் கரையாளரின் உதவியால் பெட்டியை எடுத்து இரண்டு பூதங்களையும் விடுவித்தது.

பின்னர் மூன்று பூதங்களும் காளிப்புலையன், நம்பி, சோமாண்டி ஆகியோரைக் கொன்றன. அவர்களின் உடல்களை மண்ணில் புதைத்தன. அந்தப் பாவம் தீர பாபநாசம் அருவியிலே குளித்தன. அங்கே வானுலக மங்கையர் வந்தார்கள். மூன்று பூதங்களும் அவர்களை திருமணம் செய்து கொண்டன அதன் பிறகு பல்வேறு இடங்களுக்கு சென்று கோவில் கொண்டு வாழ்ந்தன. சேத்திரபால பூதம் மட்டும் காளி கோவிலில் குடிபுகுந்தது.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர், நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.

## உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகள்



புனித ஜாண்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புத்தக கண்காட்சி 07.04.2022 அன்று இனிதே துவங்கியது. கல்லூரியின் சேர்மன் அவர்கள் கண்காட்சியை திறந்து வைத்து முதல் விற்பனையைத் துவக்கிவைத்தார். கல்லூரியின் முதல்வர் மற்றும் நூலகர், ஆசிரியப் பெருமக்கள் கலந்துகொண்டு வாழ்த்தினர்.



அன்னை வேளாங்கன்னி கலை அறிவியல் கல்லூரியில் புத்தகக் கண்காட்சி 18.04.2022 அன்று இனிதே துவங்கியது. கல்லூரியின் தலைவர் அவர்கள் புத்தகக் கண்காட்சியை திறந்து வைத்து முதல் விற்பனையைத் துவக்கி வைத்தார், கல்லூரியின் முதல்வர் மற்றும் பங்குத்தந்தை, தமிழ்துறை தலைவர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் கல்லூரியின் நூலகர் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினர்



23.04.2022 அன்று குளச்சல் சுனாமி நினைவகத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியினை இரணியல் நீதிமன்ற நீதிபதி உயர்திரு ஜெய்சங்கர் அவர்கள் கண்காட்சியை திறந்துவைத்து மக்களிடத்தில் சட்ட விழிப்புணர்வு பற்றியும் வாசிப்பின் அவசியம் குறித்தும் சிறப்புரையாற்றினார். விழாவில் குளச்சல் பங்குத்தந்தை திரு.மரியசெல்வன் அவர்கள் மற்றும் எழுத்தாளர் குறும்பனை சி.பெர்லின் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினர்.



உலகப் புத்தக தினத்தின் தொடர்ச்சியாக ஸ்ரீ தேவிகுமாரி பெண்கள் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை இணைந்து நடத்தும் புத்தக கண்காட்சி 28.04.2022 இனிதே துவங்கியது கல்லூரியின் முதல்வர் கண்காட்சியை திறந்துவைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார். கல்லூரியின் துணை முதல்வர் தமிழ்த் துறை தலைவர் மற்றும் பேராசிரியப் பெருமக்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

கட்டுரை



# தாராள அனுமதி கொடுக்கும் பெற்றோர்கள்

மருத்துவர். ப. வைத்திலிங்கம்

நாம் இந்தக் கட்டுரையில் குழந்தைகள் எது கேட்டாலும் இல்லை என்று சொல்லாத, அல்லது சொல்லத் தயங்கும் பெற்றோர்களைப் பற்றி பார்ப்போம். குழந்தைகள் மீது மிக அதிகமாகச் செல்லம் கொடுத்து வளர்ப்பவர்கள் இவர்கள்.

உங்கள் வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தினர்களுடன் நீங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, உங்கள் குழந்தை ஓடி வந்து 'அப்பா! இப்போதே எனக்கு ஐஸ்கிரீம் வேண்டும்' என்று கெஞ்சிக் கேட்பதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் என்ன செய்வீர்கள்? சொன்னவுடன் வாங்கிக் கொடுத்து விடுவீர்களா? அல்லது இப்போது வேண்டாம், பிறகு வாங்கித் தருகிறேன் என்று காரணங்களைச் சொல்லி சமாதானப்படுத்துவீர்களா?

குழந்தை கேட்கும் போது எப்படி சும்மா இருக்க முடியும்? உடனடியாக வாங்கிக் கொடுத்து விடுவேன் என்று சொன்னால், நீங்கள் இந்த தாராள அனுமதி கொடுக்கும் பெற்றோர்கள் வகையில் வருகிறீர்கள். நீங்கள் உங்கள் குழந்தை மீது வைத்திருக்கும் பாசமும் அக்கறையும் மிக அதிகம். அதனால் உங்கள் குழந்தைக்கு எந்த எல்லையையும் நிர்ணயித்து அவர்கள் மனம் வருந்துவதை விரும்பாதவர்கள்.

குழந்தைகள் வளரும் விதம் பற்றி ஆராயும் மனவியலாளர்கள் இப்படிக் குழந்தைகளின் விருப்பங்களை எல்லாம் உடன் அனுமதித்து நிறைவேற்றிக் கொடுத்துக் குழந்தைகளை

வளர்க்கும் வகைக்கு PERMISSIVE PARENTING என்று சொல்லுகிறார்கள். இவ்வகையான பெற்றோர்களுக்கு குழந்தைகளிடம் இருந்து எதிர்பார்ப்புகள் எதுவும் இருக்காது. ஆனால் குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும்.

குழந்தைகள் நல்ல பழக்க வழக்கங்களையும், பண்புகளையும் கற்றுக் கொள்ள வேண்டும். நன்றாகப் படித்து வாழ்வில் உயர வேண்டும் என்றெல்லாம் அதிகம் ஆசைப்பட மாட்டார்கள். அப்படியே ஆசை இருந்தாலும் மிகவும் குறைவுதான். ஆனால் வீட்டில் குழந்தைகள் மகிழ்ச்சியாக வளருவதற்கான சூழல் எப்போதும் இருக்கும்படி பார்த்துக் கொள்வார்கள். எல்லா நேரங்களிலும் உணர்வு பூர்வமான பாசம், அன்பு, அக்கறை நிறைய உண்டு. பாசமழை பொழிந்து கொண்டே இருப்பார்கள். வீட்டில் உடன் கிடைக்கும். குழந்தைகள் கெஞ்சினால் கேட்கவே வேண்டாம், முதலில் குழந்தையைத் திருப்திப்படுத்திய பிறகுதான் அடுத்த வேலை பார்ப்பார்கள்.

குழந்தைகள் படிப்பிலோ அல்லது விளையாட்டிலோ சிறந்து விளங்கினால் பரிசு கொடுத்து பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்தலாம். ஆனால் இவர்கள் குழந்தைகள் எதுவும் சாதிக்காமல் இருந்தால் கூட அவ்வப்போது அவர்களைப் பரிசு மழையில் திக்குமுக்காட வைத்து விடுவார்கள். இம்மாதிரி சாதிக்காமல் கிடைக்கும் பரிசுகள் குழந்தைகளிடம் எந்த நல்ல பழக்கத்தையும் உண்டு பண்ணுவது இல்லை. மேலும் கொடுக்கும் பரிசுகளுக்கும் மரியாதை இல்லாமல் போய் விடுகிறது; கொடுத்த பரிசும் இரண்டாம் நாளே வீட்டின் ஒரு மூலையில் கேட்பாரற்றுக் கிடக்கும்.



நடக்கும் அனைத்து நிகழ்வுகளும் குழந்தைகள் விருப்பப்படிதான் நடந்தேறும். குழந்தைகள்தான் இவர்களின் உயிர், உலகம் எல்லாம்.

**இவ்வகைப் பெற்றோர்களின் குணாதிசயங்கள்**

இவர்கள் வீட்டில் குழந்தைகளுக்கு எந்தக் கட்டுப்பாடும் இருக்காது. அப்படியே இருந்தாலும் அனைத்து கட்டுப்பாடுகளும் பெயரளவில்தான் இருக்கும். கட்டுப்பாடுகளை மீறும் குழந்தைகளைக் கண்டிக்கவும் மாட்டார்கள். குழந்தை என்றால் அப்படித்தான் இருக்கும் என்று சொல்லி மேலும் கொஞ்சுவார்கள். குழந்தைகள் எது கேட்டாலும்

குழந்தைகளைத் தங்களுக்குச் சமமாக நண்பர்கள் போல் பாவித்து வளர்ப்பதால், குழந்தைகள் எல்லைகளை மீறும் போது இவர்களால் கண்டிக்க முடியாமல் போய் விடுகிறது. தோளுக்கு மேல் வளர்ந்த பிறகுதான் தோழன். அதாவது பதின் பருவத்தில் நுழையும் போதுதான் குழந்தைகளைத் தோழர்கள் போல் பாவித்து வளர்க்கலாம். ஆனால் இவ்வகைப் பெற்றோர்கள் சிறு பிராயத்திலிருந்தே குழந்தைகளை தோழனாகக் கருதுவதால் கண்டிக்க முடிவதில்லை. நாளடைவில் குழந்தைகளுக்குச் சிறு சிறு பரிசுகளும், உறுதிமொழிகளும் கொடுத்துதான்

அவர்களிடம் இருந்து எந்த வேலையையும் வாங்க முடியும். சில நேரங்களில் அவர்கள் பள்ளிக்கூடம் போவதற்கே தினம் பாக்கெட் மணியும், பலதரப்பட்ட உத்திரவாதங்களும் கொடுக்கும் நிலை வந்து விடுகிறது.

**குழந்தைகளுக்கு உண்டாகும் விளைவுகள்**

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்பார்கள். சிறுவயதிலேயே நல்ல பழக்க வழக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்க்காததால் இம்மாதிரி குழந்தைகளின் மேனரிசங்கள் அவ்வளவாகப் பாராட்டும்படி இருக்காது. உடை உடுத்துதல், சாப்பிடும் முறை, கழிப்பறைப் பழக்கங்கள், புதியவருடன் பழகும் முறை முதலியன அவ்வளவாக செம்மையுற்று இருக்காது.

அனுமதி தாராளம் என்பதால் நிறைய கவர்ச்சியான விளம்பரங்களால் ஈர்க்கப்படும் குழந்தை துரித உணவுகள், சர்க்கரைச் சத்து அதிகம் உள்ள உணவுகள் போன்ற 'ஜங்க் ஃபுட்,' வகைகளைச் சாப்பிட்டு உடல் பருமன் பிரச்சினையால் அவதிப்படலாம். மேலும் என்ன சாப்பிடுவது, எப்போது சாப்பிடுவது என்பதும் குழந்தையின் விருப்பப்படிதான் அமையும்.

வீட்டில் கண்டிப்பு இல்லை என்பதால் பள்ளியில் படிக்கும் காலங்களில் வீட்டுப்பாடங்கள் எல்லாம் முடிக்க மாட்டார்கள். படிப்பிலும் ஆர்வம் இல்லாததால் வகுப்பில் தர வரிசையிலும் பின் தங்குவார்கள். தற்போது எல்லாம் கைபேசி, தொலைக்காட்சி என இவர்களின் கவனங்கள் திரும்பி, திரை நேரம் அதிகமாகிக் கொண்டே இருப்பதால் குழந்தைகளின் உடல் பருமன் மேலும் அதிகரிக்கத்தான் வாய்ப்பாகி விடுகிறது. கண்டிப்பும் கட்டுப்பாடும் இல்லாமல் வளருவதால் விடலைப்பருவம் வந்தவுடன் மது, போதை போன்ற கெட்ட பழக்கங்கள் எட்டிப் பார்க்கத் தொடங்கி விடுகின்றன.

இம்மாதிரி வளரும் குழந்தைகளுக்கு எளிதில் மற்றவர்களுடன் பழகி அவர்களை நண்பர்கள் ஆக்கிக் கொள்ளும் திறமை அதிகம். தன்னம்பிக்கை அதிகம் என்பதால் நண்பர்கள் புடைசூழ தலைவன் ரேஞ்சுக்கு இருப்பார்கள். எப்போதும் நண்பர்களிடம் இருந்து வரும் பாராட்டுகள் மட்டுமே இவர்களுக்குப் பிடிக்கும். பாராட்டுகள் கிடைக்காமல் விமரிசனங்கள் கிடைக்கும் போது கோபத்தைக் கட்டுப்படுத்தத் தெரியாததால் சில நேரங்களில் ஆபத்தையும் வரவழைத்துக் கொள்வார்கள்.

**பெற்றோர்கள் எப்படி மாறலாம்?**

இந்த வளர்ப்பு முறையில் குழந்தை வளர்க்கும் பெற்றோர்கள் கட்டாயம் குழந்தைகளுக்கான தெளிவான வரைமுறைகளையும் எல்லைகளையும் வகுத்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளின் விருப்பத்திற்கு எல்லாம் உடனடி அனுமதியும், நிறைவேற்றித் தரும் ஆர்வமும் தேவையில்லை. பாச மிகுதியால் அவர்களை உடனடி சந்தோஷம் (*INSTANT GRATIFICATION*) என்ற போதைக்கு அடிமையாக்க வேண்டாம். குழந்தைகள் கேட்பதில் நியாயம் இருப்பின் செய்யுங்கள். இல்லை என்றால் கிடையாது என்று உறுதியாகச் சொல்லுங்கள். தேவைக்கும் ஆசைக்கும் உள்ள வித்தியாசத்தை அவர்களும் புரிந்து கொள்வார்கள்.

அடுத்து குழந்தைகளிடம் இருந்து எதையும் எதிர்பார்க்காமலேயே அவர்கள் போக்கில் விட்டு வளர்க்க முடியாது. நல்ல பழக்கங்கள், பண்புகள், நெறிமுறைகள் எல்லாம் தானாக வந்து விடாது. இன்றைய உலகில் சமூகமும், பள்ளிக்கூடமும் வெளி உலகமும் உங்கள் குழந்தைக்கு இதையெல்லாம் சொல்லித்தராது. குழந்தைகளிடம் ஒவ்வொரு செயலையும் பெற்றோர்கள்தான் விளக்கிச் சொல்ல வேண்டும். சொன்னதை செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்க வேண்டும். செய்யாவிட்டால் என்ன செய்வது என்று தீர்மானித்து செயல் படுத்த வேண்டும். குழந்தை என்றால் அப்படித்தான் இருக்கும் என்று சொல்லி பெற்றோர்களுக்கு இருக்கும் குழந்தை வளர்ப்பு என்னும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது.

பொதுவாகவே இரண்டு வயது ஆனவுடன் பெற்றோர்கள் பாசத்தை எல்லாம் மனதுக்குள்ளேயே வைத்துக்கொண்டு, வெளியில் அக்கறையும் கண்டிப்பும் தெரியும்படியாக வளர்க்க வேண்டும். குழந்தைகள் செய்யும் செயலுக்கு அவர்களைப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் அடுத்த முறை செய்யும் செயல் சிறப்பாக அமையும். ஒவ்வொரு முறையும் நல்ல செயல் செய்யும் போது எல்லாம் மனம் திறந்து பாராட்டுங்கள். அதுவே குழந்தைகளுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கும்.

பரிசுகளை எல்லாம் குழந்தைகள் அதிகம் எதிர்பார்க்க மாட்டார்கள். பரிசு கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் ஒரு அரை மணி நேரம் தொலைக்காட்சிக்கு அனுமதிக்கலாம். அதற்கு மேலும் தொலைக்காட்சி வேண்டும் என்று குழந்தை அடம் பிடித்தால் நீங்கள் மீண்டும் ஒரு நல்ல பழக்கத்திற்கு குழந்தையிடம் உத்திரவாதம் கேளுங்கள். இப்படித் திரை நேரத்தையே பரிசாக மாற்றுங்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் நீங்கள் கொடுக்கும் பரிசும் பாராட்டும் குழந்தையை மாற்ற வேண்டும். ஆரம்பத்தில் இது பெற்றோர்களுக்கு சிரமமாக இருந்தாலும் நாளடைவில் குழந்தைகள் நல்லவைகளை எளிதில் கற்றுக் கொள்வார்கள். தாங்கள் வளரும் வீட்டுச் சூழலையும் பாதுகாப்பாக உணருவார்கள். பெற்றோர்களுக்கும் அளவில்லா மகிழ்ச்சி உண்டாகும். ●

கட்டுரையாளர், குழந்தைகள் நல மருத்துவர்.



கட்டுரை

# பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் காவிதி

மு.கலையரசன்

சங்க இலக்கியத்தில் புலவர் பெயராகவும் கல்வெட்டுகளில் வணிக மற்றும் அரசியல்நிலையிலும் குறிக்கப்படும் காவிதி என்ற சொல்லானது பண்டைய தமிழ்ச் சமூக உருவாக்கத்தில் இடம் பெற்ற வரலாற்றை ஆராய்வதும், இக்காவிதி அரசு மற்றும் வணிக உருவாக்கத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக சமூக பொருளியல் மாற்றத்தில் காவிதியின் பங்களிப்பு மற்றும் அதன் வரலாற்று தொடர்ச்சி ஆகியவற்றை ஆராய்வதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**காவிதியும் பொருள்விளக்கமும்**

காவிதியின் சொற் பிறப்பை ஆராயும் போது இதற்கு தமிழ் வேர்ச் சொல்லில்லை என்பது விளங்கும். வேர்ச் சொல்லில்லை எனில் அது கடன்பெற்ற அல்லது திரிபுச் சொல்லாகத்தான் இருக்கமுடியும் என ஊகிக்கலாம். இச்சொல்லானது பிராகிருதத்தில் வழங்கும் 'கஹபதி-கபதி' என்பதன் தமிழ் வடிவம் என ஐ.மகாதேவன்(2020:112) குறிப்பிடுவார். இலக்கியங்களும் நிகண்டுகளும் காவிதி என்பதற்கு வேளாளர்க்குப் பாண்டியர் கொடுத்து வந்த பட்டம்(தொல்.அகத்.30), வைசிய மாந்தர் பெறும் பட்டவகை (எட்டி, காவிதிப்பட்டந் தாங்கிய மயிலியின் மாதர்-பெருங்.2,3,144), மந்திரி(திவாகரம்), கணக்கர் சாதி (சூடாமணி), வரிதண்டு அரசாங்க தலைவர் எனப்பொருள் தருவதாகப் பேரகராதி (ப.903) குறிப்பிடுகிறது. மேற்கண்ட பொருள்விளக்கங்கள் வேறுபட்ட வரலாற்றுச் சூழலைக் குறிக்கின்றன. தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரையில் (அகத்.30) குறிக்கப்பெறும் வேளாளர்க்குப் பாண்டியர் கொடுத்து வந்த பட்டம், வழங்கிவந்த காலமும் நோக்கமும் இன்னவென அறிவதர்க்கு சான்றில்லை. வரிதண்டு அரசாங்கத் தலைவர் என்பது இவ்வுரையைப் பின்பற்றியே பொருள்கொண்டுள்ளது. இத்தலைவர் முறையானது சுங்கமும் அதனை ஒழுங்குபடுத்தும் நிர்வாக முறையையும் குறிக்க வந்ததாக இருக்கலாம். எனினும் இக்காவிதியானது வேளாளார்க்கும் வணிகர்க்கும் வழங்கும் பட்டமாக கூறப்படுகிறது. இதற்கு எவ்வித அகச்சான்று மற்றும் புறச்சான்று குறிப்புகள் ஏதுமில்லை.

பிராகிருத்ததில் கஹபதி என்பதற்கு 'இல்லத்தலைவன்' என்று பொருள் கொள்ளப்படுகிறது. இக்கஹபதியை பற்றி கா.இந்திரபாலா கூறுகையில், "ஆந்திராவில் அமராவதி போன்ற இடங்களிலும் அப்பால் வடக்குப் பிரதேசங்களிலும் கஹபதி என்பது சொற் பிரயோகம் சில முக்கியமான சமூக-பொருளியல்சார் மாற்றங்களும் விவசாய முயற்சிகளும் நடைபெற்ற ஊர்களிலே நிலச்சொத்தும் செல்வமும் பெற்றோராய் எழுச்சிபெற்ற ஊர்த்தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டமாகக் காணப்படுகிறது. வட இந்தியாவில் புதிதாக நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டபோது கஹபதிகள் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவோராகவும் அவர்கள் உற்பத்தியை நகரங்களுக்கு வணிகர்களுக்குக் கொடுப்போராகவும் ஒரு முக்கிய தொழிலைப் புரிந்தனர் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆந்திராவில் கிடைக்கும் கல்வெட்டுக்களும் இத்தகைய ஒரு முக்கிய பங்கினைக் கஹபதிகள் விவசாயத்துறையில் ஏற்றிருந்தனர் என்று கொள்ள இடமளிக்கின்றன. இலங்கையிலேதான் எண்ணிக்கையில் மிகக் கூடுதலான குகைக் கல்வெட்டுகளில் கஹபதிகள் பௌத்த சங்கத்தாருக்கு தானம் வழங்குவோராக உள்ளனர்" *(2020:112).*

பண்டைத் தமிழகத்தைச் சுற்றி வடபுலத்திலும் இலங்கையிலும் காணப்படும் கஹபதி பிராகிருத சொல்லாகவே வழங்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழகத்திற்கு வரும்போது மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இதனை தொல்காப்பிய எச்சவியலில்,

வடச்சொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே (402).

இச்சூத்திரத்தில் வடச்சொற்களை தமிழ் சொற்களாக உருமாற்றுவது பற்றி கூறுகின்றது. இத்தனிச் சிறப்பான திரிச்சொல்லாக்கம் காவிதியையும் அதன் சமூக இருப்பையும் புரிந்து கொள்வதில் சிக்கலுக்குரிய இடமாக மாறியது என்றும் கூறலாம். இம்மொழிபெயர்ப்பு தமிழில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தின என்று திட்டமாகத் தெரியவில்லை. கஹபதி முறையை அப்படியே இங்கு பொருத்திப் பார்ப்பது தமிழ்நிலத்தில் ஏற்பட்ட மாற்றங்களை புரிந்து கொள்வதில் தவறும் வாய்ப்புகள் உள்ளன. எனினும் காவிதி அதன் தமிழாக்கமாக இருக்கும்போது அந்த குடும்பத்தலைவர் முறை ஏற்படுத்திய தாக்கம், சொல் அளவிலானதா அல்லது இங்கே நிலவிய சமூக உறவுகளுக்குள் உள்ளிழுக்கப்பட்டு தமிழகத்தின் தன்மைக்கு ஏற்ப மாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா என்பது இன்னும் விளங்கப் படாமலே உள்ளது. இந்நிலையில் நாம் சங்க இலக்கியத் தரவுகளை நோக்கவேண்டியுள்ளது.

**சங்க இலக்கியச் சான்றுகள்:**

சங்க இலக்கியத்தில் காவிதி பற்றிய குறிப்புகள் பாடல்களிலும் அடிக்குறிப்புகளிலும் இடம் பெறுகின்றன. மதுரைக்காஞ்சியிலும் நற்றிணை பாடல் அடிக்குறிப்புகளில் புலவர் பெயராகவும் காவிதி குறிக்கப்படுகிறது.

*மதுரைக்காஞ்சியில்,*

சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்
நறுஞ் சாந்து நீவிய கேழ் கிளர் அகலத்து
ஆவுதி மண்ணி, அவிர் துகில் முடித்து
மா விசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி
பழி ஒரீஇ உயர்ந்து, பாய் புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களும் (492-499).

இவ்வரிகளில் கொள்கையால் அறம் கூறும் அவையத்தில் யாகத்தால், வான்னுயர் பெரியோர் (அந்தணர்) நிலைக்கு வைத்துப் பாடப்படுகிறார். நன்மை தீமை கண்டு ஆராய்ந்து, அன்பும் அறனும் ஒழியாது காத்த செம்மை சான்ற இக்காவிதி மாக்கள் வேள்வி செய்யும் அந்தணரோடு ஒப்பிட்டுக்காட்ட வேண்டிய ஒரு சமூகத்தேவை உருவாகியுள்ளது. இச்சூழலைப்புரிந்து கொள்ள டி.டி.கோசாம்பியின் கீழ்கண்ட கருத்து நோக்கத்தக்கது. கங்கைச் சமவெளியில் உருவாகிய புதிய வர்க்கங்கள், சுதந்திரமாக வளர்ந்து கொண்டிருக்கும்போது அதில் ஒன்றாக கஹபதி என்ற குடும்பத்தலைவர் முறை உருவாகியிருந்தது பற்றி கூறுகையில்,

"கஹபதி (சமஸ்கிருதத்தில் கிருஹபதி) என்ற சொல்லின் பொருள் 'வீட்டு யசமானன்' இனி அச்சொல் ரோமானிய வழக்குப்படி ஒரு குடும்பத்தலைவருக்கு *(Pater Families)* நிகராயிற்று. ஆரம்பத்தில் அச்சொல் வேதம்-பிரமணங்களில் குறிப்பிட்டுள்ள ராஜிய யாகங்களைத் தவிர வேறு சாதாரண யாகங்களைச் செய்வோரையும் விருந்தளிப்போரையும் குறித்து வழங்கலாயிற்று. இப்போது அச்சொல் முதன் முறையாக எல்லா சாதிகளுக்கும் பொதுவான தந்தைவழி மரபு போற்றும் ஒரு பெரிய குடும்பத் தலைவனைக் குறிக்க ஆரம்பித்தது. முக்கியமாக, செல்வத்தை முன்னிட்டு அக்குடும்பத் தலைவர் சமூக மதிப்பைப் பெற்றார். அச்செல்வம் வாணிபம், தொழில் அல்லது விவசாயம் ஆகியவற்றின் மூலம் திரட்டப் பட்டிருக்கலாம்" *(2019-178,179).*

சங்கப் பாடல்களில் அந்தண வேள்வியிலிருந்து வேறுபட்டதாக களவேள்வி குறிப்பிடப்படுகிறது. இக்களவேள்வியானது பத்து பாடல்களிலும் பதிற்றுப்பத்து பதிகத்தில் இரண்டு இடங்களிலும் குறிக்கப்படுகிறது (பா. தொ.1981;179). பாண்டியக்குடிமரபில் வேள்வி செய்ததைப் பெருமைக்குரிய பட்டமாக சூட்டிய அதே நாட்டில்தான் வேளாளர்க்கு காவிதிப்பட்டம் வழங்கிய செய்தியும் இடம் பெறுகிறது. இக்காவிதி மாக்கள் என்பது ஓர் குழுமரபா அல்லது குழுத்தலைவனைக் குறிக்கும் உயர்நிலையா எனத் தெளிவாகப் பொருள் கொள்ளமுடியவில்லை. ஆனாலும் இக்காவிதி மாக்கள் வணிகரைக் குறிக்கவில்லை என்பது தெளிவு. மதுரைக்காஞ்சியில் வணிகர்களை குறிக்கும் 'தேஎத்து பண்ணிய பகர்நரும்'(506) , 'நாற்பெருங் குழுவும்'(510) ஆகிய வரிகள் இடம்பெறுகின்றன. எனினும் காவிதி அவையோடும் அரசரோடும் நெருங்கிய உறவுடையதாக காட்டப்படுகிறது.

நற்றிணை பாடலின் அடிக்குறிப்புகளில் மட்டுமே வரும் புலவர் பெயர்களில் காவிதியானது இடம் பெறுகிறது.

| | |
|---|---|
| ஆவூர் காவிதிகள் சாதேவனார் * | - நற்றி;264 |
| இளம் புல்லூர்க் காவிதி | - நற்றி;89 |
| கிடங்கில் காவிதிக் கீரங் கண்ணனார் | - நற்றி;218 |
| கிடங்கில் காவிதிக் கொற்றங்கொற்றனார் | - நற்றி;364 |

இப்புலவர்கள் பெயர்களில், ஊர்ப்பெயர், சிறப்புப்பெயர் மற்றும் இயற்பெயரோடு அமைவது என்பது ஓர் முறையியலை வெளிப்படுத்துகின்றன. சங்கப்பாடல் அடிக்குறிப்புகள் இம்முறைமையில் அமைவது பழந்தமிழ் மரபாக பின்பற்றப் பட்டுள்ளது. இரண்டு காவிதிப் புலவர்களின் ஊரான கிடங்கில் சங்கப்பாடல்களில் உயர்வாகப் பாடப்பட்டுள்ளது. சிறுபாணற்றுப்படையில்,

பழம்படு தேறல் பரதவர் மருப்பக்
கிளைமலர் படப்பைக் கிடங்கிற் கோமான் (159-160).

இதில் பரதவர் கள்ளுண்ணும் போது கிடங்கிற் 'கோ'மான் நல்லியக்கோடனை பாடுவாயாக எனப்பாடப்படுகிறது. நற்றிணையில்,

கிடங்கில் அன்ன இட்டுக் கரைக் கான் யாற்றுக் (65)

பொருள்வயிற் பிரிந்த தலைவன் பருவம் உணர்த்த கிடங்கிலின் இனிமைக்கு உவமையாக பாடப்படுகிறது.

இக்கிடங்கிலானது கொங்கப் பெருவழி எனப்படும் பாலக்காட்டுக் கணவாயிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் மூன்று பெருவழிகளில், மூன்றாவது பெருவழியில் அமைந்த ஊராகும்.

ஆவூரானது ஆ+ஊர் என ஆநிரையால் வந்த பெறாக இருந்திருக்கலாம். சங்க இலக்கியத்தில் பல ஆவூர்கள்

குறிக்கப்படுகின்றன. சோழ நாட்டில் தென்கரையில் அமைந்த ஊராகவும் கொள்ளப்படுகிறது (உ.வே.சா;2014). ஆவூரானது கிழார் பெயர் கொண்ட புலவர் மரபினருக்கு உரிய ஊராகவும் இருக்கிறது. கிழார்-காவிதி இருவருக்கும் உரியதாக ஆவூரானது குறிக்கப்படுவது கவனிக்கதக்கது. இளம்புல்லூரானது, இடைக்காலத்தில் மிழிலைக் கூற்றத்து நடுவிற்கூறான இளம்புல்லூர்க்குடி என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறது (ஔ.து.பிள்ளை;2010). தமிழக ஆந்திர எல்லையில் வாணியம்பாடி அருகே பாலாற்றங்கரையில் புல்லூர் என்ற ஊரானது இன்றும் வழங்கிவருகிறது.

கிடங்கில் காவிதி கீரங் கண்ணனார் மற்றும் ஆவூர் காவிதிகள் சாதேவனார் பாடிய பாடலில் கோவலர் பற்றி ஒரே சூழலில் அமையும் குறிப்புகள் காணப்படுகிறது நற்றிணையில்,

**வேய் பயில் இறும்பில் கோவலர் யாத்த**
**ஆபூண் தென் மணி இயம்பும்**
**ஈகாண் தோன்றும் எம் சிறு நல்ஊரே (264)**

இவ்வரி உடன்போக்கின் போது கோவலரைக் காட்டி எம்மூர் தோன்றுவதாக எனக்குறிக்கிறது.

**ஈர் மணி இன் குரல் ஊர் நனி இயம்ப**
**பல் ஆதந்த கல்லாக் கோவலர் (நற்றி;364)**

இப்பாடடில்களில் வரும் 'கல்லாக்கோவலர்' என்பது ஆநிரை மேய்ச்சலை தவிர வேறுத்தொழில் அறியா பண்பை காட்டுவதாக உள்ளது. காவிதிப்புலவர் பாடல்களிள் நான்கிலும் கற்பு வாழ்க்கைக்கு பொருள் தேடிச் செல்லும் பிரிவை உணர்த்திப் பாடுகின்றன.

சங்க காலத்திற்கு இணையாக தமிழகத்தின் வடபுலத்தில் ஆந்திர மற்றும் கர்நாடக பகுதிகளை உட்படுத்திய வட்டாரங்களில் கஹபதி என்ற குடும்ப முறை செழிப்புற்றிருந்தது. இப்பகுதியானது சாதவாகன மற்றும் மௌரிய அரசுகளுக்கு உட்பட்ட பகுதிகளாகும். சாதவாகனத்திற்கும் தமிழகத்திற்க்கும் இடையிலான வணிக உறவை உணர்த்தும் வகையில் பொ.ஆ.மு.2 முதல் பொ.ஆ.பி.1 ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் சாதவாகன காசுகள் கிடைக்கின்றன. இக்காசுகள் கரூர்,காஞ்சி மற்றும் கடலூர் போன்ற இடங்களில் கிடைக்கின்றன (tamilvu). பண்டைய சாதவாகன ஊரான பருகச்சத்திலிருந்தும் பைத்தான் என்ற தலைநகரிலிருந்தும் காஞ்சிபுரத்திற்கு தெற்கு நோக்கி பெருவழிகள் சென்றுள்ளன. "பருகச்சத்திலிருந்து நாசிக், பைதான், மாஸ்கி, பிரம்மகிரி, சந்திரவல்லி, சித்தல்துர்க்கம்,ஸ்ரீபர்வதம் (திருப்பதி) வழியாகக் காஞ்சிபுரம் வரை அந்தப் பெருவழி சென்றிருக்கிறது. அவ்வூர்களில் சிலவற்றில் உரோமானியக் காசுகள், உரோமானியப் பொருட்கள் முதலியன கிடைத்துள்ளன. அவற்றின் மூலம் யவன வணிகர்கள் அப்பெரு வழிகளில் பயணம் செய்தனர் என அறிய முடிகின்றது" (ர.பூங்குன்றன்;2016-109).

அக்காசில் ஒருபக்கம் தமிழும் மறுபக்கம் பிராகிருதமும் பொறிக்கப்பட்டுள்ளது. வணிக பரிமாற்றங்களோடு மொழி பரிமாற்றமும் நடந்துள்ளதை இதுகாட்டுகிறது. இம்மொழிப் பரிவர்த்தனையில் கஹபதி காவிதியாக மாறியிக்க வேண்டும். இக்காசுகள் குறிப்பிடும் காலகட்டத்திலேயே தமிழகத்தில் காவிதி கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன என்பது மேலும் கவனிக்கதக்கது

வடபுலத்திலிருந்து வணிகப் பரிமாற்ற உறவுகளின் மூலம் கஹபதி என்ற சொல்லானது காவிதி என்று தமிழாக்கம் பெற்று வழங்கியுள்ளது என்பதை இதன்மூலம் அறிலாம். காவிதி பழந்தமிழகத்தின் சமூக உறவுகளில் ஏற்படுத்திய மாற்றங்களைக் கல்வெட்டுக்கள் உணர்த்துவதாக உள்ளன.

**காவிதியும் நிகமும்:**

தமிழகத்திலுள்ள இரண்டு தமிழ்-பிராமி(தமிழி) கல்வெட்டுகள் காவிதி என்று குறிப்பிடுகின்றன. ஒன்று மதுரைக்கு அருகிலுள்ள மாங்குளத்திலும் மற்றொன்று சிவங்கங்கையிலுள்ள திருமலை என்ற இடத்திலும் அமைந்துள்ளது. மாங்குளம் கல்வெட்டில் (பொ.ஆ.மு.2) 'வெள்ளறை நிகமது காவிதிஇய்'(ஸ்ரீதர்.தி.ஸ்ரீ;2006-க.1.4) என்று குறிக்கபெறுகிறது. இக்கல்வெட்டானது மதுரை தேசிய நெடுஞ்சாலை -38ற்கு அருகேயும் வைகைக்கரையை ஒட்டிச்செல்லும் வணிகப்பெருவழியில் அமைந்துள்ளது. இவ்வெள்ளறை என்ற ஊரானது இன்றைய வெள்ளரிப்பட்டியாக இருக்கலாம் என்று தொல்லியலாளர் கூறுகின்றனர். இவ்வூரும் தேசிய நெடுஞ்சாலை -38யில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. வெள்ளறை என்பதை 'வேள்அறை' என ர.பூங்குன்றன்(2016) பொருள்கொள்வார்.

மாங்குளத்தில் 'வெள்ளறை நிகமது' (ஸ்ரீதர்.தி.ஸ்ரீ; 2006-க; 1-.4,6) என்று இரண்டு கல்வெட்டுகள் குறிக்கின்றன. இதில் நிகம என்ற சொல்லானது பாறைக் கல்வெட்டுகளில் மூன்று இடங்களில் குறிப்பிடுகிறது (சுப்பராயலு.எ:2020-183). இந்நிகம என்பது பிராகிருத மொழிக்குரிய சொல்லாகும். இதன் தமிழாக்கமாக நியம (நற்றி;45,அகம்;83) என்று சங்கப்பாடல்கள் குறிக்கின்றன. இந்நிகமம் முழுத்தமிழாக்கமாக அமையாமல் பிராகிருதிலிருந்து 'க'ரமானது 'ய'கர எழுத்துக்குறியாக மாற்றப்பட்டு, தமிழ் பிராகிருதக்கூட்டு சொல்லாக வழங்கப்பட்டுள்ளது. நிகம என்பது வணிகக்குழு என்று பொருள் கொள்வர். அக்சான்றில் நியம என்பது வர்த்தக மையம்(கடைத்தெரு) என்று குறிப்பிடுகிறது. சங்கப்பாடல் அடிக்குறிப்புகளில் புலவர் பெயராக 'நொச்சி நியமக் கிழார்' (நற்றி-17,208,209; அகம்-52;புறம்-293) என்று குறிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. அந்நியமம்,

நெடுங் கொடி நுடங்கு நியம மூதூர் (நற்றி;45-4,அகம்;83-7).

இவ்வரி இரண்டு பாடல்களில் ஒரு எழுத்துக்கூட பிறழாமல் அப்படியே பாடபட்டுள்ளது. நற்றிணையில்,

**இவளே, கானல் நண்ணிய காமர் சிறுகுடி**
**நீல் நிறப் பெருங் கடல் கலங்க உள்புக்கு**
**மீன் எறி பரதவர் மகளே நீயே**
**நெடுங் கொடி நுடங்கும் நியம மூதூர்க்**
**கடுந் தேர்ச் செல்வன் காதல் மகனே**
**நிணச் சுற அறுத்த உணக்கல் வேண்டி**
**இனப்புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ**
**புலவு நாறுதும்; செல நின்றீமோ!**
**பெரு நீர் விளையுள் எம் சிறு யல் வாழ்க்கை**
**நும்மொடு புரைவதோ அன்றே**
**எம்மனோரில் செம்மலும் உடைத்தே! (45)**

இப்பாடலின் வழி இரண்டு விடயங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன. ஒன்று மருதத்திணையில்

அரிவனர் (நற்றி;400), கைவினை மாக்கள் (குறுந்;309), தண்பனைக்கிழவன் (புறம்;342), என்று வேலைப்பிரிவினையும் வர்க்கப்பாகுபாடும் ஏற்பட்டது போலவே, நெய்தல் நிலத்தில். மீன் பிடித்து அதைக் காய வைத்து பாதுகாக்கும் வர்க்கமும் உழைப்பிலிருந்து விடுபட்ட செல்வம் உடைய செம்மல்களும் ஒரே குடியில் உருவாகியிருந்தனர். மற்றொன்று மூதூராகிய குடிநிலையிலிருந்த பழமையான ஊரானது வணிக உறவின் காரணமாக கொடிகள் பறக்கும் வர்த்தக மையமாக மாறியது. அவ்ஊர் செல்வந்தனின் மகன் பரதவர் குடியின் செல்வந்தரொடு வணிகத்தால் ஏற்படுத்தி கொண்ட புதியச் செல்வந்த உறவும் உருவாகி வளர்ந்துள்ளது என அறியலாம். காவிதி மாக்களின் மீது சந்தன மணம் வீசும் தூய்மை குறிப்பும் மீன் நாற்றம் எடுக்கும் தூய்மையற்றவர் குறிப்பும் அவர்கள் தோற்றம் பற்றிய சிந்தனை உருவாகிருந்தது தெளிவாகிறது.

நெல்உபரி உற்பத்தி மற்றும் வாணிப உறவின் காரணமாக ஒரு புதிய செல்வந்தர் வர்க்கம் உருவாகியிருந்தது. அவை மருதத்தில், பெரு நெற் பல் கூட்டு எருமை உழவ (நற்றி;60-2), நெடுங்கதிர் நெல்லின் வல்லம் கிழவோன் (அகம்;356-13), நெல்விளை கழனி அம்பர் கிழவோன் (புறம்;385) என்று கூறப்படுவதன் மூலம் நெல்உபரிக்கு உரிமையுடைய கிழான் உருவாகிறான். நெய்தலில் உமணரும் பண்டமாற்று வாணிகம் செய்த நிகமத்தூர் தலைவர்களும் (நொச்சி நியமக் கிழார்) உருவாகியிருந்தனர். சான்றாக, அகநானூற்றில் 80 வது பாடலில் யானையை கள்ளுக்காக விற்க நியமத்தில் உள்ள ஒரு இல்லத்தில் கட்டி வைத்தனர். வெள்ளறையும் ஒரு வாணிக மையமாகவும் காவிதி அதன் தலைவராகவும் இருந்திருக்க வேண்டும். சான்றாக, கொடுமணலின் பானைப்பொறிப்புகளில் நிகம (KDL-12) எனக் குறிக்கப்படுகிறது. இது ஒரு வணிக மையமாகவும் தொழிற்கூடமாகவும் அறியப்படுகிறது (ராஜன்.கா; 2018-322).

நிகம காவிதி வேறொரு சமூக அரசியல் மாற்றத்திற்கு உட்பட்ட நிலையில் திருமலைக் கல்வெட்டில் (பொ.ஆ.பி.1) காணப்படுகிறது. இது தேசிய நெடுஞ் சாலை -36 என்ற வணிகப்பெருவழியில் அமைந்த ஊராகும். இக்கல்வெட்டில் 'எருகாட்டு ஊரு காவிதி கோன்' (க.15.2) என வெட்டப்பட்டுள்ளது. எருக்காட்டூருக்குரிய காவிதி கோன் என்பதில் 'கோன்' ஆனது பாறைக்கல்வெட்டுகளில் 52 இடங்களிலும் 'கோ' என்று 61 கல்வெட்டுகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன (சுப்பராயலு.எ;2020-182). மேலும் கொடுமணலின் பானைப்பொறிப்புக்களில் கோன் (KDL-94), கோவே (KDL-96) என்று குறிக்கப்பெறுகிறது (ராஜன்.கா;2018-328). பண்டைக்காலத்தில் கோன்,கோ என்பது பெருவழக்காக பயன்படுத்தபட்டுள்ளது. இக்கோன் பற்றி கா.சிவதம்பி புறநானூறு 156;13-21 வது பாடலை சுட்டிக்காட்டி "தலைவர் அல்லது உயர்நிலைக்குறிக்கும் இறை என்பதிலிருந்து கோ என்ற சொல் உருவாகி இருக்க வேண்டும்" (2017-65). இத்தலைவர் நிலை அடுத்தெழுந்த அரசியல் தலைவர்களையும் குறிக்க வந்துள்ளது. பெரும்பாலும் சேரரையும்(புகளூர் கல்வெட்டு), ஒரு முறை சோழனையும்(கிள்ளி) குறிக்கவந்ததுள்ளது. கோன் தொடக்கத்தில் மலைக்காடுகளை ஒட்டிய முல்லைநில ஊர்களுக்கு தலைவனாக இருந்து அவை வணிக வழியாக மாறிய போது அந்த ஊர்தலைவர்கள் காவிதி கோன் என்று வழங்கியிருக்க வேண்டும் என்பது தெளிவாகும். பின்னர் இது பேரரசுருவாக்க கட்டத்தை அடையும் போது அவர்களை குறிக்கவும் வழங்கிருக்கலாம்.

**காவிதியும் கிழாரும்:**

சங்கப் பாடல்களில் மொழிப்பெயர் தேயத்தைக் குறிக்கும் பாடலான அகநானூறு 295-இல் 'நிலம் நீர் அற்று நீள்சுனை வறப்ப' (1) என்ற வரியில் புல்லி பகுதியில் குடிநீர் சுனையானது வற்றிப் போன நிலையில் அவ்வழியே செல்லும் உமணர் கிணறு தோண்டினர்.

கடல்நீர் உப்பின் கணம்சால் உமணர்
உயங்கு பகடு உயிர்ப்ப அசைஇ முரம்பு இடித்து
அகல் இடம் குழித்த அகல்வாய்க் கூவல்
ஆறுசெல் வம்பலர் அசைவிட ஊறும் (அகம்:295,9–12)

உமணர் அவ்வழியே செல்லும் புதிய வழிப்போக்கர் தாகம் தீர்க்க இக்கிணற்றை வெட்டினர். நீர்த்தேவையின் காரணமாக ஒரு நிலையான கிணற்றைக் குன்றுகளுக்கிடையே அமைக்கும் நுட்பத்தை உமணர்கள் அறிந்திருக்க வேண்டும். சங்கப்பாடல்களில் அதிகம் காணப்படும் இந்த உமணரைப் போன்றே ஒரு கிழாரும் சுனை வெட்டிய செய்தி அம்மன் கோயில்பட்டி கல்வெட்டில் கூறப்படுகிறது.

பரம்பன் கோகூர் கிழார் மகன் வியக்கன்
கோபன் கணத்தேவன் தொட சுனை (க.28.1)

இச்சுனையும் குடிநீர் தேவையை நிறைவு செய்ய வெட்டப்பட்டு இன்றும் வற்றாது பயன்பாட்டில் உள்ளது. இச்சுனையானது தாரமங்கல பெருவழிப்பாதையின் அருகில் அமைந்துள்ளது.

'கரும்பனூரன் காதல் மகனே' எனப் புறம் 381 இல் வரும் பாடல்வரியில் கரும்பனூர் கிழான் வேங்கட்டிற்கு உரிய ஊர்தலைவனாக குறிக்கப்படுகிறான். காதல் மகன் என்ற உவமை நிகம மூதூர் செல்வன் மகனை (நற்றி;45) குறிக்க வந்துள்ளதும் நோக்கத்தக்கது. புறநானூற்றில்,

நெல்விளை கழனி அம்பர் கிழவோன்
நல் அருவந்தை, வாழியர்– புல்லிய
வேங்கட விறல் வரைப் பட்ட (385).

காவிரியால் நெல்விளையும் வயல்களைக் கொண்ட அம்பர் கிழான் அருவந்தையின் புகழ் புல்லியைத் தலைவனாக கொண்ட வேங்கடத்தின் உயர்ந்த மலையில் பொழியும் மலைக்கு ஒப்பிட்டு வாழ்த்தி கல்லாடனார் பாடுகிறார். அவரே புறநானூற்றில்,

முகடுற உயர்ந்த நெல்லின் மகிழ் வரப்
பகடு தரு பெரு வளம் வாழ்த்தி பெற்ற
திருந்தா மூரி பரந்து படக் கெண்டி
அரியல் ஆர்கையர் உண்டு இனிது உவக்கும்
வேங்கட வரைப்பின் வட புலம் பசித்தென
ஈங்கு வந்து இறுத்த என் இரும் பேர் ஒக்கல்
தீர்கை விடுக்கும் பண்பு இல முதுகுடி (391)

மேடாக உயர்ந்தி குவிக்கப்பட்ட நெல்லின் பெருவளம் வாழ்த்தி அதைப் பெற்று கறியோடு கள்ளுண்போரொடு உண்டு இருந்த வேங்கடத்தின் வடப்புலம் முழுவதும் வறுமை ஏற்பட்டதால் தம் கூட்டத்தாரோடு பொறையாற்று கிழானையும் அம்பர் கிழானையும் கல்லாடனார் நாடிச்சென்று பாடுகிறார். புல்லி என்ற தலைவன் வேங்கடத்திற்க்கு உட்பட்ட ஊரின்

கிழானாக இருந்திருக்க வேண்டும். களவர் கோமான் மழ புலம் வணங்கிய (அகம்;61), இளையர் கோமான் (அகம்;83), என்று புல்லி மழவர்,கோவலர்,இளையர் மற்றும் வடுகர் எனப் பலக்குடிகளை உட்படுத்திய ஒரு ஊரின் தலைவனாக விளங்குகிறான். சான்றாக,

ஔவை.துரைசாமிப்பிள்ளை பதிப்பில் மேற்கண்ட பாடலில்

**முதுகுடி நனைந்தலை மூதூர்** (9-10) என்றுள்ளது (2010;695). மற்றப் பதிப்பாசிரியர்களின் பதிப்பில் இவ்வரி இடம் பெறவில்லை. இவ்வரில் மூத்தகுடிகள் பல இருந்த மூதூருக்கு உரிய கிழானாக பொறையாற்று கிழான் குறிக்கப்படுகிறான். புல்லியின் வேங்கடம் பற்றாக்குறையாக விளங்கியதை

**முதைச்சுவல் மூழ்கிய கான்சுடு குரூஉப்புகை** (அகம்;359) என்னும் பாடல் வரி மூலம் புல்லி, காட்டெரிப்பு வேளாண்மை முறையைப் பின்பற்றிய முல்லைப்பகுதிக்குரிய கிழான் என்று அறியலாம். இவன் நெல்லிற்காக யானையின் தந்தங்களையும் கள்ளையும் கொண்டு பண்டமாற்றாகப் பெறுகிறான். இவ்வழியே உபரிநெல்லை விற்பனை பண்டமாக கொண்டு செல்லும் வணிகவழியாக இருந்துள்ளதை இதன் மூலம் தெளிவாகிறது.

அன்ன யானை வெண் கோடு கொண்டு
நறவு நொடை நெல்லின் நாள் மகிழ் அயரும்
(அகம்-61)

காவிரிக் கரையில், நிலத்தோடு நீரையும் இணைத்து உருவாக்கிய புதிய(யானர்) மருதநிலத்தினில் (ஞா. ஸ்டீபன்;2017) தோன்றிய உற்பத்தியின் விளைவாக உபரிநெல் உருவாகியது. இந்த மிகை உற்பத்தியின் விளைவாக வேலைப் பிரிவினையும் தொழிற்குடிகளும் உருவாகின. மிகை உற்பத்தியை நெற் பல் கூட்டு (அகம்;61)களில் பாதுகாதுத்தும் கட்டுபடுத்தியும் வந்த கிழானை வேலி ஆயிரம் விளைக நின் வயலே (புறம்-391) எனப்புகழப்பட்டு வந்துள்ளான். இக்கிழான் குடிநிலையிலிருந்து மருத நில உருவாக்கத்தில் எழுந்த புதிய செல்வந்த வர்க்கமாக உருமாறுகிறான். இம்மாற்றம் நிலத்தில் தனிச்சொத்துடைமையை உருவாக்கி தந்தைவழி பிறப்புரிமையை (கிழார் மகன்) அதிகாரமாக கொண்ட அமைப்பாக மாறுகிறது.

இம்மாற்றங்களைப் பற்றி கா.சிவதம்பி கூறுகையில்,

“தமிழ்நாட்டில் சமூகத் தளபிரி நிலைகளுக்கிடையே அக்காலப்பகுதியில் வர்க்க அடிப்படையிலான ஒன்றுக்கொன்று விரோதமான மோதல்கள் நிகழவில்லை. வணிக வர்க்கம் நிகம என்ற அமைப்பாகவும் நிலச்சொத்துக்களை உடையவர்கள் கிழான்களாகவும் நிறுவனமாகி இருந்தன” (2017-79).

காவிதிக்கும் கிழாருக்கும் உள்ள உறவுப்பற்றி ர.செண்பகலட்சுமி கூறுகையில்,

“கிழவன் (கிழான்) என்ற தமிழ்ச்சொல்லை க்ருஹபதி (கஹபதி) என்பதற்கு இணையான சொல்லாக கருதுவது பொருத்தமாகலாம்” (2020;215). இக்கருத்தினையே கா.இந்திரபாலா, ர.பூங்குன்றன் ஆகியோர் கொண்டுள்ளனர்.

வடப்புலத்தின் மொழி பெயர் தேய வணிக உறவால் ஏற்பட்ட கஹபதி என்ற குடும்பத்தலைவர் முறை வணிகர்களுக்கிடையே வழங்கப்பட்டு பின்னர் அது வணிக வழிகள் கொண்ட ஊர் தலைவர்களைக் குறிக்கும் பெயராக மாறியிருக்க வேண்டும். அவை வணிக மையத்தின் தலைவனாகிய நியம காவிதி நிலையிலிருந்து ஏற்பட்ட செல்வாக்கால் வணிக வழி ஊர் தலைவர்களை குறிக்கும் காவிதி கோன் அடைப்பெற்று வழங்கியிருக்க வேண்டும். இம்மாற்றங்கள் தொடர்ச்சியான வணிக ஊடாட்டத்தின் மூலமாக, இங்கு ஏற்கனவே இருந்த ஊர்தலைவர் முறையாகிய கிழானின் மாற்றீடாக காவிதி உருவாகியிருக்க வேண்டும்.

ஒழுங்கமைக்கபட்ட அரசு உருவாகியிருந்த சூழலில், வணிகத்தில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் உற்பத்தி முறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக காவிதியும் கிழானும் புதிய செல்வந்தர் வர்க்கமாக உருவாகி இருந்தனர். அரசைத் தீர்மானிக்கும் அல்லது வழிநடத்தும் நிலச்சொத்துடைமை மற்றும் வணிகத்தை இவர்களே கட்டுப்படுத்தி நிர்வகித்து வந்தனர். அதை சமயத்தில் அரசைப் பாதுகாக்கும் அரணாகவும் வளர்ச்சி பெற்றிருந்தனர். கா.சிவதம்பி அரசுருவாக்கம் பற்றி கூறுகையில்,

“வடபுலத்தோடு தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட தொடர்பு அதன் காரணமாக வடபுலம், அதனுடைய அரசர்கள் மற்றும் மரபுகள் குறித்து ஏற்பட்ட அறிவு வளர்ச்சி (புறம்;31,52;பதி;68), யவனர்களோடு ஏற்பட்ட நட்பு இவையனைத்தும் அரசினுடைய துணை அமைப்புகள் உருவாவதற்குக் காரணமாக இருத்தல் வேண்டும்” (2017-79).

மேற்கண்ட வணிக உறவுகளின் மூலம் ஏற்பட்ட சமூகப்பொருளியல் மாற்றங்களின் விளைவாக அரசு நிர்வாகத்திற்கான துணைமை அமைப்புகளாக காவிதியும் கிழானும் வளர்ச்சி அடைந்து இருக்கவேண்டும். ஆனால் சங்கப்பாடல்களில் துணைமை அமைப்புகள் பற்றிய குறிப்புகள் ஏதும் காணப்படவில்லை.

தொல்காப்பிய அகத்திணையியல் (30) நச்சினார்கினியர் உரையில்,

முதுகுடித் தலைவர்கள் மகட்கொடை மறுத்த நிலையிலிருந்து வேந்தருக்கு மகட்கொடை அளிக்கும் உயர்வகுப்பினரை வரிசைப்படுத்தும் நிலைக்கு மாறிய காலக்கட்டத்தை இது விளக்குகிறது. தமிழில் உபரிஉற்பத்தியில் ஏற்பட்ட நிலச்சொத்துடைமை மற்றும் வணிகம் காரணமாக புதிதாக உருவான உடைமைப் பெயர்களாக இவைத் தோன்றுகின்றன. இவ்வாறு உருவான உடைமைப் பெயர்களை விரிவாக ஆராய்ச்சி செய்யவேண்டியுள்ளது நன்னூல்(158) மயிலைநாதர் உரையிலுள்ள காவிதிப்புரவு என்பது அரசர் காவிதிக்கு கொடுத்த ஊர் எனக்குறிக்கப்படுகிறது. காவிதி வணிக மற்றும் குடியுறவு சங்கிலியிலிருந்து அறுபட்டு அரசின் நிர்வாகத்திற்கு உரிய அமைப்பில் சிறந்தவர்க்கு வழங்கும் பட்டமாக மாறியிருக்க வேண்டும். இவை காவிதி உருவாக்கத்திலிருந்து அதன் மாற்றங்களுக்கு இடையேயான வரலாற்று தொடர்ச்சியை குறித்து நிற்கிறது.

வணிக மற்றும் உபரி உற்பத்தியின் விளைவாக தோன்றிய ஒரு பெயர் சொல்லானது தொழிற்பெயராக வழங்கி தனிச்சொத்துடைக்குரிய அரசியல் பெயராக பரிணமித்த வரலாற்றை காவிதி என்று வழங்கியதை இதன் மூலம் அறியலாம். இம்மாற்றங்களைக் காலநிரல் அடிப்படையில் ஆராய்ச்சி செய்யும் போது காவிதியின்

வரலாற்றுப் பரிணாமத்தை ஆழமாக புரிந்து கொள்ள முடியும்.

**அடிக்குறிப்பு:**

★ ஆவூர் காவிதிகள் சாதேவனார்க்கு பாடவேறுபாடாக, ஆவூர் காவிதி கண்மா தேவனார் என்றும் காவிதி மாச்சாத்தனார் என்றும் ஏடுதோறும் வேறுபட்டுக் காணப்படுகிறது. மதுரைத் தமிழ்ச் சங்க ஏடும் அச்சுப் பிரதியும் ஆவூர் காவிதிகள் சாதேவனார் என்று குறிக்கின்றன(ஔ.து.பி:2010-291). ஓலையை பிரதி எடுக்கும் போது ஆமூர்க் கௌதமன் சாதேவனார் என்பதை ஆவூர் காவிதிகள் சாதேவனார் என்று படி எடுத்திருக்க வேண்டும். ஆமூர்க் கௌதமன் கௌத கோத்திரத்தை சார்ந்த ஸஹதேவன் என்ற சேர நாட்டு அந்தணர் ஆவார் (நாரா.அ.1915).

**துணை நூற் பட்டியல்:**


1. அகநானூறு மூலமும் உரையும்,2017:சென்னை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
2. இந்திரபாலா.கா.2020:முன்வரலாற்றுக் காலத் தமிழ்நாடு (தொகுப்பும் பதிப்பும்).சென்னை,குமரன் புத்தக நிலையம்.
3. கோசாம்பி.டி.டி.2019:பண்டைய இந்தியா பண்பாடும் நாகரிகமும், சென்னை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
4. சாமிநாதையர்.உ.வே.2019: பத்துப்பாட்டு மூலமும் உரையும், சென்னை,உ.வே.சா.நூல் நிலையம்.
5. சாமிநாதையர்.உ.வே.2017:குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை,உ.வே.சா.நூல் நிலையம்.
6. சாமிநாதையர்.உ.வே.2014:புறநானூறு மூலமும் உரையும், சென்னை,உ.வே.சா.நூல் நிலையம்.
7. சிவதம்பி.கா.2017: பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்று புரிதலை நோக்கி, சென்னை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
8. சுந்தமூர்த்தி.கு.1986:தொல்காப்பியம்-பொருளதிகாரம், சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
9. தமிழ் பேரகராதி.1982: தொகுதி-2,சென்னை பல்கலைக்கழகம்.
10. துரைசாமிப்பிள்ளை.சு.2010:புறநானூறு மூலமும் உரையும்,சென்னை, பூம்புகார் பதிப்பகம்.
11. நற்றிணை மூலமும் உரையும்.2017: சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
12. நாராயணசாமி.அ,1915: நற்றிணை உரை, சென்னை பட்டனம், சைவவித்தியா நூபாலனயந்திரசாலை
13. பாலசுந்தரம்.ச,2012.தொல்காப்பியம்-2: சேலம், பெரியார் பல்கலைக்கழக வெளியீடு.
14. புறநானூறு மூலமும் உரையும்.2017: சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
15. பூங்குன்றன்.ர.2016: தொல்குடி வேளிர் வேந்தர்- பண்டைத்தமிழ்த்தில் அரசு உருவாக்கம் பற்றிய ஆய்வு. சென்னை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
16. மர்ரே.எஸ்.ராஜன்1981, அகநானூறு:சென்னை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
17. மர்ரே.எஸ்.ராஜன்,1981.பாட்டும் தொகையும்:சென்னை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பா.தொ)
18. மர்ரே.எஸ்.ராஜன்,1981.புறநானூறு:சென்னை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
19. மாதையன்.பெ.2007;சங்க இலக்கியச் சொல்லடைவு,தஞ் சாவூர்,தமிழ்ப் பல்கலைக்கழக வெளீயிடு.
20. ராஜன்.கா.2018;தொன்மைத் தமிழ் எழுத்தியல்- குறியீடுகளிலிருந்து தமிழ்-பிராமியை(தமிழி) நோக்கி பயணம்,சென்னை,உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
21. ஸ்டீபன்.ஞா.2017;இலக்கிய இனவரைவியல், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
22. ஸ்ரீதர்.தி.ஸ்ரீ.2006; தமிழ்-பிராமிக் கல்வெட்டுக்கள், சென்னை, தமிழ்நாடு தொல்லியல் துறை.(கல்வெட்டு எண்:க.1-2)
23. https://www.tamilvu.org,Tamil vertival academy நூலகம்(சாதவாகனக் காசுகள்)



●


முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை,
மனோன்மணியம் சுந்தனார் பல்கலைக்கழகம்.




உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு 29.04.2022 அன்று திருச்சியில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் திருச்சி கிளை மற்றும் ஜமால் முகம்மது கல்லூரி இனைந்து புத்தகக் கண்காட்சியை நடத்தியது. கண்காட்சியினை கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் அ.கா.காஜா நஜீமுத்தீன் திறந்து வைத்தார். உடன் பொருளாளர் ஹாஜி.எம். ஜே.ஜமால் முகம்மது சாஹிபு முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், கௌரவ இயக்குநர். முனைவர். கா.ந.அப்துல் காதிர் நிஹால், நூலகத் துறை தலைவர். முனைவர். அ.அபுல்ஹன்சன், திருச்சி கிளை மேலாளர் க.சுரேஷ், ஊழியர்கள் ந.பூமிநாதன், கி.கோபால கிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 130




₹ 275




₹ 180




₹ 460

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color



கட்டுரை

# ஜப்பானிய செவ்வியல் இலக்கியங்கள்: காலமும் கருத்தும்

முனைவர் இரா. ரம்யா

ஜப்பானிய இலக்கியங்கள் முற்காலத்திலிருந்தே எழுதப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் முறையாகத் தொகுக்கப்பட்டு முழு வடிவம் கொண்ட தொகுப்புகளாக உருவம்பெற்றன. கொஜிகி *(Kojiki)*, நிஹொன்ஷொகி *(Nihonshouki)*, ஃபுதொகி *(Fudoki)*, கைஃபுஸொ *(Kaifuso)*, மன்யோசு *(Manyoshu)* ஆகியன ஜப்பானிய தொடக்ககால இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இவை முறையே கி.பி. 712, 720, 733, 751, 759 ஆகிய ஆண்டுகளில் முழுவடிவம் பெற்றன. இவ்விலக்கியங்களுக்குப் பின்னர் தோன்றிய இலக்கியங்களைச் செவ்விலக்கியங்களாகக் கருதுகின்றனர். அவற்றுள் சிலவற்றை அறிமுகம் செய்து அவற்றின் தோற்றப் பின்னணியையும் உள்ளடக்கத்தையும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

ஜப்பானிய இலக்கிய வரலாற்றில் கி.பி. 794 முதல் கி.பி. 1186 வரையிலான காலம் செவ்வியல் காலமாக அறியப்படுகிறது. இதனை ஹேயியன் *(Heian)* காலம் அல்லது செவ்வியல் காலம் என்பார் ஜப்பானிய இலக்கிய வரலாற்றாசிரியர் டபிள்யூ. ஜி. அஸ்டன். ஹேயியன் என்பது தற்போதுள்ள கியோடோ பகுதியைக் குறிப்பது. இக்காலத்தில் கியோடோவைத் தலைமையிடமாகக் கொண்டு நிலையான அரசு அமைந்தது. ஜப்பானிய இலக்கிய வரலாற்றாசிரியரான ஷுஇச்சி காதொ *(Shuichi Kato)* செவ்வியல் காலத்தின்

தொடக்கமான ஒன்பதாம் நூற்றாண்டை முதல் திருப்புமுனை *(The First Turning Point)* என்றே கூறுகிறார். ஏனெனில் இக்காலத்தில் அரசியல், பொருளாதாரம், சமூகம், மொழி, அழகியல் என அனைத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டதோடு அதனை மேம்படுத்தும் முயற்சிகளும் நடைபெற்றன *(2002: 92)*. குறிப்பாக, இலக்கியங்களைப் பொறுத்தவரையில் கவிதை வகைகளோடு புனைகதைகள், நாவல், நாட்குறிப்புகள், கட்டுரைத் தொகுதி, கதைத் தொகுதி எனப் பல இயற்றப்பட்டன. இவ்வகையான வளர்ச்சிக்கு பௌத்த சமயமும் பங்காற்றியுள்ளது. மேற்குறிப்பிட்ட இலக்கிய வகைகள் நவீன வகைப்பாடுகளே என்றாலும் புரிதலுக்காக இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

**பௌத்தம்**

பௌத்த சமயத்தைத் தவிர்த்துவிட்டு ஜப்பானிய இலக்கிய வரலாற்றை அணுக இயலாது என்பதனால், இச்சமயத்தின் பங்களிப்பினை ஷுஇச்சி காதொ பின்வருமாறு குறிப்பிடுகிறார். ஹேயியன் காலத்தில் பௌத்த சமய வளர்ச்சி உச்சத்தில் இருந்தது. இக்காலத்தில் பௌத்தில் இரு பிரிவுகள் காணப்பட்டன. சாய்சோ *(Saicho)* துறவியால் தென்டாய் *(Tendai)* பிரிவும், ஷின்கொன் *(Shingon)* துறவியால் கூகாய் *(Kukai)* பிரிவும் தோற்றுவிக்கப்பட்டன. இவர்கள் இருவரும் சீனா சென்று கல்வி கற்றுத் திரும்பியவர்கள் ஆவர். அரசவையில் முக்கியப் பங்குவகித்த இவ்விரு பிரிவு பௌத்தர்களும் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதில் கவனம் செலுத்தினர். எடுத்துக்காட்டாக கூகாய் பிரிவு பௌத்தர்கள் மேற்கொண்ட பணிகளைக் குறிப்பிடலாம். நீர்ப்பாசன முறைகளை ஒழுங்குபடுத்துதல், சாதாரண மக்கள் கல்வி கற்பதற்காகப் பள்ளிகளைத் தொடங்குதல் எனப் பல பணிகளைச் செய்துள்ளனர். எப்பிரிவு பௌத்தர்களாக இருப்பினும் நாட்டின் நலனில் அக்கறை கொண்டவர்களாகவும், நாட்டிற்குத் துன்பம் ஏற்படும் வேளைகளில் அதனை அறிவுக்கூர்மையுடன் சரிசெய்தவர்களாகவும் இருந்துள்ளனர்.

ஜப்பானில் பௌத்தம் பரவியிருந்த காலத்தில் சீனாவில் தாவோயிஸத்தின் தாக்கத்தால் பௌத்தம் அங்கு அழிய ஆரம்பித்தது. அப்பொழுது சீனாவில் நடந்த நிகழ்வுகளை என்நின் *(Ennin - 794 -864)* என்ற ஜப்பானிய பௌத்தத் துறவி தனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். சமய விருப்புவெறுப்பின்றி சீனாவில் நடந்த நிகழ்வுகளை உள்ளது உள்ளபடி பதிவுசெய்துள்ளதால் இது முக்கிய வரலாற்று ஆதாரமாகத் திகழ்கிறது. இவர் சீனாவிலிருந்து திரும்பியவுடன் அங்கு தனக்குக் கிடைத்த அனுபவங்களை வைத்து தென்டாய் பிரிவை *(Tendai)* வளப்படுத்துகிறார். இவரைப் போன்றே வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய ஜப்பானியர்கள் தாங்கள் பெற்ற அனுபவங்களின் வழி நாட்டைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தினர். சீனாவில் நிலவிய குழப்பமான சூழ்நிலையால் சீனாவுடனான உறவுகள் படிப்படியாகக் குறைந்தன *(Shuichi Kato, 2002: 96-98)*.

**இலக்கியங்களின் தன்மை**

ஹேயியன் காலத்தில் இலக்கியம் எழுதுதல், வாசித்தல் என அனைத்தும் அரசவை சார்ந்த மக்களாலேயே மேற்கொள்ளப்பட்டன. அடித்தட்டு மக்களின் பங்களிப்பு எதுவும் இடம்பெறவில்லை. அரசவை சார்ந்தவர்கள் அதிலும் குறிப்பாகப் பெண்களின் பங்களிப்பு அதிக அளவில் காணப்பட்டது. பெண்கள் இயற்றிய இலக்கியங்களே இக்காலத்தின் சிறந்த இலக்கியகளாகத் திகழ்கின்றன. ஜப்பானில் பெண்களின் நிலைகுறித்து விளக்க முற்படும் அஸ்டன் பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'பழங்கால ஜப்பானில் பெண்கள் அரசர்களாக இருந்த நிலை சீனாவின் தலையீட்டால் மாறியது. அதன்பின் ஹேயியன் காலத்தில்தான் பெண்களுக்குக் கல்வி, எழுத்து உரிமைகள் வழங்கப்பட்டன. அதனால் பெண்கள் பல நூல்களை எழுதினர்' *(1986:55-56)* என்கிறார்.

சீன மொழியில் எழுதுவதையே விரும்பிய ஜப்பானியர்கள் 9ஆம் நூற்றாண்டு முதல் ஹிரகானா, கதகானா ஆகிய ஜப்பானியர்களுக்கான எழுத்துகளையும் பயன்படுத்தி அதிக அளவில் எழுதத் தொடங்கினர். அதிலும் குறிப்பாக, பெண்கள் ஹிரகானாவின் மீட்டுருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றினர். இது மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றது. ஹிரகானா எழுத்துகள் பழங்கால ஜப்பானில் பயன்பாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. முன்னர் குறிப்பிட்டதைப் போன்று ஹிரகானாவில் எழுதிய அதே காலகட்டத்தில் ஏய்குவா கதை *(Yeigwa Monogatari)*, கண்ணாடிக் கதை *(o-kagami)* போன்றவற்றை சீன மொழியில் எழுதினர். ஹிரகானா என்பது பெண்களின் எழுத்துமொழியாகவே தொடக்கத்தில் பார்க்கப்பட்டது. காலப்போக்கில் ஆண்களும் ஹிரகானாவில் இலக்கியங்களை எழுதினர்.

**கொகின்வாகாஷு (அல்லது) கொகின்ஷு**

கொகின்வாகாஷு (அல்லது) கொகின்ஷு *(Kokin Wakashu or Kokinshu)* என்ற கவிதைத் தொகுதியை அரசரின் ஆணைக்கிணங்க செவ்வியல் காலத்தின் தொடக்கத்தில் தொகுத்துள்ளனர். 20 தொகுதிகள் கொண்ட இதில்

1100 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகளில் ஐந்து மட்டுமே நீண்ட கவிதைகளாகும் (Naga - uta). பிற அனைத்தும் 31 அசைகள் கொண்ட வாகா வகைக் கவிதையைச் சார்ந்தவை. இக்கவிதைகள் 150 வருடங்களாக ஜப்பானின் பல்வேறு பகுதிகளில் நடந்த போட்டிகளில் வாசிக்கப்பட்ட கவிதைகளின் தொகுப்பாகும். இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் கானா வகை எழுத்துகளைக் கொண்டவை. இயற்கையின் அழகு கொகின்ஷுயின் பாடுபொருளாக அமைந்துள்ளது. கொகின்ஷு பாடல்களை அரசவைக் கவிஞர்களும் மன்னர்களும் அரண்மனையில் இருந்த பிறரும் இயற்றியுள்ளனர். கொகின்ஷுவை அரசவைப் பாடல்களின் தொடக்க கால வடிவம் என்பர்.

**கதைகள்**

செவ்வியல் காலத்தில் புகழ்பெற்ற கதைகளாக மூங்கில் வெட்டியின் கதை (Taketori Monogatari), இசே கதை (Ise Monogatari), கெஞ்சி கதை (Genji Monogatari) ஆகியன திகழ்கின்றன. இவைதவிர பிற கதைகளும் இருந்துள்ளன.

**மூங்கில் வெட்டியின் கதை**

ஜப்பானியக் கதைகளுள் மூங்கில் வெட்டியின் கதை மிகவும் பழமையானது. இதன் காலம், இயற்றியவர் பெயர் ஆகியவை கிடைக்கவில்லை. பிற கதைகளிலிருந்து சற்று மாறுபட்ட கதைப்போக்கினைக் கொண்டுள்ளது. முங்கில் வெட்டும் தம்பதிக்கு நீண்ட நாட்களாக குழந்தை இல்லாமல் இருந்தது. ஒரு நாள் மூங்கில் வெட்டச் சென்றபோது ஒரு மூங்கிலின் அடிப்பாகம் ஒளிர்ந்தது. அதனை வெட்டிப்பார்த்த போது அதில் ஓர் அழகிய சிறு பெண் காணப்பட்டாள். அவளை வீட்டிற்குக் கொண்டுவந்து பாதுகாப்பாக வளர்த்தனர். அவள் வளர்ந்து அழகிய இளம்பெண்ணான பின் அவளை மணந்துகொள்ள ஏற்பட்ட போட்டிகள், பின் அவள் தனது சொந்த இடமான நிலவிலிருந்து இங்கு வந்ததாகக் கூறி அங்கு திரும்பிச் செல்லுதல் என்று கதை அமைந்துள்ளது. இதன் கதைப்பின்னல், கரு ஆகியவை பழைய சீன மரபிலிருந்தும், பௌத்த மரபிலிருந்தும் வந்தனவாகக் கருதப்படுகின்றன (Group of Editors, 1956: 35). இக்கதையின் ஒரு வடிவம் ‘மூங்கில் வெட்டியின் கதை’, ‘மூங்கில் வெட்டுபவரும் நிலாக்குழந்தையும்’ ஆகிய தலைப்புகளில் தமிழில் மொழிபெயர்ப்பாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**இசே கதை (Ise Monogatari)**

முங்கில் வெட்டியின் கதையைப் போன்றே இதுவும் பழமையானதாகச் சுட்டப்படுகிறது. இக்கதையின் காலம், இயற்றியவர் பெயர் ஆகியவற்றை அறிய இயலவில்லை. கதைத் தலைவனான இசேவின் பல்வேறு காதல் நிகழ்வுகள் இக்கதையில் இடம்பெற்றுள்ளன. ஏதேனும் ஒரு வகையில் இந்நிகழ்வுகள் அல்லது கதை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. சிறு குறிப்போடு தொடங்கும் ஒவ்வொரு கதையிலும் ஒன்றோ அல்லது இரண்டு வாகா பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் மொத்தம் 143 பகுதிகள் உள்ளன. ‘அரிவரா நொ நொரிஹிரா’வே (Ariwara no Norihira) இக்கதையின் கதைத் தலைவனாக இருக்கலாம் என்றும், இவரே இக்கதையின் கதைத் தலைவனாகவும் ஆசிரியராகவும் இருந்திருக்கலாம் என்றும் இருவேறு கருத்துகள் உள்ளன. இசே கதைக்குப் பின்னர் தோன்றிய கதைகளுக்கு இது முன்மாதிரியாகத் திகழ்கிறது. ஏதேனும் ஒரு வகையில் இக்கதையைப் பின்பற்றியோ அல்லது தழுவியோ கெஞ்சி கதை (Genji Monogatari), உதுபோ கதை (Utubo Monogatari), யமடொ கதை (Yamato Monogatari) போன்ற பிற்கால கதைகள் அமைந்தன.

**கெஞ்சி கதை (Genji Monogatari)**

கெஞ்சி கதையை முரசாகி ஷிகிபூ (Murasaki Shikibu) என்னும் பெண் எழுதியுள்ளார். இதனை உலகின் முதல் நாவல் என்று குறிப்பிடுபவரும் உள்ளனர். கெஞ்சி கதையை சாகித்திய அகாதெமி வெளியீடாக கா.அப்பாத்துரையார் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். கதையாசிரியரான முரசாகி, ஹேயியன் கால அரசவையில் பணிப்பெண்ணாக இருந்தவர். இவர் குறித்த விரிவான தகவல்கள் அவரே எழுதிய நாட்குறிப்பில் இடம்பெற்றுள்ளன. கெஞ்சி கதையில் மொத்தம் 54 இயல்கள் உள்ளன. இது ஹிகாரு கெஞ்சி **(Hikaru Kenji)** என்ற இளவரசனின் வாழ்க்கையை விவரிக்கும் கதையாகும். அழகும், அறிவும், திறமையும் கொண்டவனாகச் சித்திரிக்கப்படும் கெஞ்சியின் பல்வேறு காதல் கதைகள் இதில் இடம்பெறுகின்றன.

ஹேயியன் கால ஆட்சிமுறையில் நடந்த பல்வேறு நிகழ்வுகள் கெஞ்சி கதையில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதனை ஜப்பானிய எழுத்துகளான கானாவில் முரசாகி எழுதியுள்ளார். 54 இயல்களுள் இறுதியாக உள்ள மூன்று இயல்கள் கெஞ்சியின் மகனான காவொரு (Kaoru) குறித்து விளக்குகின்றன. அரச குடும்பத்தில் பிறந்திருந்தாலும் சிறு வயது முதலே கெஞ்சி அனுபவித்தத் துன்பங்கள், காதலில் ஏற்பட்ட தோல்விகள், அவனது நிறைவேறாத ஆசைகள், தனக்கான உண்மையான காதலைத் தேடி அலைதல் எனப் பல நிகழ்வுகள் இக்கதையில் இடம்பெற்றுள்ளன.

### நாட்குறிப்புகள் (Diaries)

செவ்வியல் காலத்தில் நான்கு நாட்குறிப்புகள் கிடைக்கின்றன. எழுதியவர்களுள் மூவர் பெண்கள். இந்நாட்குறிப்புகள் ஒவ்வொன்றும் பல்வேறு வகைகளில் வரலாற்று ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றுள் டோசா நாட்குறிப்பே *(Tosa Nikki)* முதன்முதலில் எழுதப்பட்டது. அதன்பின் ககெரொ நாட்குறிப்பு *(Kagero Nikki)*, முரசாகி ஷிகிபூ நாட்குறிப்பு *(Murasaki Shikibu Nikki)*, சரஷினா நாட்குறிப்பு *(Sarashina Nikki)* ஆகியன எழுதப்பட்டன.

### டோசா நாட்குறிப்பு *(Tosa Nikki)*

டோசாவின் நாட்குறிப்பு குறித்து டபிள்யூ. ஜி. அஸ்டனின் *(W.G. Aston)* விளக்கமே இங்கு இடம்பெறுகிறது. டோசாவின் நாட்குறிப்பு சுராயுகியின் ***(Tsurayuki)*** பயணக்குறிப்பேடாகும். இவர் டோசா என்னும் பகுதியில் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் தலைநகரான கியோடோவை நோக்கிய தனது பயண அனுபங்களைப் பதிவுசெய்கிறார். ஒரு பெண்ணின் நாட்குறிப்பு போன்று எழுதத் தான் முயற்சி மேற்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டு எழுதத் துவங்கும் சுராயுகி கானா வகை எழுத்துகளையே பயன்படுத்தி எழுதியுள்ளார். தான் பயணம் மேற்கொள்ளத் தொடங்கிய முதல்நாள் தொடங்கி ஏறக்குறைய ஒன்றரை மாதகால அனுபவங்களைப் பதிவுசெய்துள்ளார். கடலில் பயணம் செய்யும்போது ஏற்பட்ட இடர்பாடுகள், விரத நாட்களில் கிடைத்த உணவுகள், பயணத்தின் இடையிடையே தங்கிச்சென்ற இடங்கள் எனப் பலவற்றைப் பற்றி எழுதியுள்ளார். நிகழ்வுகளை மிகைப்படுத்திக் கூறாமல் உள்ளது உள்ளபடி கூறும் தன்மை இப்பிரதியின் சிறப்புகளுள் ஒன்றாகச் சுட்டப்படுகிறது *(1986:67-76)*.

### ககெரொ நாட்குறிப்பு *(Kagero Nikki)*

டோசா நாட்குறிப்பு எழுதப்பட்டு நாற்பது ஆண்டுகளுக்குப் பின் ககெரொ என்பவரின் நாட்குறிப்பு எழுதப்பட்டது. தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை இப்பெண் பதிவுசெய்துள்ளார். இதனை நாட்குறிப்பு என்பதைவிட தன்வரலாறு என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தினை இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பரவலாகப் பதிவு செய்கின்றனர். ஹேயியன் கால நிகழ்வுகளை அறிந்துகொள்ள இந்நூல் துணைநிற்கிறது. இவரது தங்கையின் மகளான சரஷினாவும் ஒரு நாட்குறிப்பினை எழுதியுள்ளார். ககெரொ தனது இருபதாவது வயதில் காதல் வயப்பட்டபோது இந்த நாட்குறிப்பினை எழுதத் துவங்கியதாகக் குறித்துள்ளார். ஏனெனில், பெண்களுக்குக் காதல் வந்தாலும் அதனைக் கடிதத்தின் மூலம் வெளிப்படுத்த இயலாத சூழல் இருந்துள்ளது. ஆண்கள் கடிதங்கள் எழுதினால் அதற்குப் பதில் எழுதுவது பெண்களின் நிலையாக இருந்ததேயன்றி பெண்களாக முதலில் கடிதம் எழுதும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. சிறிது காலத்திற்குப் பின்னர் தனது காதலன் கடிதம் எழுத, இவரின் காதல் வெற்றிபெறுகிறது. அடுத்த வருடத்திலேயே ஒரு குழந்தை பிறக்கிறது. குழந்தை பிறந்தவுடன் கணவனின் காதல், கடிதம் இரண்டுமே குறைந்துவிடுகின்றன. தனது கணவரின் மீது தனக்கு ஏற்பட்ட சந்தேகங்கள், அவரை வேவு பார்த்தல், வேறு ஒரு பெண்ணுடன் கணவருக்கு இருந்த தொடர்பு, அவளுக்கும் குழந்தை பிறந்தவுடன் அவளையும் தனது கணவன் விட்டு விலகுதல், அந்தப் பெண்ணின் துன்பத்தை ககெரொ நினைத்தல் ஆகிய மனப் போராட்டங்களை இந்நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

தனது கணவன் மீதுள்ள காதல் சிறிதும் குறையாத போது, அவர் ஏன் இவ்வாறு நடந்துகொள்கிறார் என்ற கோபம், அதனால் பௌத்தத் துறவியாகலாமா அல்லது இறந்துவிடலாமா என்பன போன்ற மனப் போராட்டங்களைத் தெளிவாகப் பதிவுசெய்கிறார். தனது மகனின் இருபதாவது வயதில் நாட்குறிப்பு எழுதுவதனை நிறுத்திக்கொண்டுள்ளார். நாட்குறிப்பில் பெரும்பாலான பகுதிகள் இவரது காதல் தொடர்பாகவே உள்ளன. நாட்குறிப்பின் இறுதியில் உள்ள பகுதிகள் செறிவானவையாகவும், அவரின் அனுபவங்களைத் தெளிவாக விளக்குவனவாகவும் அமைந்துள்ளன. ககெரொ கி.பி.996இல் தனது அறுபதாவது வயதில் இயற்கை எய்தினார்.

### முரசாகி ஷிகிபூ நாட்குறிப்பு *(Murasaki Shikibu Nikki)*

கெஞ்சி கதையை எழுதிய முரசாகி ஷிகிபூவின் நாட்குறிப்பு 1008ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது. முரசாகியின் கணவர் இறந்தபின் அரண்மனையில் பணிப்பெண்ணாகச் சேர்கிறார். அரண்மனை வழக்கப்படி மகப்பேறு காலத்திலும் குழந்தை பிறப்புக்குப் பிறகும் செய்யப்படும் சடங்குகளை நாட்குறிப்பில் விரிவாக விளக்கியுள்ளார். அரண்மனையிலிருந்த பல்வேறு பெண்களின் நிலை, அரசியர் நிலை ஆகியவற்றை விளக்கியதோடு தனது சொந்த வாழ்வில் நிகழ்ந்தவைகளையும் விவரித்துள்ளார். தனது சகோதரருடன் சீனமொழி பயின்றபோது, அவரைக் காட்டிலும் முரசாகி சிறந்து விளங்கினார். அதனைக் கண்ட அவரின் தந்தை, 'நீ ஏன் ஒரு ஆணாகப் பிறந்திருக்கக் கூடாது' என்று கூறியதாகவும் பதிவுசெய்துள்ளார்.

ஒருவர் தான் கல்வியறிவு பற்றிப் பெருமையாகக் கூறுவது அழகல்ல என்ற தனது தந்தையின்

வார்த்தைகளைப் பின்பற்றி எங்கு சென்றாலும் பணிவுடன் நடந்துகொண்டது, தனக்கு சீனம் தெரிந்திருந்தாலும் தனக்குத் தெரியாது என்றே பிறரிடம் கூறியது, இதனால் சீன புத்தகங்கள் வாசிக்கும் போது பல்வேறு கேலிகிண்டல்களுக்கு ஆளானது போன்ற செய்திகளை முரசாகி தனது நாட்குறிப்பில் பதிவுசெய்துள்ளார். மேலும், கெஞ்சி கதையை வாசித்தவர்கள் முரசாகியைச் சந்திக்க விரும்பியதாகவும், அதைக் கண்ட அரண்மனையிலிருந்த பிற பெண்கள் பொறாமை கொண்டதாகவும் பதிவுசெய்கிறார். கணவனை இழந்து வாழ்க்கையில் நிம்மதியின்றி அரண்மனைப் பணிக்குச் சென்ற இவருக்கு அங்கும் நிம்மதி இல்லாததால் துன்பப்பட்டார். தனது குழந்தையின் பொருட்டு பௌத்தத் துறவியாகாமல் அரசவையில் பணியாற்றினார். முரசாகி தனது சமகால எழுத்தாளர்கள் குறித்தும் நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். கெஞ்சி கதையை வாசித்த அரசர் மிச்சினாகாவுக்கு ஆசிரியர் ஆற்றிய எதிர்வினையோடு நாட்குறிப்பு நிறைவடைகிறது.

### சரஷினா நாட்குறிப்பு *(Sarashina Nikki)*

கி.பி.1020இல் தொடங்கும் இந்நாட்குறிப்பு, 12 வயது முதல் 51 வயது வரை சரஷினா என்னும் பெண்ணின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளின் தொகுப்பாக இந்நாட்குறிப்பு அமைந்துள்ளது. சரஷினாவின் கற்கும் ஆர்வம், அவரது தந்தையின் பணியின் காரணமாகத் தடைபடுகிறது. கஸுஸ *(Kazusa)* என்கிற பகுதியில் இருந்ததால் அவருக்குப் புத்தகங்கள் கிடைப்பதில் பல்வேறு சிரமங்கள் இருந்தன. எனவே விரைவில் தலைநகருக்குப் பணிமாற்றம் செய்யப்பட வேண்டும் என்று புத்தரிடம் வேண்டியதாகவும் அதன்பின் ஓராண்டில் பணிமாற்றம் கிடைத்ததாகவும் குறிப்பிடுகிறார். சரஷினாவின் தலைநகர் நோக்கிய பயணம் மூன்று மாதகாலம் நீடிக்கிறது. அப்பொழுது தான் சந்தித்த புது அனுபவங்களைப் பதிவுசெய்துள்ளார். தலைநகருக்குச் சென்றவுடன் ஏராளமான நூல்களைக் கற்றார். படிப்பது மட்டுமே வாழ்க்கையின் நோக்கம் என்று கருதினார்.

கெஞ்சி கதையைப் படிக்க விரும்பிய சரஷினா அதன் ஒரு பிரதி தனக்கு எப்படியாவது கிடைக்க வேண்டும் என்று புத்தரிடம் வேண்டியதாகக் குறிப்பிடுகிறார். அதன்பின் வியக்கத்தக்க வகையில் அவரது சித்தி கெஞ்சி கதையின் ஒரு பிரதியைப் பரிசாகக் கொடுக்கிறார். அதனால் தனக்கு ஏற்பட்ட எல்லையில்லா ஆனந்தத்தை நாட்குறிப்பில் பதிவுசெய்துள்ளார். மேலும், தான் கண்ட கனவுகள், கனவுகளுக்கு எந்த அர்த்தமும் இல்லாதிருந்தாலும், தானாக ஒன்றினை அர்த்தப்படுத்திக்கொள்ளுதல் முதலிய செய்திகளைக் குறிப்பிடுகிறார். புத்தகங்களே வாழ்க்கை என்று நினைத்த இவர், தனது 33வது வயதில் ஒரு அரசக் குடும்பத்தில் பணிப்பெண்ணாகச் சேர்ந்தபோதே உண்மைக்கும் எழுத்திற்கும் உள்ள இடைவெளியை உணர்ந்தார். அடுத்த வருடத்தில் திருமணம் செய்துகொண்டார். இவ்வாறு இவரது நாட்குறிப்பு கி.பி. 1059 வரை தொடர்கிறது.

### கட்டுரைத் தொகுதி மகுரா நொ சோஷி *(Makura no Soshi)*

மகுரா நொ சோஷி என்பது கட்டுரைத் தொகுப்பாகும். இதனைச் செய் ஷோனகோன் *(Sei Shonagon)* என்னும் பெண் எழுதியுள்ளார். அரசவையில் பணிப்பெண்ணாக இருந்த இவர் சீன இலக்கியத்தில் சிறந்து விளங்கியதால் மிகவும் பிரபலமானவராக அரண்மனையில் வலம் வந்ததாகக் குறிப்பிடுகிறார். இவர் பத்தாண்டுகள் அரசவையில் பணியாற்றிய பின் தனது 24ஆம் வயதில் துறவியானார். தனது அரண்மனை அனுபவங்களையும் வாழ்க்கை அனுபவங்களையும் சிறியதும், பெரியதுமாக 300 கட்டுரைகளாக எழுதியுள்ளார். இதனை நான்கு வகைகளில் பிரித்துள்ளனர்.

1. பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகள்
2. பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் கட்டுரைகள்
3. திக்கற்ற வாழ்வின் குறிப்புகளை விளக்கும் கட்டுரைகள்
4. தன்வரலாற்றுக் கட்டுரைகள்

இந்தத் தலைப்புகளுக்குள் பல்வேறு உட்தலைப்புகளும் உள்ளன. இந்நூலிற்குப் பல்வேறு மூலப்பிரதிகள் காணப்படுகின்றன.

### உயர்ந்த கண்ணாடி (Okagami)

உயர்ந்த கண்ணாடி என்ற இந்த உரையாடல் நூலில் மொத்தம் பதினான்கு தலைமுறைகள் குறித்த தகவல்கள் இடம்பெறுகின்றன. 150 வயதுடைய ஒருவரும், 140 வயதுடைய மற்றவரும் தங்களின் வாழ்க்கை அனுபங்களைப் பரிமாறிக் கொண்டிருக்கும்போது அதனை ஒரு சமுராய் ஆர்வமுடன் கேட்கிறான். பல்வேறு செய்திகளை அறிந்துகொள்ளும் ஆர்வத்துடன் சமுராய் அவர்களைக் கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கிறான். உண்மைத் தன்மைக்காகப் புகழ்பெற்ற இந்நூலின் சில செய்திகள் நகைச்சுவையாகவும் அங்கதமாகவும் உள்ளன. இயற்றியவர் பெயர் அறியப்படாத இந்நூல் ஹேயியன் கால இறுதியில் எழுதப்பட்டதாகும்.

**கதைத் தொகுதி**

நிகழ்கால, இறந்த கால கதைகளின் தொகுதி 'கொன்ஜாக்கு' கதைகளாகும் (Konjaku Monogatari). இக்கதைகள் ஹேயியன் கால இறுதியில் 31 புத்தகங்களாகத் தொகுக்கப்பட்டன. அவற்றை மூன்று பிரிவுகளுக்குள் அடக்குவர்.

1. இந்தியப் பிரிவுக் கதைகள் - 1 முதல் 5 ஆம் புத்தகம் வரை - 187 கதைகள்
2. சீனப் பிரிவுக் கதைகள் - 6 முதல் 10 ஆம் புத்தகம் வரை - 180 கதைகள்
3. ஜப்பான் பிரிவுக் கதைகள் - 11 முதல் 31 ஆம் புத்தகம் வரை - 736 கதைகள்

இவ்வாறு 1103 கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இக்கதைகளை இந்திய புத்த ஜாதகக் கதைளோடு ஒப்பிடலாம் என்ற கருத்தும் நிலவுகிறது (Group of Editors, 1956:97).

கி.பி. 794ஆம் ஆண்டு தொடங்கும் ஜப்பானிய செவ்விலக்கியங்கள் முற்கால இலக்கியங்களிலிருந்து வெகுவாக மாறுபட்டு அமைந்துள்ளன. சமூகம், மொழி என அனைத்தும் மாற்றத்திற்கு உட்பட்ட இக்காலத்தில் இவ்வகை இலக்கியங்கள் தோன்றியுள்ளன. மொழி, சமூக முன்னேற்றத்தில் பௌத்த சமயம் குறிப்பிடத்தக்கப் பங்காற்றியுள்ளது. கவிதைத் தொகுதிகள், பல்வேறு கிளைக்கதைகளைக் கொண்ட கதைகள், ஒரு மையப்பொருள் கொண்ட கதைகள், பல்வேறு செய்திகளை விளக்கும் நாட்குறிப்புகள், கட்டுரைத் தொகுதிகள், கதைத் தொகுதிகள் போன்ற வகைகளில் இலக்கியங்கள் அமைந்துள்ளன. கேள்வி, பதில் முறையில் அமைந்த நூலும் காணப்படுகின்றது. சமூக நிர்வாகம், மொழி, இலக்கியங்கள் என அனைத்திற்கும் சீனாவினை பின்பற்றிய ஜப்பானியர்கள், செவ்வியல் காலத்தில் தங்களுக்கான இலக்கியத்தினை தங்கள் மொழியின் வரிவடிவத்திலே கட்டமைப்பதில் முனைப்பாகச் செயல்பட்டுள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.

**குறிப்புகள்**

1. ஜப்பானிய செவ்வியல்கால இலக்கியங்கள் குறித்த கருத்துகள் டபிள்யூ.ஜி. அஸ்டன் (W.G. Aston), ஷுஇச்சி காதொ (Shuichi Kato) ஆகியோரின் இலக்கிய வரலாற்று நூல்கள், கொகுசாய் புங்கா ஷின்கொகய் (Kokusai Bunka Shinkokai) நிறுவனப் பதிப்பாசிரியர் குழு வெளியிட்ட ஜப்பானிய இலக்கியம் குறித்த அறிமுக நூல், கொலம்பியா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஜப்பானிய மரபிலக்கியம் - ஒரு தொகுப்பு, தொடக்கம் முதல் 1600 வரை (Traditional Japanese Literature - An Anthology, Beginnings to 1600), அனிதா கன்னாவின் (Anita Khanna) பழங்கால ஜப்பானிய இலக்கியம்: ஒரு நுண்ணாய்வு (Ancient Japanese Literature: A Critical Survey) ஆகிய நூல்களிலிருந்து பெரும்பாலும் பெறப்பட்டவை.
2. 1868 வரை கியோடோவே ஜப்பானின் தலைநகராக இருந்தது.
3. துறவி சாயிச்சோ (Saicho) - கி.பி. 767- 822.
4. துறவி கூகாய் (Kukai) - கி.பி. 774 - 835.
5. முரசாகி: ஜோடோ மொனின் (Joto Monin) அரசியிடம் பணிப்பெண்ணாகப் பணியாற்றியவர்.
6. கெஞ்சி கதையை வாசித்த அரசர் மிச்சினாகா (Michinaga), இக்கதையை எழுதிய ஆசிரியருக்கு நிச்சயம் பல காதலர்கள் இருந்திருப்பார்கள் என்று கருதி ஒரு கவிதை எழுதி அதை முரசாகிக்கு அனுப்புகிறார். அந்தக் கருத்து தனக்குப் பிடிக்கவில்லை என்பதனையும் அந்தக் கவிதை எழுதப்பட்ட அந்நாள் இரவு தனது கதவு தட்டப்பட்டதையும் அதற்கு அவர் ஆற்றிய எதிர்வினையையும் தனது நாட்குறிப்பின் இறுதிப் பகுதியில் முரசாகி பதிவு செய்துள்ளார்.

**பயன்பட்ட நூல்கள்:**


1. Anita Khanna. (2002). Ancient Japanese Literature: A Critical Survey, Delhi: B. R. Publishing Corporation.
2. Aston, W. G. (1978). Nihongi (Chronicles of Japan from the Earliest Times to A.D. 697). Japan, Tokyo: Charles E. Tuttle Company.
3. Aston, W. G. (1986). A History of Japanese Literature. Japan, Tokyo: Charles E. Tuttle Company.
4. Brower Robert H, Earl Miner. (1975). Japanese Court Poetry. California: Stanford University Press.
5. Group of Editors. (1956). Introduction to Classic Japanese Literature. Tokyo: Kokusai Bunka Shinkokai (The Society for International Cultural Relations).
6. Group of Editors. (1965). The Manyoshu (The Nippon Gakujutsu Shinkokai Translation of One Thousand Poems). New York: Columbia University Press.
7. Janeira, Armando Martins. (1970). Japanese and Western Literature - A Comparative Study. Tokyo: Charles E. Tuttle Company.
8. Kato, Shuichi. (2002). A History of Japanese Literature. Tokyo: Kodansha International Ltd.
9. Keene Donald (comm & ed). (1975). Anthology of Japanese Literature. Japan, Tokyo: Charles E. Tuttle Company.
10. Philippi, Donald L (tr). (1980). Kojiki. Japan, Tokyo: University of Tokyo Press.
11. Shirane, Haruo (ed). (2006). Tranditional Japanese Literature - An Anthology, Beginnings to 1600. New York: Colombia University Press.


●


கட்டுரையாளர், ஜப்பானிய செவ்வியல் இலக்கியங்கள் குறித்த ஆய்வில் முனைவர் பட்டம் பெற்றவர்.





ஏப்ரல் 23 உலகப் புத்தக தினவிழா நிகழ்ச்சியை கோவையில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து கோவை மாவட்ட நூலக கட்டிட வளாகம் டவுன்ஹால் கிளையில் சிறப்பு புத்தகக் கண்காட்சி எற்பாடு செய்யப்பட்டிருந்தது. கண்காட்சியில் எழுத்தாளர் பாரதிதாசன், டவுன்ஹால் கிளை நூலகர்கள் மா.மணிமேகலை, ஆ.நாகராஜன், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ப.பா.ரமணி மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் கோவை மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!










**மே மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 176 | 880 | 3466 | 4714 | 5570 | 5580 | 7908 | 1109 |
| 509 | 1108 | 3467 | 4715 | 5571 | 5581 | 7909 | 1110 |
| 510 | 1152 | 3468 | 4717 | 5572 | 5582 | 8785 | 1111 |
| 511 | 1154 | 3469 | 4873 | 5573 | 5583 | 8786 | 4257 |
| 512 | 1155 | 3473 | 5565 | 5574 | 5584 | 8787 | 4258 |
| 513 | 2894 | 3478 | 5565 | 5575 | 5586 | 8803 | 4259 |
| 514 | 2895 | 4332 | 5566 | 5576 | 7403 | 8952 | 4260 |
| 515 | 2896 | 4333 | 5567 | 5577 | 7451 | 8953 | |
| 517 | 2897 | 4334 | 5568 | 5578 | 7596 | 8954 | |
| 518 | 3464 | 4392 | 5569 | 5579 | 7597 | 8955 | |


**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

தனி இதழ் ₹ **45.00**
ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**,
ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**


*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மார்க்ஸிய வெளியீடுகள்





**கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**
**கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்**
தமிழாக்கம், அறிமுகவுரை, விளக்கக் குறிப்புகள்
எஸ்.வி.ராஜதுரை
₹ 550/-




**மார்க்சிய சிந்தனை சுருக்கம்**
(மூலதனம் பற்றிய எளிய விளக்கம்)
தா.பாண்டியன்
₹ 160/-





**கார்ல் மார்க்ஸ்**
வாழ்வும் பணியும்
தா.பாண்டியன்
₹ 140/-




**கார்ல் மார்க்ஸ் 200**
பதிப்பாசிரியர் - எஸ்.வி.ராஜதுரை
₹ 675/-

கட்டுரை



# திராவிட மாடல் மீட்டுருவாக்கம் இராபர்ட் கால்டுவெல்

ச.சுபாஷ் சந்திரபோஸ்

'இந்தியாவில்(காலனியாதிக்கக் காலத்திலும் அதன் பின்னரும்) ஏற்பட்ட/ ஏற்படக்கூடிய பஞ்சம், பசி, பட்டினி, தொற்றுநோய்கள், ஜாதிய வேறுபாடு, தீண்டாமை, மகளிருக்கு எதிரான குற்றங்கள், கல்லாமை ஆகிய அனைத்திற்கும் காரணம் இந்து சமயமும் அதன் கூட்டாளிகளான பிராமணர்கள் மட்டுமே. பஞ்சம், பசி, பட்டினி எதற்கும் காலனியாதிக்கவாதிகளாகிய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பொறுப்பல்ல. எனவே, இந்து சமயமும் பிராமணர்களும் அழிக்கப்பட்டு இப்பூமி சுத்தப்படுத்தப்பட்டாலொழிய இங்குள்ள மக்களுக்குச் சமூக நீதியும் வாழ்க்கையில் நிம்மதியும் கிடைக்காது'. (இக்கொள்கையே பின்னாட்களில் நீதிக் கட்சியும் திராவிடர் கழகமும் தோன்றுதலுக்கு முக்கியக் காரணமாக அமைந்தது). (உமரி காசிவேலு, 2015:254).

நூலாசிரியர், வரலாற்றாசிரியர்கள் மையக் கருத்தாகக் கொண்டிருந்ததை மேலுள்ளவாறு குறிப்பிடுகின்றார். அடைப்புக் குறி இல்லாமலேயே பின்னுள்ள வரிகளைப் போட்டிருக்கலாம். இந்தியாவின் மற்ற பகுதிகளில் பெரிய அளவில் சமூக நீதிக்கான அமைப்புகள் தோன்றவில்லை என்றாலும் தமிழகத்தில் வரலாற்றாசிரியர்களின் மையக் கருத்தே உண்மையாகியுள்ளது.

மாமேதை கார்ல் மார்க்ஸ் மதங்களை அபினோடு தொடர்புபடுத்துகின்றார். எந்த மதமாக இருந்தாலும் அது தன்னைச் சார்ந்துள்ள மக்களைப் போதையிலேயே வழிநடத்தும். அவை வழிநடத்தும் முறையில் கூடக்குறைய இருக்கலாம். மக்களை அறியாமையில் மூழ்கடிப்பதும் அவர்களைச் சுரண்டுவதுமே

அடிப்படை நோக்கங்களாகும். பெரிய பெரிய ஆலயங்களை கட்டும்; நூற்றுக்கணக்கான அடி உயரச் சிலைகளை எழுப்பி அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் மக்களை வியப்பில் ஆழ்த்தும். மத நிறுவனம் தன் சிறிய வயிற்றுக்குப் பேரண்டப் பொருளாதாரத்தையே வளைத்துப் போட்டுக்கொள்ளும். கருத்து முதல்வாதத்தைப் பேசிக்கொண்டு பொருள் முதல்வாதியாக மதம் செயல்படும். கிராம மக்களின் வழக்கில் சொன்னால் 'கழுதை விட்டையில் முன்விட்டை என்ன! பின்விட்டை என்ன! எல்லாமே ஒன்றுதான்'.

மேற்சுட்டிய மேற்கோள் உமரி காசிவேலு எழுதிய 'கிறித்துவ வரலாற்றில் மறைக்கப்பட்டனவும் மாற்றப்பட்டனவும்... உலகளாவிய தாக்கமும்'(2015) என்னும் நூலில் உள்ளது. இதேபோன்ற நீண்ட தலைப்பில் 'பிஷப் கால்டுவெல் பிழையுரையும் பொய்யுரையும்... திராவிட இனவாதமும்'(2018) என்னும் நூலும் வெளிவந்துள்ளது.

இவ்விரண்டு நூல்களையும் எழுதிய உமரி காசிவேலு அவர்களைப் பாராட்டவேண்டும்; அவர் எடுத்து விளக்கிய பொருளுக்காக அன்று. அவருடைய கனமான உழைப்புக்காகத்தான். இரு நூல்களுக்கும் எழுதப்பட்ட ஆசியுரை, வாழ்த்துரை, பாராட்டுரைகளைப் பார்த்தாலே இந்நூல்கள் யாருக்காக, எதற்காக எழுதப்பட்டவை என்கின்றமை புரியும். அவற்றை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமன்று.

தற்போது தடுக்கி விழுந்தால் கிராமம், நகரம் என்னும் வேறுபாடு இல்லாமல் கல்வி நிறுவனங்கள் மேல்தான் விழ வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் நிறைந்துள்ளன. வேலை வாய்ப்புகள் எப்படி இருந்தாலும் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. ஏதாவது ஒரு வேலையைத் தேடுவார்கள். கல்வி இல்லாவிட்டால் அப்பன் தொழிலை மட்டுமே நம்பி இருக்க வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாளையங் கோட்டையைத் தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு எனக்குறிப்பர். கிறித்துவ மத போதகர்களால் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் பலவாகும். அவற்றைப் பார்த்து மேலும் மேலும் கல்வி நிறுவனங்கள் தோன்றின. தமிழகத்தின் பிற பகுதிகளை விடத் திருநெல்வேலி மாவட்டத்தில்தான் அறுபது எழுபதுகளிலேயே நிறையக் கல்வி நிறுவனங்கள் தோன்றிவிட்டன. ஜெசிந்தா அம்மையார், ரினியல் அடிகள், இராபர்ட் கால்டுவெல் போன்றோரால் கிறித்தவ மதமும் அப்பகுதியில் வளர்ந்தது. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வும் கல்வியால் வளர்ந்தது. மதம் பரப்பியதாகப் பேசுகின்றார்களே தவிர, காலங்காலமாக ஒடுக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதைப் பேசுவதில்லை.

திராவிட மொழியியலின் தந்தை எனப் போற்றப்படும் இராபர்ட்டு கால்டுவெல் *A Comparative Grammar of Dravidian or South Indian Languages(1856)* என்னும் கற்பகத்தரு, காமதேனு போன்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். எனக்குத் தெரிந்து மொழி ஆராய்ச்சியில் கால்டுவெல்லுக்குப் பிறகு ஒரு மாபெரும் புரட்சி செய்தவர் நோம் சோம்ஸ்கி *(Noam Chomsky)* என்னும் பேரறிஞர்தான். மாமேதை கார்ல் மார்க்சின் மூலதனம் சமுதாயத்தைப் புரட்டிப் போட்டதைப் போலச் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணம் *(Transformational Grammar)* உலகிலுள்ள மரபிலக்கணங்களை அப்படியே மறுபரிசீலனை செய்ய உதவுகின்றது. கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் ஒரு கலகக்கார நூலாகவே ஆகிவிட்டது.

இந்திய மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழி சமக்கிருதமே, ஆரியரின் தொடர்பு இல்லாவிட்டால் தமிழ், தமிழர், தமிழ்நாட்டிற்கு எதுவுமே பெருமிதம் பேசுவதற்கு இல்லை என இடைக்காலத்தில் தொடங்கி இன்றுவரை பேசுகின்றார்கள்; எழுதுகின்றார்கள். தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமி *(The Mirror of Tamil and Sanskrit, 2012* & செந்தமிழ் நாடும் பண்பும், *2021)* தம் நூல்களில் வன்மத்தை எல்லாம் ஒன்று சேர்த்து எழுதியுள்ளார்.

*F.W.* எல்லிஸ்*(1816)* சமக்கிருத மொழியானது, தமிழ் மற்றுமுள்ள திராவிட மொழிகளோடு குடும்ப மொழித் தொடர்புடையது அன்று என்றார். வில்லியம் ஜோன்ஸ்*(1788)* சமக்கிருதம் கிரேக்கம், இலத்தீன் போன்ற இந்தோ-ஐரோப்பிய மொழிகளோடு இனவுறவு உடையது என்று கூறிவிட்டார். எனவேதான், வடமொழியாகிய சமக்கிருதம் பிராகிருதம், இந்தி, மராத்தி, பெங்காலி, குஜராத்தி போன்ற வடநாட்டில் பேசப்படும் மொழிகளை இந்தோ-ஆரியம் *(Indo-Aryan)* எனக் குறிப்பிடுகின்றார்கள். இந்தியாவிற்கே அந்நியமான வடமொழியை இந்தியாவின் தொன்மைக்குடியான திராவிட மொழிக் குடும்பத்திற்குத் தாய்மொழி எனப் பல நூற்றாண்டுகளாகச் சொல்லி அறைத்த மாவையே அறைத்து வருகின்றார்கள்.

இராபர்ட்டு கால்டுவெல்லின் இன்னொரு நூல் *The Tinnevelly Shanars: A Sketch (1849)* என்பதாகும். நூலாசிரியர் உமரி காசிவேலு தம்முடைய நூல்களில் நாடார் எனக் குறிப்பிடாமல் சாணார் என்றும் பிராமணர்களைப் பார்ப்பனர் என்றும் குறிப்பிடுகின்றார் எனப் பல்வேறு குற்றச்சாட்டுகளைப் பல அறிஞர்களின் துணையுடன்

கால்டுவெல்லின்மீது சுமத்துகின்றார். பிராமணர்கள் எல்லா இனத்தவரையும் எல்லா வழிபாட்டு மக்களுடன் சேர்த்துக் கொள்வதையே ஒரு முழு வேலையாகச் செய்துவருகின்றனர்(2018:55). இதில் சிறிய அளவில் உண்மை இருக்கின்றது. நால்வருணப் பாகுபாட்டில் கடைக்கோடியில் வைக்கப்பட்டுள்ள சூத்திரர்களைக் கூட இந்து என்னும் போர்வைக்குள் மூடப் பார்ப்பார்கள். அவர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் சேர்க்கமாட்டார்கள். பெருவாரியான பட்டியலின மக்களைப் பற்றிச் சொல்லவாவேண்டும்! நீதிக்கட்சி, திராவிட இயக்கங்களால் கொண்டுவரப்பட்ட இட ஒதுக்கீட்டிற்கு எவ்வளவு முட்டுக்கட்டைகள்! தமிழக அரசு கொண்டுவந்த அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதற்கு எத்தனை எதிர்ப்புகள்!

திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட்டு கால்டுவெல் கிறித்துவ மதத்தை மட்டும் பரப்பவில்லை. கல்வியைக் கொடுத்துள்ளார். அவரின் துணைவியார் எலிசாவும் பெண்களின் படிப்பிற்காகப் பாடுபட்டுள்ளார்; கைத்தொழிலைக் கற்றுக்கொடுத்துள்ளார். இவற்றை எல்லாம் அவரை எதிர்ப்பவர்கள் கண்ணைத் திறந்து பார்ப்பதில்லை. மரபு கெட்டுவிட்டது என்கின்றார்கள்; மறுமலர்ச்சியைப் பார்க்க மறுக்கிறார்கள். அவர் வாழ்ந்த காலத்திலிருந்தே அவருக்கு எதிர்ப்பு இருந்துள்ளது

கால்டுவெல் நூலுக்கு மறுப்பாகச் சாதியப் படிநிலையில் நாடார்கள் பிராமணர்களுக்கு அடுத்த மேல் சாதியினர் என்பதாக ஒரு நூல் வெளிவந்தது. அது பரவலான கவனத்தைப் பெறவில்லை. கால்டுவெல் இந்த இயக்கத்திற்குப் பின்னால் இருந்தவர்களைத் தெரிந்துகொண்டார். ஆனால், அலட்டிக் கொள்ளவில்லை. இந்த எதிர்ப்பு இயக்கம் தொடங்கும் காலத்திற்கு முன் கால்டுவெல் நெல்லை மாவட்டத்தின் அசைக்க முடியாத பேராயர் ஆகிவிட்டார். எனவே, இந்த எதிர்ப்பியக்கம் கிறித்துவர்களுக்குள்ளேயே வலுப் பெறவில்லை. (திருநெல்வேலி சாணார்கள், 2018:4) எனப் பேராசிரியர் தொ.பரமசிவம் கால்டுவெல்லுக்கு எதிரான எதிர்ப்பை வரலாற்று நிலையில் குறிப்பிடுகின்றார். கொள்ளிக்கட்டையைக் கொடுத்துச் சொறிந்துகொள்ளச் சொன்னால் பெரும்பான்மையான மக்கள் செய்வார்கள் என இன்னும் சிலர் பழைய பஞ்சாங்கத்தையே புகட்டப் பார்க்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களின் எதிர்ப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எதிர்வினையாற்ற வேண்டியதில்லை. தமிழகத்தில் திராவிட கட்சி மாறினாலும் ஆட்சி மாறவில்லை. கடவுள் பெயரைச் சொல்லி மாற்றிவிடலாம் எனப் பார்க்கின்றார்கள். கடவுள் பெயரைச் சொல்லித் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள் மக்களுக்குத் தெரியும். சமூக-சமத்துவ நீதிக்கு மட்டுமே இங்கு இடமுண்டு. திராவிடம் பேசி விழிப்புணர்வு வந்ததைப் போலத் தமிழகத்தை ஆள விரும்புபவர்களும் சமூகநீதி பேசவேண்டும்; ஒரு தேசிய கட்சி காங்கிரஸ் 'ஒரே இந்தியா, ஒரே மொழி' என்னும் கோட்பாட்டில் இந்தியைத் திணிக்க முயன்றதால்தான் தமிழ்நாட்டில் இன்னும் எழமுடியவில்லை.

இராபர்ட்டு கால்டுவெல், அம்பேத்கர், பெரியார் போன்றோரால்தான் சாதி வளர்ந்துள்ளது. பிரிவினை, பகை போன்றவை மிகுந்துள்ளன என்கிறார்கள். சாதியைப் புதிதாக இவர்கள் தோற்றுவிக்கவில்லை. இருக்கின்ற சாதிகளைக் கூறி அவற்றுக்கு இட ஒதுக்கீடு, சம உரிமை கேட்டார்கள். இவ்வாறு சமூகநீதி கேட்பது சாதியை வளர்ப்பதாக ஏகபோகமாக ஒரு குளத்தில் ஒரு வரால் மீனாக எல்லாவற்றையும் எடுத்துப்போட்டு விழுங்கியவர்களுக்குக் கசக்கத்தான் செய்யும்.

இராபர்ட்டு கால்டுவெல் வாழ்ந்த காலத்தில் சமுதாயம் பற்றியோ மொழி பற்றியோ தரவு திரட்டுவது மிகக் கடினம். அறிவியல், மொழியியல் வளரத் தொடங்கிய காலம். இப்போது கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலைப் படிக்கும்போது அவ்வளவு வியப்பாக இருக்கின்றது! திராவிடம் என்னும் கோட்பாட்டை இந்திரலோகம், சொர்க்கலோகம் போலக் கற்பனையாகக் கட்டமைத்துவிடவில்லை. தமிழ் பேசுவோரோடு மலையாளம், கன்னடம், தெலுங்கு பேசுவோர் உடன்படவில்லை என்பதற்காக இவர்கள் ஒருகுலைக் காய்கள் என்பதை மறுத்துவிட முடியாது. அரசியலில் எப்படி வேண்டுமானாலும் பேசலாம்; வரலாற்றை மறுத்துவிட முடியாது. மொழியியல் ஆய்வு என்பது தொல்பொருள் எச்சங்களைப் போன்றது. இந்தோ-ஐரோப்பியரும் இந்தோ-ஆரியரும் பங்காளிகள் எனக் காட்டிக் கொடுப்பது ஒப்பியன் மொழியியல்தான்.

கால்டுவெல்லின் திராவிட ஒப்பியன் மொழிக் கொள்கையில் சில முரண்பாடுகள் உள்ளன; அவற்றைத் திராவிட மொழியியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். கால வளர்ச்சியில் குறைகளைச் சுட்டிக்காட்டுவது இயல்புதான். ஆனால், திராவிடம் என்னும் மீட்டுருவாக்கம் அசைக்க முடியாதது. A Comparative Grammar of Dravidian or South Indian Family of Languages (1856) என்னும் ஒப்பியன் மொழிநூலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியுள்ள ஆய்வுகள் வியப்பைக் கொடுக்கும்.

**திராவிட மொழியியலின் தந்தை**

தி.கீ.எல்லிஸ்(1816) என்னும் அறிஞர் A.D.கேம்பல் என்பவர் எழுதிய தெலுங்கு இலக்கண நூலுக்கு

அறிமுக உரை எழுதியுள்ளார். காலங்காலமாக இந்திய மொழிகளுக்குத் தாய்மொழி சமக்கிருதமே என்னும் கூற்றை அதில் மறுக்கின்றார்.

*It is the intent of the following observations to show that the statements contained the preceding quotations are not correct; that neither the Tamil, the Telugu, nor any of their cognate dialects are derivations from the Sanskrit; that the latter, however it may contribute to their polish, is not necessary for their existence; and that they form a distinct family of languages, with which the Sanskrit has, in latter times especially intermixed, but with which it has no radical connexion.*

*(Grammar of Teloogoo, 1816:2)*

இலக்கண நூலார் சிலரும் மேலைநாட்டார் சிலரும் சமக்கிருத மொழியே இந்திய மொழிகளுக்குத் தாய்மொழி என்று கூறிய கருத்தை தி.கீ.எல்லிஸ், இராபர்ட்டு கால்டுவெல் என்னும் இருவருமே தெளிவாக மறுத்தனர்.

கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல் 1856'இல் வெளியிடப்பட்டுள்ளது. வரலாற்று மொழியியல், ஒப்பியன் மொழியியல் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த காலம். பல குடும்ப மொழிகள் இனங்காணப்பட்டிருந்தன. அவ்வகையில், கால்டுவெல் பல குடும்ப மொழிகளோடு திராவிட மொழிகளை ஒப்பிடுகின்றார். சித்திய மொழிக் குடும்பத்தோடு இலக்கண ஒப்புமை இருப்பதை விளக்குகின்றார். இந்தோ-ஆரியமும் திராவிடமும் வேறுவேறு குடும்ப மொழிகள் என்னும் எல்லிஸின் கோட்பாட்டை விளக்கமாக எழுதியதால்தான் அவர்மேல் தீராப் பகை கொள்கின்றார்கள். கால்டுவெல் எல்லிசை மறைத்துவிட்டார் என்றொரு குற்றச்சாட்டும் உண்டு. விரிவாகச் சான்றுகளை விளக்கியவர் இராபர்ட்டு கால்டுவெல்தான்.

திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட்டு கால்டுவெல் செப்பம் செய்த நூல் 1875'இல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. அரசியல் காரணமாகச் சில பகுதிகள் நீக்கப்பட்டு 1913'இல் மூன்றாம் பதிப்பு வெளிவந்துள்ளது. இம்மூன்றாம் பதிப்பை 1956 முதல் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டு வருகிறது.

1875'இல் முழுமையான பதிப்பாக வெளிவந்த இரண்டாம் பதிப்பை அரிதின் முயன்று பதிப்பித்த கவிதா சரண்(2007) போற்றத்தக்கவர். கால்டுவெல்லின் விளக்கம், இடையிடையே வரும் சான்றுகள் போன்றவை புரிந்துகொள்வதைக் கடினமாக்கும். அக்காலத்தில் மொழியியலைக் குறிக்கும் கலைச்சொல் Philology; இக்காலக் கலைச்சொல் Linguistics. இலக்கணக் கலைச்சொற்கள் சிலவும் மாறுபடும். பகுதி அளவும்(காழி சிவ.கண்ணுசாமி, கா.அப்பாத்துரை, 1941) முழுமையாகவும் (கா.கோவிந்தன், க.ரத்னம்,2004) தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மொழிபெயர்க்க முயன்றவர்களைப் பாராட்டவேண்டும்.

எதிர்கால ஆய்வாளர்களுக்கு மிகவும் பயன்படப்போகும் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு 2021'இல் வெளிவந்துள்ளது. முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்வழி வெளிவந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நூலைத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளார்.

இம்மொழிபெயர்ப்பு நூல் வெளிவர அரிய முயற்சி செய்த இயக்குநர் செ.சரவணன், தொல்காப்பியர் ஆய்வு இருக்கைப் பொறுப்பாளர் அ.சதீஷ் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை) பாராட்டுக்கு உரியவர்கள்.

வெயிலின் அருமை நிழலில் தெரியும் என்பார்கள். ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலை அடிக்கடி பயன்படுத்துவோருக்குத்தான் தமிழ் மொழிபெயர்ப்பின் அருமை புரியும். தாமஸ் ஆர்.டிரவுட்மன் (Thomas R.Trautmann: Languages and Nations - The Dravidian Proof in Colonial Madras, 2006) எழுதிய ஆங்கில நூலைத் திராவிடச் சான்று - எல்லிஸும் திராவிட மொழிகளும்(2007) என்னும் தலைப்பில் பேராசிரியர் இராம.சுந்தரம் மிகவும் தெளிவாகவும் எளிதில் புரியும் வகையிலும் மொழி பெயர்த்துள்ளார். சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனமும் காலச்சுவடு பதிப்பகமும் இணைந்து இந்நூலை வெளியிட்டுள்ளன.

இந்த மொழிபெயர்ப்பைப் படிக்கும்போது இருந்த தெளிவைக் கால்டுவெல்லின் (A Comparative Grammar of Dravidian or South Indian Languages, 1875) ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பிலும் அறியமுடிந்தது. ஆங்கிலத்தில் இராபர்ட்டு கால்டுவெல் எழுதிய நூலைத் திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்(2021) என்னும் தலைப்பில் மொழி பெயர்த்தவர் பேராசிரியர் பா.ரா.சுப்பிரமணியன்.

இவ்விரண்டு திராவிட மொழிக்குடும்பம் சார்ந்த நூல்களில் மொழிபெயர்ப்புச் சிறப்பாக அமைந்தமைக்கும் காரணம் வேறு ஒன்றுமில்லை.

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல் (திருக்.517)**

இதுதான் காரணம். பேராசிரியர் இராம.சுந்தரம், பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன் இருவருமே

மொழியியல் அறிஞர்கள். இருவரும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றறிஞர் மு.அருணாசலம் அவர்களின் தலைமையில் இயங்கிய பேரகராதித் திட்டப் பணியில் பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன் அவர்களுடன் பணியாற்றியது பசுமையாக நினைவுக்கு வருகின்றது. கலை, அறிவியல் தொடர்பான சொற்களைத் திரட்டிப் பொருள் எழுதும்போது ஏற்படும் ஐயங்களைத் தெளிவாகப் போக்குவார். மென்மையாகப் பேசுவார்; ஆழமான கருத்துகள் பொதிந்திருக்கும்.

ஆகச் சிறந்த கால்டுவெல்லின் திராவிட ஒப்பிலக்கண நூல் மொழிபெயர்ப்பைத் தமிழக அரசும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் உலகம் முழுதும் வாழும் ஆய்வாளர்களின்/தமிழர்களின் கரங்களில் தவழ ஆவன செய்யவேண்டும்.

**அருட்திரு இராபர்ட்டு கால்டுவெல்**

இராபர்ட்டு கால்டுவெல்லின் வரலாற்றைப் பற்றிய பதிவுகள் நூல்களிலும் கட்டுரைகளிலும் நிறைய உள்ளன. 07.05.1814'ஆம் ஆண்டு அயர்லாந்து நாட்டிலுள்ள பெல்பாஸ்ட்டு என்னும் குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தார். வளர்ந்து கொண்டிருந்த ஒப்பியன் மொழியியல் *(Comparative Linguistics)* என்னும் துறையில் மிகவும் ஈடுபாடு கொண்டார். தொன்மையான இலக்கிய, இலக்கணங்களில் ஆழங்கால்பட்டவர்களுக்கு ஆய்வில் ஏற்படும் ஐயங்களுக்கு எளிதில் தீர்வுகாணமுடியும் என்பதற்கு இராபர்ட்டு கால்டுவெல்லே சான்றாவார்.

கிரேக்க மொழியிலும் பிற மொழிகளிலும் சமய இலக்கியங்களிலும் புலமை பெற்ற கால்டுவெல் கிறித்துவ மதம் பரப்புவதற்காகத் தம் 24'ஆம் வயதில் 1838'இல் மத போதகராகச் சென்னை மாகாணத்திற்கு வந்தார். நம்மவர்களுக்கும் மேலை நாட்டினருக்கும் ஒரு வேறுபாடு உண்டு. சுரண்ட வருபவர்களுக்கு ஒரு நாட்டில் கிடைக்கப்போகும் வருவாயே முதன்மையானது.

திராவிட மொழிகளுக்கு மட்டுமல்லாமல் இந்தோ-ஆரிய மொழிகளுக்கும் அந்நிய நாட்டினர் செய்துள்ள பணி மிகச் சிறந்ததாகும். வடமொழியிலுள்ள இலக்கண, இலக்கியங்களை உலகறியச் செய்தார்கள். மற்றவர்கள் மீது திணிக்க முயற்சி செய்வதால் வடமொழியின் மீது வெறுப்பு ஏற்படுகின்றதே தவிர, அந்த மொழியின் மீது அன்று. இன்று வளர்ந்துள்ள மொழியியல் *(Linguistics)* துறை வளர்ச்சிக்கு வித்திட்டது வடமொழி இலக்கணம் என மொழியியல் அறிஞர்கள் நன்றியுடன் குறிப்பிடுவர் (தாமஸ் டிரவுட்மன், 2007:94-97).

நம்முடைய பெருந் தெய்வங்கள் அனைத்தும் வளமான ஆற்றங்கரைப் பகுதிகளில் வாழவே விரும்பியுள்ளன. ஆனால், கால்டுவெல் வந்து தங்கிய திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இடையன்குடி ஒரு குக்கிராமம். பனையும் கள்ளியும் நிறைந்த பகுதி. அவர் சுற்றியுள்ள கிராமங்களையும் தம் சேவையால் ஈர்த்தார். கிறித்துவ மதத்திற்கு மாறியவர்கள் பல்வேறு வாழ்வாதாரங்களைப் பெற்றார்கள். மானுடநேயம் கொண்ட அருட்தந்தை இராபர்ட்டு கால்டுவெல் அவர்களால் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டதே திராவிட மொழிக் குடும்பம்.

**திராவிட மொழிக் குடும்பம்**

கால்டுவெல் அவர் காலத்தில் கண்டறியப்பட்ட திராவிட மொழிகள் பன்னிரண்டைத் திருந்திய மொழிகள்(தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு அல்லது கூர்க்), திருந்தா மொழிகள்(தோதவம், கோதவம், கோண்டு, காண்ட் அல்லது ஒராஅன், ராஜ்மஹால்) என ஆறு ஆறாகப் பகுத்து ஆராய்கின்றார். படிப்படியாக மேலை நாட்டு அறிஞர்களும் நம் நாட்டுத் திராவிட மொழியியல் அறிஞர்களும் தனித்தனியான திராவிட மொழிகளைக் கண்டறிந்து அவற்றுக்கு விளக்க மொழியியல் *(Descriptive Linguistics)* அடிப்படையில் இலக்கணம் எழுதினார்கள். பின்வருபவை முக்கியமான சில பேச்சு வழக்கில் மட்டுமுள்ள திராவிட மொழிகளின் இலக்கண நூல்கள் ஆகும். இவற்றுக்கு எல்லாம் விளைநிலம் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலாகும்.

*J.Brigel, A Grammar of Tulu Language,1872: Ernest Droese, Introduction to the Malto Language, 1884; H.Williamson, Gond Grammar and Vocabulary, 1890, Denys Bray, The Brahui Language, 1909; J.E.Friend-Pereira, A Grammar of Kui Language, 1909, F.Hahn, Kurukh Grammar, 1911; A. Grignard, A Grammar of Oraon Language, 1924; T.Burrow & S. Battacharya, The Parji Language, 1953; The Pengo Language, 1970; Sisir Kumar Das, Structure of Malto, 1973; R.Balakrishnan, A Grammar of Kodagu, 1977.*

இவை வெளிவந்துள்ள ஆண்டுகளைப் பார்த்தாலே கால்டுவெல்லின் திராவிட மொழிக் குடும்பக் கோட்பாடு எவ்வளவு உண்மையானது என்பது பற்றி அவரை எதிர்ப்பவர்களுக்குக் கூடப் புத்தொளியைப் பாய்ச்சும் வகையில் புரிபடும். பேச்சு வழக்கில் மட்டுமுள்ள திராவிட மொழிகளுக்கு இன்னும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இவை அல்லாமல் திராவிட மொழிகளின் பொதுவான இலக்கண அமைப்பை விளக்க நூற்றுக்கணக்கான ஒப்பியன் மொழிநூல்கள் வெளிவந்துள்ளன. ஆயிரக்கணக்கில்

ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. திராவிட மொழிகளின் இணைச்சொல் அகராதிகள் உள்ளன. 1973'ஆம் ஆண்டிலேயே திராவிட மொழிகள், அவற்றின் இலக்கியங்கள் தொடர்பாகத் துணைநூற்பட்டியல் (Bibliography) வெளிவந்துள்ளது (Busnagi Rajannan, Dravidian Languages and Literature, Madurai University, Madurai,1973). குறிப்பிட்ட வரையறையோடு இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்திலும் பிற திராவிட மொழிகளிலும் வெளிவந்துள்ள நூல்களின் பட்டியலை இன்றுவரை தொகுத்தால் இருபது, முப்பது தொகுதிகள்வரை தொகுக்கலாம். இராபர்ட்டு கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் அவ்வளவு தாக்கத்தை உலக அளவில் ஏற்படுத்தியுள்ளது.

இராபர்ட்டு கால்டுவெல் காலத்தில் 12 மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளாக அறியப்பட்டிருந்தன. மென்மேலும் செய்யப்பட்ட ஆய்வுகளால் அண்மைக்காலம்வரை 26 திராவிட மொழிகள் இந்தியாவின் தென்கோடி முதல் வடகோடிவரை கண்டறியப்பட்டுள்ளன (Bh. Krishnamurthi, 2003:19).

T.Burrow & M.B.Emeneau(1981,1986) தொகுத்துள்ள திராவிட மொழிகளின் இணைச்சொல் அகராதியை (ஞிணிஞி) மேலும் செழுமைப்படுத்த வேண்டும். அவற்றின் ஒப்புமை வடிவங்கள் தற்காலிகமானவை அல்ல; இந்தியாவின் தொன்மைக் குடி திராவிடம், அதன் மொழிக்குடும்பம் திராவிட மொழிக்குடும்பம் என்பதை நிறுவும்.

ஒப்பீட்டுச் சொற்கோவையின் கட்டமைப்பிலுள்ள கோட்பாட்டின் மூலம் மொழிகளும் தேசங்களும் அல்லது இனங்களும் இடையீடு இல்லாத நெருங்கிய உறவுடையன என்பது அறியக்கூடியதாக உள்ளது. மொழி உறவு குறித்த ஒவ்வொரு கூற்றும் தேச உறவு குறித்த கூற்றாகவும் அமைந்து ஒன்றை ஒன்று அடையாளம் காட்டியது. (திராவிடச் சான்று, ப.74)

சமக்கிருதம் அடங்கிய இந்தோ-ஆரிய மொழிகள் இந்தியாவில் குடியேறிய ஆரியரின் மொழிகள் என்பதை இந்தோ-ஐரோப்பிய மொழிகளே காட்டிக்கொடுத்து விடுகின்றன.

கார்ல் மார்க்சின் பொதுவுடைமைச் சித்தாந்தம் எங்கோ ஓரிடத்தில் தோன்றினாலும் அது உலகம் முழுவதும் ஊடுருவி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. அது முழுமையாக வெற்றி பெறாவிட்டாலும் முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளர் வர்க்கத்திற்குமான இடைவெளியைப் புரியவைக்கின்றது. இராபர்ட்டு கால்டுவெல்லின் திராவிடவியல் கோட்பாட்டைத் திராவிடர்கள் சரியாக உள்வாங்கிக் கொள்ளவில்லை. அரசியலில் முழுமை அடையாவிட்டாலும் திராவிட மொழிக்குடும்பக் கோட்பாடு ஆய்வில் உச்சம் தொட்டுவிட்டது என்பதில் ஐயமில்லை.

திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட்டு கால்டுவெல் திராவிடர், திராவிட மொழிகள் பற்றி விரிவாக ஆராய்கின்றனர். அவருடைய சில முக்கியமான கோட்பாடுகளை விளக்கலாம்.

**திராவிடமும் இந்தோஆரியமும்**

உள்நாட்டுப் பண்டிதர்கள், மேலை நாட்டினர் என வேறுபாடு இல்லாமல் சிலர் தமிழ் போன்ற திராவிட மொழிகளுக்குச் சமக்கிருதமே தாய்மொழி என்றனர். வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார் (வீரசோ.60), தொல்காப்பிய உரையாசிரியர் சேனாவரையர்(தொ.சொ.401), இலக்கணக் கொத்து நூலாசிரியர் சாமிநாத தேசிகர் (இல.கொத்.7) எனக் கால வரிசைப்படி ஒரு பட்டியலே போடலாம். இக்கொள்கையை உடைய வெளிநாட்டவர் சிலரையும் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். கோல்புரூக், கேரி, வில்கின்ஸ் போன்றோர்களால் ஆதரிக்கப்பட்ட அனுமானமான திராவிட மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து எழுந்தவை என்பது இப்போது எவ்வித அடிப்படையும் அற்றது எனத் தெளிவாகிறது (திராவிட அல்லது., ப.58).

அந்தந்தத் துறைகளில் குறைந்த அளவுகூடப் பொதுப் புத்தி இல்லாதவர்கள் புகுந்தால் இப்படிப்பட்ட கூத்தெல்லாம் நிகழும். சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என்பதற்கு எவ்வளவோ ஆய்வுகள் வந்துள்ளன. சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என்று நிறுவியவர் சர் ஜான் மார்ஷல்(1924). இருப்பினும் அது சரஸ்வதி நாகரிகம் எனத் தற்போதும் கூறுகின்றார்கள். ஆன்மிகவாதிகளிடம் வரலாறு, அரசியல் சிக்கிக்கொண்டால் குரங்குக் கையில் அகப்பட்ட பூமாலைதான்.

திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட்டு கால்டுவெல் திராவிட மொழிகள் தனிக் குடும்ப அமைப்பு உடையவை என்பதற்குப் பதின்மூன்று குறிப்புகளைக் கொடுக்கின்றார். சமக்கிருதத்திற்கும் அவற்றுக்கும் மொழியமைப்பு அடிப்படையில் எந்த உறவும் இல்லை என்பதைத் தெளிவாக்குகின்றார்(திராவிட அல்லது., பக்.57-71).

வேறுபட்ட குடும்ப மொழியைச் சார்ந்தோர் ஓரிடத்தில் வாழும்போது சொல் பரிமாற்றம் நிகழ்வது இயற்கை. இதனை மொழியியலார் கடன் வாங்குதல் (Borrowings) எனக் குறிப்பிடுவர். உங்க வீட்டது, எங்க வீட்டது; எங்க வீட்டது, எங்க

வீட்டது' என்பது போலக் கடன் பெற்ற சொற்களைக் கொண்டு சமக்கிருதமே தமிழ் மற்றுமுள்ள திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி எனக் கூருவோரைப் பற்றி எப்படி நினைப்பது என்றே தெரியவில்லை. இப்படிப்பட்டவர்களைக் கால்டுவெல் ஒப்பியன் மொழிப் பரிச்சயம் அற்றவர்கள் என்கின்றார்.

தி.கீ.எல்லிஸ், இராபர்ட்டு கால்டுவெல் போன்றோரை நினைக்கும்போது தற்போது *'YouTube'* இணையத் தளத்தில் பேசும் ஊடகவியலாளர்கள் நினைவுக்கு வருகின்றார்கள். எதிர் அணியில் இருப்பவர்கள் போகிற போக்கில் கொளுத்திப் போட்டுவிட்டுப் போகிறார்கள். அதை அணைக்க அல்லது விளக்கப் பெரும்பாடுபடுகின்றார்கள்; கள ஆய்வு செய்கின்றார்கள்; விடிய விடியப் படிக்கின்றார்கள். அந்தத் தோழர்கள் உரக்கப் பேசும்போது நமக்குத் தண்ணீர்க் குடிக்கவேண்டும் போல் இருக்கும்.

திராவிட மொழிகளுக்குச் சமக்கிருதம் தாய்மொழி இல்லை என்பதை நிறுவக் கால்டுவெல் எத்தனை இரவுகள் கண்விழித்துப் படித்திருப்பாரோ? கொளுத்திப் போடுவதற்கு மட்டுமில்லை; நம்பிக்கைவழிக் கூறினாலும் மறுக்கவோ உடன்படவோ அறிவியல் அறிஞர் கடுமையாக ஆராய்ச்சி செய்யவேண்டும். பூமி தட்டையானது என்னும் மதக் கோட்பாட்டை மறுத்து உருண்டையானது எனக் கூறியதற்கு விஞ்ஞானிகள் எவ்வளவு இன்னல் அடைந்துள்ளார்கள்?

சுருங்கச் சொன்னால் வில்லியம் ஜோன்ஸ் குறிப்பிட்ட இந்தோ-ஐரோப்பியம், இந்தோ-ஆரியம் போன்ற குடும்ப மொழிகளுக்கு எண்ணற்ற ஆய்வுகள் வெளிவந்துள்ளமை போன்று கால்டுவெல்லின் ஆய்விற்கும் வெளிவந்துள்ளன. தாமஸ் டிரவுட்மன் பின்வருமாறு புகழாரம் சூட்டுகின்றார்.

*கால்டுவெல்லின் கருத்தாழமிக்க இந்த ஒப்பிலக்கண நூல் செம்மையானது; இன்றும் வழக்கில் உள்ளது. ஒப்பிலக்கணத் துறையில் ஆழக்கால் பதித்தது; சிறந்த புலமையின் சான்றாக உள்ளது; அதனாலேயே, அது இன்னமும் சிறப்பாக மதிக்கப்படுகிறது. (திராவிடச் சான்று, ப.102)*

பெரும்பாலான மேலைநாட்டு அறிஞர்கள் அடிப்படை இலக்கண நூல்கள், அகராதிகள் இயற்றும் பணியை மேற்கொண்டிருந்தபோது கால்டுவெல் திராவிட மொழிகளில் ஆராய்ந்து ஒப்பிலக்கணம் எழுதினார்.

**பால் பாகுபாடு**

காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்பது போல அவரவர் மொழி அவரவர்க்குக் கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவும். தேவபாடை, சாதாரண மொழி என்றெல்லாம் இல்லை. எங்கள் மொழிதான் தெய்வங்களுக்குப் புரியும் எனப் பெருமிதமாகப் பேசப்பட்ட சமக்கிருதம், கிரேக்கம், இலத்தீன், ஈப்ரு போன்ற மொழிகள் எல்லாம் இன்று வழக்கழிந்து ஒழிந்துவிட்டன. மொழி மக்களிடம் வாழவேண்டும். எழுத்து வடிவம் இல்லாத மொழிகள் நூற்றுக்கணக்கானவை இன்றும் நிலைத்து இருப்பதற்குக் காரணம் அவை பேச்சு மொழிகளாக உள்ளன.

தமிழ் மற்றுமுள்ள திராவிட மொழிகளிலுள்ள பால் பாகுபாடு *(Gender Distinction)* பற்றிய அருமை நமக்குப் புரியவில்லை. ஆனால், பல குடும்ப மொழிகளை அறிந்த திராவிட ஒப்பியன் மொழியியலறிஞர் கால்டுவெல் இம்மொழிகளில் உள்ள பால் பாகுபாட்டை வெகுவாகப் புகழ்கின்றார். திராவிடர்களின் அறிவு வளர்ச்சியின் காரணமாகவே இது எழுந்திருக்கவேண்டும்(திராவிட அல்லது., ப.351) என்பது அவர் கருத்தாகும்.

*The peculiar Dravidian law of gender which has now been described would appear to be a result of progressive intellectual and Grammatical Cultivation. (1856:222)*

சில திராவிட மொழிகளில் பெண்பால், ஆணல்பால்-ஒன்றன் பாலில் அடக்கப்பட்டாலும் மக்களை உயர்திணையாகவும் அவர் அல்லாதவற்றை அஃறிணையாகவும் பார்க்கும் முறை அறிவு முதிர்ச்சியின் உச்சமாகும்.

**உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே**
**(தொ.சொ.1:1-2)**

என்பது தொல்காப்பிய நூற்பாவாகும்.

தொடக்க கால மொழியில் எல்லா இலக்கணக் கூறுகளிலும் சீர்மையை எதிர்பார்க்க முடியாது; விதிவிலக்கு இருக்கும். மூல திராவிட மொழிக்குப் பல மொழிகளில் காணப்படும் சான்றுகள் அடிப்படையில் பெண்பாலை ஆணல் பால்(பெண்பால்-அஃறிணை) என மீட்டுருவாக்கம் செய்கின்றார்கள் *(P.S. Subrahmanyam, 1971:414-422).`*

பழைய பால் பாகுபாட்டில் இவ்வாறு இருந்தாலும் குறிப்பாகத் தமிழ் போன்ற தென்திராவிட மொழிகளில் பெண்பால் உயர்திணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

**ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்**
**பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி**
**அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே**
**(தொ.சொ.2)**

தமிழில் பெண்பாலை உணர்த்தும் பெயர்கள் பால்காட்டும் விகுதியைப் பெற்றிருந்தாலும் (அவள், ஐங்.66:2; உழத்தி, சிலப்.12:12:2) பெண்பால் பொருளை உணர்த்தினாலும் (அரிவை, புறம்.122:9; பேதை, அகம்.35:17) பெண்பாலாகவே கருதப்படும். ஆனால், திராவிட மொழிகளின் தாய்மொழியாகக் கருதப்பட்ட சமக்கிருத மொழியில் பெண்ணைக் குறிக்கும் மூன்று பெயர்கள் வெவ்வேறு பாலில் அடக்கப்படும்.

*kalatra* (களத்திரம்) - அலிப்பால்
*bha:rya* (பாரியை) - ஆண்பால்
*da:ra* (தாரம்) - பெண்பால்

சமக்கிருத மொழி மட்டுமல்லாமல் உலகில் பல மொழிகளில் பால்பாகுபாடு இயல்புக்கு முரண்பட்ட வகையில் இருப்பதால்தான் இராபர்ட்டு கால்டுவெல் திராவிட மொழிகளில் பாகுபாட்டை வெகுவாகப் பாராட்டுகின்றார்.

**வேர்ச்சொல் விளக்கம்**

இராபர்ட்டு கால்டுவெல் திராவிட மொழிகள், அவற்றின் எழுத்தியல், சொல்லியலை விரிவாக ஆராய்கின்றார். அவரின் ஆய்வு பல இடங்களில் மறுபரிசீலனைக்கு இடம் அளித்தாலும் அந்த இலக்கணக் கூறை அவர்தான் அறிமுகப்படுத்துகின்றார். திராவிட மொழிகளின் வேர்ச்சொல் பற்றிய ஆய்வு திராவிட மொழி அமைப்பில் ஒரு தெளிவைக் கொடுக்கின்றது.

திராவிட மொழிகளின் வேர்ச்சொற்கள் (*Roots*) ஓரசையால் அமைந்தவை எனக் கால்டுவெல் கூறுவது திராவிட மொழியியல் ஆய்வில் ஆய்விற்கு ஓர் உச்சக்கட்ட நெறிப்படுத்துதல் ஆகும். 1944'ஆம் ஆண்டு திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலின் இரண்டாவது பிரிவாகிய வேர்ச்சொல்லைத் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் மொழிபெயர்த்ததாகக் குறிப்புக் காணப்படுகின்றது(திராவிட அல்லது. ப.9-10).

திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அமைப்புப் பற்றிப் பல திராவிட மொழியியல் அறிஞர்கள் (*Bh. Krishnamurti, 1961, 2003; P.S.Subrahmanyam, 1983, 2007*) விரிவாக ஆராய்ந்துள்ளார்கள்.

திராவிட மொழிகள் அனைத்தும் பின்னொட்டு (*Suffixing*) மொழிகள்; வேர்ச்சொல்லுடன் உருபுகள் சேர்ந்தே சொற்கள், தொடர்கள் உருவாகின்றன. வேர்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு மரபிலக்கணங்கள் விளக்கும் புணர்ச்சி இலக்கணத்தை ஆராய்ந்தால் தொல்காப்பியர், பவணிந்தி முனிவர் போன்றோர் கூறியுள்ள விதிகளை அப்படியே மாற்றி எழுதவேண்டியிருக்கும். கால்டுவெல்லின் வேர்ச்சொல் ஆய்வில் ஆய்வுக் களங்கள் அவ்வளவு உள்ளன.

**தொல் திராவிடம் *(Proto-Dravidian)***

தொல் திராவிடம் என்னும் மொழிக் குடும்பம் பொய்யானது என்றால் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம், இந்தோ-ஆரிய மொழிக் குடும்பம், மங்கோலிய மொழிக்குடும்பம் போன்ற கட்டமைப்புகளும் பொய்யானவை ஆகும். எலும்பு, முட்டை போன்ற தொல் எச்சங்களைக் கொண்டு தொல் உயிரினங்களைக் கட்டமைப்பதை மறுக்கவேண்டும்.

முதன்முதல் தி.கீ.எல்லிஸ் திராவிட மொழிக் குடும்பத்தைக் கட்டமைத்ததைத் தாமஸ் டிரவுட்மன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

திராவிட மொழிகள் என்று நாம் வழங்குகின்ற தென்னிந்திய மொழிகள் தம்முள் ஒற்றுமையுடையன என்பதும் அவை சமக்கிருத மூலத்தைக் கொண்டவை அல்ல என்பதுமாகும். இந்தக் கண்டுபிடிப்புக்கள் உண்மையில் புதியவையும் எதிர்பாராதவையுமாகும். மொழிகளின் வரலாற்றுவழி உறவை, அந்த மொழிகளைப் பேசும் மக்களே நினைவில் வைத்திராத நிலையில் இன்றும் ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் இந்தக் கண்டுபிடிப்புக்கள் வெளிப்படுத்தின என்பது குறிப்பிடத்தக்கதாகும். (திராவிடச் சான்று, பக்.67-68)

**கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்**
**உன் உதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்**
**(மனோ.பாயி.)**

என்னும் மனோன்மணியம் சுந்தரனாரின் கருத்து மகிழ்ச்சி தரக்கூடியது. 14'ஆம் நூற்றாண்டுவரை தமிழின் வட்டார வழக்காக இருந்து மலையாளம் பிரிந்தது என மொழியியல் அடிப்படையில் நிறுவியதையே சிலர் மறுக்கின்றனர். தொல் திராவிடம் (*Proto Dravidian*) திராவிட மொழிகளில் காணப்படும் சான்றுகள் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டதாகும். தமிழ் எண்பது விழுக்காட்டிற்குமேல் தொல் திராவிடத்தின் அமைப்பைப் பெற்றுள்ளது. ஏன் எல்லாத் திராவிட மொழிகளையும் தமிழுக்குள் அடக்கமுடியாது என்பதற்குத் திராவிட மொழிகளுக்குள்ளேயே பல சான்றுகள் உள்ளன. சிலவற்றை மட்டும் தொட்டுக்காட்டலாம்.

திராவிட மொழிகளுக்கு மீட்டுருவாக்கம் செய்யப்படும் மொழிமுதல் சகரம் பல மொழிகளில் அப்படியே வந்துள்ளது. தமிழில் அது மொழி முதலில் கெட்டுள்ளது.

தமிழ்: ஆறு, நாய்கி: *sa:di*, கோண்டி: *sa:rung*, கூயி: *sajgi, 'six', (DED.2485)*

தமிழ்: உப்பு, கோலாமி, நாய்கி, கதபா: *sup, 'salt', (DED.2674a)*

மொழி முதலில் வரும் ககரமெய் குறிப்பிட்ட சூழலில் சகர மெய்யாகத் திரியும். அண்ணவினமாதல் என்னும் மாற்றம் உலக மொழிகளுக்குப் பொதுவானது. தமிழில் நிகழ்ந்துள்ளது. வேறுசில திராவிட மொழிகளில் நிகழவில்லை.

தமிழ்: செவி, கன்னடம்: *kivi*, கோலாமி, நாய்கி, கோண்டி: *kev, 'ear', (DED.1977a)*

தமிழ்: செருப்பு, கன்னடம்: *kervu*, கோலாமி, நாய்கி: *kerri, 'slipper', (DED.1963)*

எல்லாத் திராவிட மொழிகளும் தமிழிலிருந்து பிறந்தவை என்றால் பிறந்தவற்றில் தொன்மை ஒலி கெடவில்லை, மாறவில்லை. ஆனால், தமிழில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. இவ்வாறு நூற்றுக்கணக்கான சான்றுகள் உள்ளன. இராபர்ட்டு கால்டுவெல்லின் திராவிட மொழி ஆய்வில் வேர்ச்சொல்லாய்வு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தொடக்க காலத் திராவிடச் சொற்கள் ஓரசைச் சொற்களாகவே தோன்றியுள்ளன. ஆக்க விகுதி பெறுவது பிற்கால வளர்ச்சியாகும். மர்(ஞிணிஞி.4711ணீ) என்னும் வேர்ச்சொல்லே இன்றும் மரத்தைக் குறிக்கப் பெங்கோ, மண்டா என்னும் நடுத்திராவிட மொழிகளில் பயன்பாட்டில் உள்ளது. மரம் என்பது ஆக்கப்பெயராகும்.

செவி என்பதன் தொன்மை வடிவம் *kev-i;* ஆக்க விகுதி பெற்ற வடிவம் பல திராவிட மொழிகளில் காணப்படுகின்றது. *kev (DED.1977a)* என்னும் வேர்ச்சொல்லே தற்போதும் கோலாமி, நாய்கி, கோண்டி என்னும் மொழிகளில் உள்ளது.

செ.வை. சண்முகம் கூறுவதும் இவண் குறிப்பிடத்தக்கது. தமிழைப் பிற திராவிட மொழிகளோடு ஒப்பிட்டபோது தமிழ் ஆய்வில் சில ஒளி கிடைத்தது என்பது விளக்கத்திற்கு உரியது. திராவிட மொழிகளில் தமிழ் மிகப் பழமையான எழுத்துச் சான்று பெற்றிருந்தாலும் காலத்தால் பிற்பட்ட திராவிட மொழிகள் சில தொல் வடிவங்களைத் தக்க வைத்துக் கொண்டிருக்கத் தமிழில் மாறிய வடிவங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன (நான் அறிந்த. ப. 27)

தொன்மைத் திராவிடத்திற்கு மீட்டுவாக்கம் செய்யப்படும் சில கூறுகள் பல திராவிட மொழிகளில் அப்படியே உள்ளன. தமிழில் அவை வளர்ச்சியடைந்துள்ளன. பெண்பால் பல திராவிட மொழிகளில் அஃறிணையோடு சேர்க்கப்பட்டுள்ளது. தமிழில் உயர்திணையாக உள்ளது. தொல் திராவிட நிலை தமிழிலும் சில திராவிட மொழிகளிலும் மாற்றப்பட்டுள்ளது பகுத்தறிவின் வெளிப்பாடாகும்.

தொல் திராவிட மொழிக்குச் சான்றுகள் அடிப்படையில் இறந்தகாலம் *(Past)*, இறப்பல்லாக் காலம் *(Non-Past)* என்னும் இரண்டே காலங்கள் மீட்டுருவாக்கம் செய்யப்படுகின்றன. நிகழ்காலம் என்பது தமிழில் ஒரு வளர்ச்சி நிலையாகும்.

இவற்றை எல்லாம் மனத்திற் கொண்டால் தொல் திராவிடம் அதன் கிளைமொழிகள் பற்றிய தெளிவு பிறக்கும். தமிழிலிருந்து மற்றத் திராவிட மொழிகள் தோன்றின என்றால் மேலே குறிக்கப்பட்டவை போன்ற ஆயிரக்கணக்கான வடிவங்களுக்குப் பதில்சொல்ல வேண்டும்.

எனவே, காழ்ப்புணர்வால் சிலர் திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட்டு கால்டுவெல் அவர்களைக் குறை கூறினாலும் அவர் கோட்பாடே திராவிடர் ஆட்சி அமைவதற்கு அடிப்படையாக இருந்தது. எனவேதான், இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு(1968) நடந்தபோது கால்டுவெல்லுக்குத் தமிழக அரசு சிலையமைத்து நன்றியைச் செலுத்தியது. இடையன்குடியில் அவர் வாழ்ந்த இல்லம் தமிழக அரசால் நினைவில்லாமாக மாற்றப்பட்டுள்ளது(2010). கோயம்புத்தூரில் நடந்த செம்மொழித் தமிழாய்வு மாநாட்டில் முத்திரை *(Stamp)* வெளியிடப்பட்டது. திராவிட மொழியியலுக்காகப் பாடுபட்ட வீரமாமுனிவர், ஜி.யூ.போப் போன்றவர்களும் தமிழக அரசால் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். கால்டுவெல்லைத் தொடர்ந்து தமிழ்ச் செவ்வியல் மொழித் தகுதி பெற்றது எனக் குறிப்பிட்ட பரிதிமாற்கலைஞருக்கும் தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது. அவர் வாழ்ந்த இல்லம் நினைவில்லாமாக மாற்றப்பட்டுள்ளது (2006). தமிழ் மண்ணிற்கு உண்மையாக இருந்தவர்களுக்குத் தமிழகம் என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருக்கும் என்பதற்குக் கர்னல் பென்னி குய்க்கும் சான்றாக உள்ளார். தென்தமிழகத்தின் ஐந்து மாவட்டங்களின் வறட்சியைப் போக்க முல்லை-பெரியாறு அணை கட்டத் தம் குடும்பச் சொத்தையே விற்றுவந்து செலவிட்டார். தமிழக அரசு அவருக்குச் சிலையும் மணிமண்டபமும் அமைத்துள்ளது. தென்தமிழக மக்கள் தம் குழந்தைகளுக்கு பென்னி குய்க் என்னும் பெயர் சூட்டி மகிழ்கின்றார்கள்.

ஆரிய மாயையில் காலங்காலமாகச் சிக்கித் தவித்த தமிழக மக்களுக்கு விழிப்புணர்வைக் கொடுத்தவர்கள் மேலை நாட்டு அறிஞர்கள். எனவேதான் தமிழக அரசு நன்றிக்கடன் செலுத்துகின்றது. குறிப்பாக, திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட்டு கால்டுவெல்லின் திராவிட மொழிக் குடும்பக் கோட்பாட்டால்தான் தமிழ்மொழி செவ்வியல் மொழி என்னும் தகுதியைப் பெற்றுள்ளது. தமிழுக்கு அந்தத் தகுதி இருந்தாலும் இவ்வாறு விழிப்புணர்வு வராவிட்டால் சமக்கிருதமே தமிழ்மொழியின் தாய்மொழி என்று தற்போதும் பழைய புராணத்தையே பாடிக் கொண்டிருப்பார்கள்.

காலங்காலமாகப் பொத்திக் காத்த வடமொழியே தமிழின் தாய்மொழி என்ற கோட்பாட்டைக் கால்டுவெல் தகர்த்துவிட்டார். அவரது கோட்பாட்டை முற்போக்குச் சிந்தனையாளரும் பற்றிக் கொண்டார்கள். அதனால்தான் திராவிடம் என்றால் சிலர் எரிச்சல் அடைகின்றார்கள். அவர் ஏற்றி வைத்த திராவிடப் பேரொளியில் எதிர்ப்பவர்கள் காணாமல் போய்விடுவார்கள்.

மேலை நாட்டவர் சிலரும் பார்ப்பன ஆய்வாளரும் திராவிட மொழிகளுக்கு மட்டுமில்லை, கிரேக்கம், இலத்தின் போன்ற இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் சமக்கிருதமே தாய்மொழி என்றார்கள். இக்கருத்தை பிரான்ஸ் போப் மறுத்து அது இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் ஒரு கிளைமொழி என்றார் எனத் தாமஸ் ட்ரவுட்மன் விளக்கம் அளித்துள்ளார்.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் ஒப்பீட்டாய்வில் சிறந்தவரான பிரான்ஸ் போப் *(Franz Bopp; 1816, 1835, 1845-53)* சமஸ்கிருதம் மனித இனத்தின் தொன்மையான மொழி என்பதையே மறுத்ததோடு, ஜோன்ஸ் கருத்தையொட்டி அது இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் உடன்பிறப்பே தவிர, தாய் அன்று என்றார். *(திராவிடச் சான்று, ப.58)*

இராபர்ட்டு கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலால் திராவிட மொழிகளில் கணக்கு வழக்கில்லாத ஆய்வுநூல்களும் கட்டுரைகளும் வந்துள்ளன. பல நூல்களை மொழிபெயர்க்கவும் மறுபதிப்புக் கொண்டுவரவும் தமிழக அரசு முனைப்புக் காட்டவேண்டும்.

முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்வழி கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல் வெளிவந்தமைக்குத் தமிழக அரசைப் பாராட்டி நன்றி தெரிவிக்கவேண்டும். பின்வரும் பட்டியலில் கொடுக்கப்படும் திராவிட மொழியியல், தமிழ் மொழியியல், கல்வெட்டு, தொல்பொருள் ஆய்வியல் தொடர்பான நூல்கள் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழக வரலாற்றை அறியவும் பெரிதும் உதவும். குறிப்பாக, ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும். மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டியவற்றையும் மறுபதிப்புச் செய்ய வேண்டியவற்றையும் இனங்கண்டு செய்தால் தமிழ்கூறும் நல்லுலகம் தமிழக அரசுக்கு என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருக்கும். இன்று தமிழக அரசு பேசும் திராவிட மாடலுக்கு அடித்தளமிட்ட திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட் கால்டுவெல் அவர்களையும் வளர்த்த தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநதி போன்றோரையும் நாளும் நினைவு கூர்வோம்.

**திராவிட மொழியியல்**

1. *Andronov M.S., Dravidian Languages Nauka Publishing House, Moscow, 1970.*
2. *Burrow T., Collected papers on Dravidian Linguistics, Annamalai University, Annamalai Nagar, 1968.*
3. *Burrow T. & Emeneau M.B., A Dravidian Etymological Dictionary, Clarendon Press, Oxford, 1961, Supplement, 1968.*
4. *Emeneau M.B., Dravidian Comparative Phonology: A Sketch, Annamalai University, Annamalai Nagar, 1970.*
5. *Israel M., The Treatment of Morphology in Tolka:ppiyam, Madurai Kamaraj University, Madurai, 1973.*
6. *Krishnamurit Bh., The Dravidian Languages, University Press, Cambridge, 2003.*
7. *Kumaraswami Raja N., Post-Nasal Voiceless Plosives in Dravidian, Annamalai University, Annamalai Nagar, 1969.*
8. *Shanmugam S.V., Dravidian Nouns: A Comparative Study, Annamalai University, Annamalai Nagar, 1971.*
9. *-------------, A Historical Grammar of Tamil : Noun Morphology, Central Institute of Classical Tamil, Chennai, 2021.*
10. *Subrahmanyam P.S., Dravidian Verb Morphology: A Comparative Study, Annamalai University, Annamalai Nagar, 1971.*
11. *---------------, Dravidian Comparative Phonology, Annamalai University, Annamalai Nagar, 1983.*
12. *---------------, Dravidian Comparative Grammar-I, Central of Excellence for Classical Tamil, Central Institute of Indian Languages, Mysore, 2008.*
13. *---------------, Dravidian Comparative Grammar-II, Central Institute of Classical Tamil, Chennai, 2021.*
14. *Zvelebil V.Kamil, Comparative Dravidian Phonology, Mounton, The Hague, Paris, 1970.*
15. *------------, Dravidian Linguistics: An Introduction, Pondicherry Institute of Linguistics and Culture, Pondicherry, 1997.*

**தொல்லியல், கல்வெட்டு**

16. *Balakrishnan R, Journey of A Civilization: Indus to Vaigai, Roja Muthiah Research Library, Chennai, 2019.*
17. *Mahadeven Iravatam, Early Tamil Epigraphy: From the Earliest Time to the Sixth Century A.D., Cre-A, Chennai, 2003.*


●

கட்டுரையாளர், ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்,
இலக்கணவியல் ஆய்வாளர், எழுத்தாளர்.

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 80




₹ 270





₹ 200





₹ 230


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 365/-




₹ 325/-




₹ 110/-




₹ 60/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



கட்டுரை

# உயிரளபெடை

முனைவர் செ. கஸ்தூரி

ஓர் எழுத்துத் தான் ஒலிக்கக் கூடிய கால அளவில்(மாத்திரை) நீண்டு ஒலித்தலே அளபெடையாகும். அளபெடையானது இரண்டு வகைப்படும். உயிர் எழுத்துக்கள் தன் கால அளவில் நீண்டு ஒலித்தல் உயிரளபெடையாகும். ஒற்று எழுத்துக்கள் தன் கால அளவில் நீண்டு ஒலித்தல் ஒற்றளபெடையாகும். உயிரளபெடை குறித்த செய்திகளை ஆய்ந்து நோக்குவதே இப்பகுதியாக அமைந்துள்ளது.

**உயிரளபெடை:**

உயிரளபெடை என்பது செய்யுளில் இசை குறையும் இடத்தில், நெடில் தன் ஓசையில் நீண்டு ஒலிப்பதாகும், “இசைகெடின் மொழி இடை, கடை நிலை நெடில் அளபெழும்” (நன். எ:36) என்று நன்னூலார் கூறும் கருத்து இதுவேயாகும்.

சொல்லில் உயிரளபெடை நிகழ்தலை அறிவதற்கு அவற்றின் பின்னர் அவ்வவ் நெடிலுக்கு இனமாகிய குறிலெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வரும். “அவற்றவற்றினக் குறில் குறியே” (நன். எ:36) என்ப-திலிருந்து இது புலனாகின்றது.

தொல்காப்பியர் (எ:5) “மூவளபு இசைத்தல் ஒரெழுத்து இன்றே” எனக் குறிப்பிடுகின்றார். இதனால் மூன்று மாத்திரை அளவு ஒலித்தல் ஒரெழுத்தின் இயல்பு அன்று என்பது அவரது கருத்தாக அமைகின்றது. ஆயினும் அடுத்த நூற்பாவில்,

> “நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
> கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்”
>
> (தொல்:எ:6)

எனத் தெரிவிக்கின்றார். அளபெடையினைக் கவனத்தில் கொண்டே இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் நன்னூலார் “மூன்று உயிரளபு” (நன். எ:44) என உயிரளபெடையானது மூன்று மாத்திரை ஒலிக்கக்கூடிய எழுத்தாகக் கூட்டிக் காட்டுகின்றார்.

இக்கருத்திற்கும் மேலாகத் திருக்குறளில் “சேறாஅஅய்” (திருக்:1200) என உயிரளபெடை நான்கு மாத்திரை அளவாய் ஒலிப்பதையும் காண முடிகின்றது.

தொல்காப்பியர், நன்னூலார், திருவள்ளுவர் இவர்களிடமிருந்து பெறப்படும் கருத்துக்களின் வழி தமிழில் எந்த ஒரு எழுத்தும் தனித்து மூன்று மாத்திரை பெறுவதில்லை என்பதுவும் ஆனால் நெடில் தன் மாத்திரையிலிருந்து அளபெடுக்குமாயின் தன் இனக்குறிலுடன் சேர்ந்தே மூன்று மாத்திரையாகவோ, நான்கு மாத்திரையாகவோ ஒலிக்கக் கூடும் என்பதுவும் தெளிவாகின்றது.

நன்னூலார் (நன். எ:36) உயிரளபெடை சொல்லின் முதல், இடை, கடை எனும் மூவிடங்களிலும் நெடில் ஏழும் அளபெடுக்கும் என்கின்றார். ஆதலால் உயிரளபெடையின் விரியினை இருபத்தொன்று எனத் தெரிவிக்கின்றார். இவ்விடத்தில் நன்னூலுக்கு உரை எழுதும் பெரும்பான்மையான உரையாசிரியர்கள் (விருத்தியுரை, காண்டியுரை, மயிலைநாதருரை) கருத்து மாறுபடுகின்றனர்.

உரையாசிரியர்கள் நெட்டெழுத்தேழும் மூவிடத்தும் அளபெடுக்குமாயின் உயிரளபெடை இருபத்தொன்று எனும் கருத்திலிருந்து மாறுபட்டு, அதற்கான காரணத்தைக் குறிப்பிடுகையில் ஔகாரம் மொழி முதலில் மட்டுமே இடம்பெறும். சொல்லின் இடை, கடை ஆகிய இரு இடங்களிலும் ஔகாரம் அளபெடுக்காது. ஆதலின் இவ்விரு இடங்களையும் நிறைவு செய்யும் வகையில் உரையாசிரியர்கள் இன்னிசையளபெடையையும், சொல்லிசையளபெடையையும் சேர்க்கின்றனர்.

ஔகாரம் மொழி இடை, கடை, ஆகிய இடங்களில் வருவதில்லை என்பதனை வலியுறுத்தி அவ்விடங்களில் இன்னிசையளபெடையினையும், சொல்லிசையளபெடையினையும் சேர்த்ததுடன் நன்னூலார் இன்னிசையையும், சொல்லிசையையும் இணைத்தே அளபெடையின் விரியினை இருபத்தொன்றாகக் குறிப்பிட்டுள்ளார் எனப் பெறவைக்கின்றனர்.

உரையாசிரியர்களின் கருத்தினை ஏற்று பாடநூல்களில் உயிரளபெடை மூவகைப்படும் எனவும், அவை செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை எனப் பதிப்பித்து வெளியிடுகின்றனர்.

தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் உயிரளபெடை மூவகைப்படும் என்று எங்கும் பேசவில்லை.

இக்கட்டுரையில் உரையாசிரியர்களின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு உயிரளபெடையானது செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என மூவகையாகப் பகுத்தாராயப்படுகின்றது.

**செய்யுளிசையளபெடை:**

செய்யுளிசையளபெடை என்பது செய்யுளில் ஓசை குறையும் இடத்து அவ்வோசையை நிறைவு செய்யும் வகையில் நெட்டெழுத்துத் தன் மாத்திரையிலிருந்து அளபெடுத்து அவ்வோசையை நிறைவு செய்வதாகும். ஆதலின் இவ்வளபெடையானது இசைநிறையளபெடை எனவும் அசைநிறையளபெடை எனவும் அழைக்கப் பெறுகின்றது.

செய்யுளிசையளபெடை செய்யுளில் பயின்று வருவதை அடிப்படையாகக் கொண்டு அதனை இருநிலைகளில் பகுத்துக் காணலாம்.

வெண்பாவில் செப்பலோசையும், இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையுமே இடம் பெறுதல் வேண்டும். வெண்பாவில் இவை தவிர்த்த வேறு ஓசைகளோ, தளைகளோ இடம் பெறுவதில்லை.

"தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்" (குறள்:364)

இவ்வெண்பாப் பாடலில் தூய்மை, வாய்மை என்ற சொற்கள் அளபெடுக்கா நிலையில் மாமுன் நேராக, நேரொன்றாசிரியத் தளையும், அகவலோசையும் பெறுகின்றன. ஆனால் அளபெடுக்கும் நிலையில் தூஉய்மை, வாஅய்மை என்றாகி காய் முன் நேர் பெற்று வெண்சீர்வெண்டளையும், செப்பலோசையும் பெற்று, ஓசையும் தளையும் நிறைவு செய்யப் பெறுகின்றன.

இவ்வாறு இரண்டு சீர்கள் இயையும் பொழுது அச்செய்யுட்குரிய ஓசையும் தளையும் குறைவுபடும் நிலையில் அதனைச் சரிசெய்ய அளபெடுத்து வருதல் ஒரு நிலையாகும்(ஓசையை/இசையைச் சரி செய்வதினால் இசைநிறையளபெடை எனப் பெயர் பெறுகிறது).

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள்:55)

இவ்வெண்பாப்பாடலில் இரண்டாம்சீர் ஓரசைச் சீராக அமைய, அவ்விடத்திலுள்ள (தொழாள் - தொழாஅள்) நெடில் அளபெடுத்து ஈரசைச் சீராக மாறி அசையைச் சரிசெய்கின்றது. இவ்வாறு வெண்பாவின் ஈற்றடியின் இறுதிச் சீர் அல்லாத சீர்களில் ஓரசையே சீராக அமைந்து அசை கெடும் நிலையில் அக்குறைவினைப் போக்க அளபெடுத்து நிறைவு செய்தல் மற்றொரு நிலையாகும்(அசையைச் சரி செய்வதினால் அசைநிறையளபெடை எனப் பெயர் பெறுகிறது).

**இன்னிசையளபெடை:**

இன்னிசையளபெடை என்பது செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிமையான ஓசை தருதல் பொருட்டு குறில் நெடிலாக விகாரமடைந்து, பின்னர் நெடில் தன் மாத்திரையிலிருந்து அளபெடுத்தலேயாகும்.

குறில் எந்நிலையிலும் அளபெடையாக வராது என்பதனைத் தெளிவுபடுத்தும் வகையில் தொல்காப்பியரும், நன்னூலாரும் "நெடில் அளபெழும்" என்றே குறிப்பிடுகின்றனர். எனவே குறில் நெடிலாக விகாரம் அடைந்து பின்னரே அளபெடுக்கும் என்பது பெறப்படுகின்றது.

(எ-டு) கெடுப்பதூஉம் - குறள்:15
கொடுப்பதூஉம் - குறள்:1005
துன்புறூஉம் - குறள்:94
உடைப்பதூஉம் - குறள்:1079
இனிததூஉம் - குறள்:230
இழத்தொறூஉம் - குறள்:940

இன்னிசையளபெடை இடம்பெறும் இடங்களைக் கூர்ந்து நோக்கின் "ஊ" எனும் நெடில் மட்டுமே அளபெடுக்கும் நிலையினைக் காணமுடிகின்றது. மேலும் இன்னிசையளபெடை அமையும் சீரானது மூவசைச் சீராகவே எல்லா இடங்களிலும் அமைந்துள்ளது. (ஈரிசையாக இடம்பெறின் அஃது செய்யுளிசையளபெடையாகும்).

ஆதலின் இன்னிசையளபெடை என்பது ஓசை இனிமை ஒன்றிற்காக மட்டுமே உகரம் விகாரமடைந்து ஊகாரமாகி அளபெடுத்து மூவசைச் சீராக செய்யுளில் இடம் பெறும் என்பது தெளிவாகின்றது.

**சொல்லிசையளபெடை:**

சொல்லிசையளபெடை என்பது சொல் தனக்குள்ளே மாறுபாடு அடைய அளபெடுத்தலாகும். அதாவது பெயர்ச் சொல் வினையெச்சமாக மாற்றமடைவதற்காக நெடில் அளபெடுத்தலாகும். இவ்வாறு அளபெடுக்கும் நிலையில் சொல்லானது வடிவ மாற்றம், பொருள் மாற்றம், தன்மைமாற்றம் எனும் மூவகை மாறுபாட்டினை அடைகின்றது.

"குடிதழீஇக் கோலோச்சும்" - குறள்:1009 இங்கு தழுவி எனும் சொல்லானது தழீஇ என மாற்றமடையும் நிலையில் வரிவடிவ மாற்றமடைந்துள்ளதைக் காண முடிகின்றது.

"வரனசைஇ இன்னும் உளேன்" - குறள்:1199 நசை எனும் சொல் விருப்பம் என்று பொருளைத் தரும். ஆயினும் நசைஇ என அளபெடுக்கும் நிலையில் விரும்பி என்ற வினையெச்சப் பொருள் மாற்றம் அடைகின்றது.

"உரனசைஇ உள்ளம்" - குறள்:1199 நசை எனும் சொல் பெயர்ச்சொல் எனும் தன்மையிலிருந்து மறைந்து வினையெச்சத் தன்மையாக மாற்றமடைகின்றது.

இச்சொல்லிசையளபெடையாக இலக்கியங்களில் ஈ,ஐ எனும் இரண்டு நெடில்கள் மட்டுமே அளபெடுத்து மூவசைச் சீராகவே வருதலை அறியமுடிகின்றது. (இ என முடிவடையும் மூவசைச் சீர் சொல்லிசையளபெடையாகும் -- ஈரசைச் சீராகின் அது செய்யுளிசையளபெடையாகும்.)

**முடிவுரை:**

நன்னூலார் இலக்கணம் இயற்றும்போது வடமொழியினையும் கருத்தில் கொண்டுள்ளார் என்பதற்கு நமக்குப் பதவியல் பகுதி சான்றாகின்றது. தொல்காப்பியர் "யகரம் ஆவோடல்லது மொழி முதலாகா" (தொல். எ:65) எனத் தெரிவிக்கின்றார். ஆனால் நன்னூலார் "அ, ஆ, உ, ஊ, ஓ, ஒள யம் முதல்" (நன். எ:49) என வட மொழி மரபினை ஏற்று இவ் ஆறு எழுத்துக்களுடனும் சேர்வதைச் சான்றுகாட்டுகின்றார். (யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம்).

ஒளகாரத்தின் வருகை பற்றிக் குறிப்பிடும் நன்னூலார் "ஔவும் முதலற்றாகும்" (நன். எ:40) எனக் கூறுகின்றார். அவரே சொல்லின் இறுதி நிலை பற்றித் தெரிவிக்கும்போது "உயிரெழுத்துப் பன்னிரண்டும் மொழியீறாகும்" (நன். எ:52) எனக் குறிப்பிடுகின்றார். சொல்லின் இறுதியாக ஒளகாரத்தைக் குறிப்பிடுவதும் வட மொழி மரபினைக் கருத்தில் கொண்டதேயாகும்.

எனினும் "ஔவும் முதலாற்றாகும்" என்ற நன்னூலார் கருத்தினை வலியுறுத்தி ஒளகாரத்தின் இடை, இறுதிநிலைகளுக்குப் பதிலாக உரையாசிரியர்கள் இன்னிசையளபெடையினையும், சொல்லிசையளபெடையினையும் இணைத்து உயிரளபெடை இருபத்தொன்று என நிலைநாட்டுவது உரையாசிரியர்கள் தம் நுண்ணாய்வின் வெளிப்பாடாகும்.


**துணைநூற் பட்டியல்:**

1. நன்னூல் உரை - விருத்தியுரை, கண்டிகை உரை, மயிலைநாதர் உரை, முனைவர் பெ.சுயம்பு உரை, முனைவர் அழகேசன் உரை
2. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
3. திருக்குறள் - பரிமேலழகர் உரை


கட்டுரையாளர், இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறைத்தலைவர், காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.

புத்தகங்கள் அச்சிட
அற்புதத் தீர்வு
குறைந்த செலவு
அதிகபட்ச தரம்
அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.
REAL IMPACT SOLUTIONS, CHENNAI
தொடர்பு கொள்ள
98412 93503


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 750/-





₹ 145/-





₹ 375/-




₹ 195/-




₹ 155/-





₹ 350/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



கட்டுரை

# முடிவில்லாமல் நீளும் கேள்விகள்

ஜெ.அரவிந்தன்

**கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியனின் ‘அவளுக்கு வெயில் என்று பெயர்’
கவிதைத் தொகுப்பில் பெண் கருத்தாக்கங்கள்**

கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் தம் கவிதைகள் வழியே நினைவில் ஊறும் சொற்களை காதலில் கொஞ்சம், வெயிலில் கொஞ்சம் நனைத்து வரிகளில் ஒளியூட்டி படிக்கும் வாசகர்களுக்கு இளஞ்சூட்டை உணரச் செய்கிறார். வெயில் கொண்டு காதல் செய்கிறார். கவிதை நெய்கிறார். நுரைத்துப் பொங்கும் பேரன்பைக் கொடுக்கும் காதலானது அகத்தை விழிப்பு நிலையில் வைக்கிறது. தகிக்கும் வெயிலை இரசிக்க வைப்பதோடு உவமை, உவமானங்களாக்கவும் செய்கிறது. கவிஞரது காதல் கவிதைகள் உலகத்தை ஈரம் உலராமல் பாதுகாப்பதோடு இலக்கியத்தில் நறுமணம் மிக்கப் பூக்களாகவும் மலர்கின்றன.

இலக்கியப் படைப்புகளில் காதல் கவிதைகளை ஆண் எழுதும்பொழுது எங்கேனும் எப்படியாவது ஓர் ஆதிக்கச்சொல் வந்துவிடுகிறது. பெண் எழுதும் காதல் கவிதைகளில் ஒரு சொல்லில் கூட தம் ஆதிக்கத்தை வெளிப்படுத்துவதில்லை. மாறாக, இதுகாறும் பெண்கள் பின்பற்றி வந்த நாணத்தை விட்டொழிக்கச் செய்கிறது எனில் மிகையன்று. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி மட்டுமல்ல ஆண்டாள், அவள் இல்லாத இறைவனுக்காகத் தமிழை ஆண்டாள். அதைப்போல பண்பாட்டு மரபு சிக்கல்களில் சிக்கிக்கொள்ளாமல் ஓர் இரயில்பாதையைப் போல, கண்ணுக்கெட்டிய வரை அழகாகத் தெரிகிற காதற்கவிதைகளை எழுதியிருக்கிறார் கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன்.

### பெண் எழுத்து

பெண் எழுத்து ஆதரிக்கப்பட்டும் ,எதிர்க்கப்பட்டும் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டும் வருகிற நவீனக் கவிதைச்சூழலில் கவிஞரின் காதல் கவிதைகள் விமர்சன வெளிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவை எனலாம். வெயிலைக் காதலோடு உறவாட வைத்த அவரின் கற்பனை, மிகையான ஒன்றல்ல. அது காலம் காலமாக அடிமைப்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட பெண் மனம் ஆகும். காதல் வெயிலைத்தான் கொண்டாடும். ஏனெனில், அதில்தான் வெப்பம் இருக்கிறது. பெண் எழுத்துக்களின் தீராத்தனிமையை வெப்பம் சுட்டுப் பொசுக்குகிறது.

### ஆண் பெண் சமம்

"பண்பாட்டுப் பாலியல் (Gender) வேறுபாடுகளுக்கான மதிப்பீட்டு அளவைகள் ஆண் அறம், பெண் அறம் என்ற வேறுபட்ட அறங்களின் அடியொற்றி உருவாக்கப்பட்டன. ஆணுக்குப் பெருமை, வலிமை, அழகு, புகழ், அறிவு, கடமை, உரிமை, ஆள்வினை, செயலூக்கமான பாலியல், அதிகாரம் ஆகியவை வேறாகவும் பெண்ணுக்கு உடல் அழகு, மென்மை, பணிவு, அடங்கிய பாலியல், கற்பு ஒழுக்கம், சேவைச்செயல், மடமை, நாணம் ஆகியவை வேறாகவும் ஆகியதற்கு வேறுபட்ட அறங்களே காரணம்". “உடலின் வன்மை - மென்மை,

உடற்கூற்றுச் செயல்பாடுகளின் வேறுபாடுகள், பாலியல் வேலைப் பிரிவு ஆகியவற்றின் மீது பண்பாட்டு ரீதியாகக் கட்டப்பட்ட இந்த அறங்கள் சமூகம், வீடு என்ற இரண்டு இடங்களுக்கு உரியவையாகச் சொல்லப்பட்டன" என்கிறார் ராஜ் கௌதமன் (அறம், அதிகாரம் பக். 156.).

இவ்வாறாக, அடுக்கமைவை உண்டாக்கி வைத்திருக்கிற தந்தைவழிச்சமூக அமைப்பின் மூலங்கள் எதேச்சதிகாரம் கொண்டவையாக இருக்கின்ற பொழுது ஆதிக்கத்தை உடைக்கத் துடிக்கும் பெண் எழுத்து எப்போதும் மென்மையாகவும் இருக்காது, வன்மையாகவும் இருக்காது. அது பெண்ணைப் போலவே கருணை நிறைந்ததாகும். கவிதை வரிகளெல்லாம் அன்பூறியதாக இருக்கும். அப்படியான அன்பூறிய வரிகளில் வெயிலை ஏற்றி எழுதுகிறார் கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன்.

**கால் சுற்றித் தோளேறிய**
**வெயிலை**
**உதற மனமின்றி**
**அவனை அணைப்பதுபோல்**
**உடுத்திக்கொண்டேன் வியர்வையாய்**
**ஊற்றெடுக்கிறது**
**அன்பு.**

*(அவளுக்கு வெயில் என்று பெயர், பக்.79)*

எனும் கவிதை வரிகளில் அன்பு மிளிர்வதைக் காண்லாம். இதில் அவனை அணைப்பது போல் என வரும் தொடர் உடுத்திக் கொண்டேன் எனும் சொல்லாடல் உவமையாகச் சொல்லி முழுமையாகக் காதலை உள்வாங்கிக் கொண்டமைஅயை எடுத்துரைக்கக் காணலாம்.

காதலில் அன்பு அப்படித்தான். வியர்வை போல ஊறும். அஃறிணைகள் மீது கூட அறம் பொங்கும். இவ்வகை உணர்ச்சி காதலுக்கு மட்டுமே உரியது. உடல் மேல் வெயில் படர்வது போல படர்கின்ற காதலைச் சொல்கிற வரிகளில் வெயிலை அன்பில் நனைத்தெடுக்கிறார் கவிஞர்.

**இறக்கிவிட்ட இடுப்புக்குழந்தையென**
**அழுதபடி பின்தொடர்கிறது வெயில்.**
**அள்ளிக் கொஞ்சத்தான் ஆசை**
**அவனைச் சந்திக்கும் அவசரம்**
**புரிந்துகொண்டு**
**தலைமேல் அதனைத்**
**தூக்கி வைத்துக்கொள்கிறது குடை.**

பக்.82) என வரும் வரிகளில் யதார்த்தம் தொனிக்கிறது.

காதல் என்னும் இயல்பான உணர்வைப் பெண்கள் வெளிப்படுத்த முடியாத புறச்சூழலில் அக அழுத்தம் கொண்ட பெண்எழுத்துக்கள் புறச்சூழலைச் சிதறடிக்கின்றன. இன்னதென்று உணர்வதற்குள் பற்றிப் படர்ந்து மரபு மரங்களிலேயே பூப்பூக்கத் தொடங்கிவிடுகின்றன பெண்எழுத்துக்கள். குழந்தை போல அழுதபடி பின்தொடரும் வெயிலை அவனைச் சந்திக்கும் அவசரம் கருதிக் கண்டுகொள்ளாமல் விட அவள் எடுத்துச் செல்லும் குடையோ வெயிலை எடுத்துக் கொள்கிறது. வெயிலை அள்ளிக் கொஞ்ச ஆசைப்படுகிறார் கவிஞர்.

ஆனால் சமூகம் 'நேரம்' வேலை, மரபு, பண்பாடு போன்ற சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கிறது. சிக்கல்களைத் தீர்த்துக்கொண்டிருந்தால் சந்திப்பு நிகழாமல் போய்விடும். 'சிக்கல் கணக்கை நான் தனியாகத் தீர்த்துக்கொள்கிறேன். இப்பொழுது சந்திக்கச் செல்கிறேன்' என்கிறார் தமிழச்சி தங்கபாண்டியன்.

**பெண்ணியல்புகள்:**

பெண்களுக்கு என்று சில இயல்புகளைச் செயற்கையாக உருவாக்கியது ஆணாதிக்கச் சமூகம். அதை அவர்களுக்குப் போதித்துத் திணிக்கவும் செய்தது. இதன் மூலம் பெண் சமுதாயத்தை ஒரு வட்டத்துக்குள் கட்டிப்போட முயல்கிறது ஆணாதிக்கம். பெண்ணியல்பு என்று கூறும் பண்புகள் முழுக்க முழுக்கச் செயற்கையானவை. அப்படிப்பட்ட இயல்புகள் ஆண்களால், பெண்ணைத் தனக்கு அடிமைப்படுத்த உருவாக்கப்பட்டவை எனலாம். "இத்தகைய இட்டுக்கட்டிய மாயை ஒன்றைப் பெண்ணின் மீது திணித்து முடக்கிவிட்ட நிலையில், அதிலிருந்து விடுபடத் துடிக்கும் பெண்களுக்குத் தற்சார்பே தக்க சார்பாக இருக்க முடியும் என்று கருதுகின்றனர் பெண் எழுத்தாளர்கள்" என்கிறார் க.வேங்கடராமன். (எண்பதுகளில் தமிழ்ப்புனைகதைகளில் பெண்ணியம், பக்.99). கவிஞர்

**வெயிலள்ளிக் குடித்துக்**
**கருப்பன் செகப்பனாவான்**
**செகப்பி கருவாச்சியாவாள்**
**வண்ணங்களற்ற காதலை**
**வெயில்தானே விதைக்கிறது!** *(பக்.83)*

என்கிறார்.

கருப்பு, சிவப்பு காதலுக்கேது. வண்ணங்களை மட்டுமல்ல வருணங்களையும் ஏற்றுக் கொள்வதில்லை காதல். இவர் கவிதையிலும் வெயிலப்பிக்கொள்கிற காதல் கருப்பன் செகப்பி வண்ணங்களை மாற்றுவதன் மூலமாகச் சமூகம் உருவாக்கி வைத்திருக்கின்ற எல்லா மூடத்தனங்களையும் புறந்தள்ளுகிறது. புதுமைகளை விதைக்கிறது. ஒடுக்குமுறைக்குப் பொருளாதாரச் சுரண்டல் என்ற நோக்கம் முதன்மையானதுதான், 'ஆயினும் அது ஒடுக்குபவர்களின் தன்மான உணர்வை, அகத்தை அழித்துவிடுவதன்' மூலம் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. ஒடுக்கு


முறையாளர்கள் தாங்கள் மேலானவர்கள் என்பதை ஒடுக்கப்பட்டவர்களின் மனங்களிலேயே நிறுவி விடுகிறார்கள்'' (இன்குலாப் நமது மானுடம் ப.2.) என்கின்ற கூற்று, பெண் ஒடுக்குமுறைக்குப் பொருந்தும் எனலாம். பெண்கள் தாம் ஒடுக்கப்பட்டுள்ளோம் என்றே அறியாத நிலையில் உள்ளனர் அல்லது ஒடுக்கப்பட்ட நிலையை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றே கருதமுடிகிறது.

**கவிஞர் தமிழச்சி தன் கவிதையில்,**

முழுசாப் போர்த்திக்கிட்டா
மோசம் போகாதுல்லங்கிற
கனவான்களும்
ஆம்பளையோடு அந்த நேரம்
அங்க இங்க ஏன் போறங்கிற
அரசாங்கச் சீமான்களும்,
அண்ணேன்னு கூப்பிட்டிருந்தா
அபயம் கிடைச்சிருக்கும்லங்கிற
அரைலூசு ஆண்மக்களும்,
எம் பொண்ணாயிருந்தா
எரிச்சிப் புதைச்சிருப்பேங்கிற
மெத்தப்படிச்ச மேதாவிகளும்...
எட்டுத் திக்கும் சுத்தி வர
இப்ப,
நா எந்திருச்சி என்ன செய்ய?
இன்னும் உறங்குதியோ
என்றெழுப்பும் தோழிமாரே
மாறுமிந்த அவலம்
எனத்துடிக்கும் தோழன்மாரே
இப்ப,
நா எந்திருச்சி என்ன செய்ய? (பக்.101)

என வினா எழுப்பி இன்னும் உறங்குகிறீர்களே விரைவாக எழும்புங்கள் என்றெழுப்பும் ஆண்டாள் பாடலின் சாயலாகக் கொண்டு, இன்றைய பெண்ணிய அடிமைச்சூழலையும், பெண்ணிய அடிமைக் கருத்துக்களையும் கவிதையில் காட்டும் கவிஞர் உறங்கி எழுவதல்ல தீர்வு, உரிமையோடு எழுவதுதான் தீர்வு என்கிறார். மேலும்,

இருந்தாலும்
என் கையூன்றி நா
எந்திருச்சு உட்கார்ந்து
கோடாலிக் கொண்டை போட்டு
எழுதி வைப்பேன் இப்படி:
வெத்திலைக் காம்பைப் போல நீ
கிள்ளிக் கிள்ளிப் போடக்
கொல்லையிலே மண்புழுவா
நா மறுபடி மறுபடி பிறப்பெடுப்பேன்!
மலைதுளைக்க முயற்சிப்பேன்! (பக்.102)




என்று எச்சரிக்கை செய்யும் கவிஞர் பெண்களே கையூன்றி எழுவதைத் தவிர இந்த வறட்டுச் சமூகத்தில் எங்கேயும் இடமில்லை . அப்படி எழுந்தாலும் மலையைப் புரட்டுகிற அளவுக்கு வலுவோடு எழவேண்டும் என்கிற சிந்தனையை முன்வைக்கிறார். இவ்வடிகள் அடிமைப் பட்டுக்கிடக்கும் பெண்ணுக்கு ஊக்கத்தைக் கொடுக்கக் காண்லாம்.

**உத்திகளினூடாக எதிர்சிந்தனை**

புதுக்கவிதையில் உத்தி சிறப்பான பங்கு வகிக்கிறது. எளிமையாகச் சொல்வதற்கு உத்திகள் தேவைப்படுவது போல நுட்பமாகச் சொல்வதற்கும் உத்திகள் தேவைப்படுகின்றன. ''வரலாற்றில் ஆளும்தரப்பான ஆண்வர்க்க இலக்கியத்தில், உத்திகள் இரசனையின் பாற்பட்டன. எதிர்மரபு இலக்கியத்தில், பாதுகாப்புக்கும் தாக்குதலுக்கும் பயன்பட்டன" என்பார். ச.விஜயலட்சுமி, (தமிழ்க்க விதைகளில் பெண்ணுரிமை, பக்.257) அவ்வகையில் எதிர்மரபைக் கொள்கையாகக் கொண்டு கவிபாடும் கவிஞர் தம்முடைய மற்றொரு கவிதையில்,

சேர்தலின் ஈரமும்
பிரிதலின் உக்கிரமும்
வெயிலும் வெயில் சார்ந்த
காதலுமே கரிசல் (பக்.89)

என்கிறார். இலக்கிய வடிவங்களில் கவிதையில் மட்டும்தான் மொழி தானும் ஒரு வடிவமாகக் கருக்கொள்ளும். அந்த அடிப்படையில், பிரிதல் உக்கிரமானதுதான். சேர்தலோ ஈரமானது. இப்படி, பெண் எழுத்துக்களால் மட்டுமே கொண்டாட்டத்தையும், போராட்டமாக மாற்றுகிற வெயிலும் வெயில் சார்ந்த காதலும் என்று சொல்லுகிற விடுதலை உணர்வைக் கொண்டு எழுதமுடியும். இரசனை அடிப்படையிலான கவிதை என்றாலும்,

இக்கவிதையில் வெளிப்படுகிற உத்தி பெண் அடிமைத்தனத்தை உணர்த்துவதோடு மட்டுமல்லாமல் காதலின் நுட்பத்தையும் இக்கவிதையில் படிந்திருக்கிற வெயிலின் வெப்பத்தையும் வாசகர்களால் உணர்ந்து கொள்ள முடியும்:

பெண்களை உவமைகளால் புகழ்பாடும் இலக்கியங்கள் நிகழ்வில் நடக்கிற பெண்களுக் கெதிரான கொடுமைகளைக் காட்சிப்படுத்தத் தவறிவிடுகின்றன. அப்படியே காட்சிப்படுத்தினாலும் அது ஆண் எழுத்தாக இருக்கிற பட்சத்தில் தக்கசார்பு எடுத்து விடுகிறது. தமிழச்சி தங்கபாண்டியன் கவிதைகளில் ஆண் என்கிற அதிகாரப் பிம்பத்தால் அல்லலுறும் எளிய குடும்பத்துப் பெண்களைக் காட்சிப்படுத்துவதின் வழியாக ஆண்டாண்டு கால அடிமைத்தனத்திற்கு எதிராக எதிர்க்கேள்வி கேட்பதோடு மட்டுமல்லாமல் தீர்வையும் முன்வைக்கிறார். அவர் கவிதைகளில் ஓர் அரசியல் தெளிவு மேலோங்கி நிற்கிறது. அப்படி மேலோங்கி நிற்கும் அரசியல் தெளிவை அவர் கவிதைகளின் வரிகளைக் கொண்டே "வெயிற்பிடாரி"யாக உருவெடுத்தது எனச் சொல்லலாம்.

ருசி பார்த்த ஒரு சொட்டு
கொதி உணவின்
சுவையோடு ஒடுங்கும்
உணர்நரம்புகள்
ஆறிய மீதி உணவில்
பெண் நாவிற்கே முழுப்பங்கும் (பக்.120)

என்னும் கவிதையில் சூடு ஆறிய உணவைக் கடைசியாக உண்ணும் குடும்பத்துப் பெண்களைக் கவிதையாக்கிச் சுவை மட்டும் கொதிச்சூட்டில் பார்க்கிற பெண் நாவுகள் என்றைக்குமே சுடச்சுட உட்கொண்டதில்லை என்பது மட்டுமல்ல, என்றைக்குமே சுடச்சுடப் பேசியதுமில்லை, உரிமை கோரியதுமில்லை என்கிற கேள்வியை முன்வைக்கிறார் தமிழச்சி தங்கபாண்டியன்.

**தொகுப்புரை**


தமிழச்சியின் மனவோட்டம் சார்ந்து எழுப்பியுள்ள கேள்விகள் முடிவில்லாமல் நீள்கின்றன. தனது அடையாளத்தையும், இருப்பையும் இலக்கியச்சூழலில் தக்கவைத்துக் கொள்ளவும் போராடுகிற பெண் படைப்பாளிகள் தமது படைப்பின் வழியாகவும், போராட வேண்டும் என்கிற உண்மையைக் கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியனின் அவளுக்கு வெயில் என்று பெயர் கவிதைத் தொகுப்பு எடுத்துரைக்கக் காணலாம்.

கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்
தமிழ் உயராய்வு மையம், அ.வீரையா வாண்டையார்
நினைவு திரு புட்பம் கல்லூரி (துன்னாட்சி)


நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
புதிய வெளியீடுகள்




₹ 40




₹ 95




₹ 135

கட்டுரை



# குட்டிரேவதி சிறுகதைகள்
## *பெண்ணுடலின் மொழி*

சுப்பிரமணி இரமேஷ்

இரண்டாயிரத்துக்குப் பிறகு கவிதைத் தொகுப்பை வெளியிட்ட பெண் கவிஞர்களுள் குட்டிரேவதி முக்கியமானவராக அறியப்படுகிறார். இவரது கவிதைகள் நவீன கவிதையின் எல்லையை விரிவாக்கின; பேசாப் பொருளைப் பேசத் துணிந்தன; அதனால் இவரது கவிதைகள் பொதுவெளியில் பெரிதும் விவாதிக்கப்பட்டன. கவிதைகளைத் தொடர்ந்து ‘நிறைய அறைகள் உள்ள வீடு’, ‘விரல்கள்’, ‘மீமொழி’, ‘இயக்கம்’ ஆகிய நான்கு சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். ‘அழியாச் சொல்’ என்ற நாவலும் வெளியாகியுள்ளது. இவர் ‘பனிக்குடம்’ என்ற சிற்றிதழைச் சிலகாலம் நடத்தினார். பனிக்குடம் மூலமாகச் சில சிரத்தையான நூல்களையும் வெளியிட்டுள்ளார். திரைத்துறை சார்ந்த பங்களிப்பையும் தொடர்ந்து செய்து வருகிறார். சித்த மருத்துவத்தில் ஆய்வுசெய்தவர். இலக்கியத்திலும் கலையிலும் பெண்களுக்கென தனித்த மொழியை உருவாக்கும் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறார்.

குட்டிரேவதி சிறுகதைகளின் காலகட்டத்தை இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம். பெண்களின் புறக்கணிக்கப்பட்ட வெளியை உள்முகமாகப் பேசுபவை குட்டிரேவதியின் தொடக்ககாலச் சிறுகதைகள். பெண்கள்தாம் பெரும்பாலும் கதைகளை நகர்த்துகிறார்கள். சிறுகதை வடிவத்தைக் கலைத்துப்போட்டுத் தனக்கென வடிவம் தேடும் முயற்சிகளாக இக்கதைகள் இருக்கின்றன. பெண்ணுடலும் ஆணுடலும் இணையும்போது குறுக்கிடும் தொன்ம நெருக்கடிகள் இவர் கதைகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. பெண்ணுடல் இயற்கையின் பேருருவமாகி ஆணின் தீண்டலுக்காகக் காத்திருக்கிறது. கூடிவரும் இருவருக்குமான முயக்கத்தில் அந்தத் தீண்டல் சம்பிரதாயமான இனப்பெருக்கத்தின் தேவைக்கென சுருங்கிப்போகிறது. இவ்விடத்தில் பெண்ணுடல் ஓர் இயந்திரமாகக் கட்டமைக்கப்படுகிறது. வாரிசுகளை உற்பத்தி செய்யும் கேந்திரங்களாக அவை மடைமாற்றம் செய்யப்பட்டன. இந்தப் புள்ளிகளைக் குட்டிரேவதியின் கதைகள் விவாதிக்கின்றன. ‘நிறைய அறைகள் உள்ள வீடு கவிதைத் தொனியிலேயே எழுதப்பட்ட சிறுகதைத் தொகுதி எனலாம். உருவகமாகவும் நேரிடையாகவும் உறவுகளைப் பற்றிப் பேசும் சிறுகதைகொண்ட இத்தொகுதி உறவுகளின் கட்டிப்போடும் தன்மையையும் அதை மீற எப்போதும் பெண்களும் ஆண்களும் முயல்வதையும் காடும் கடலும் சூழ்ந்த கதை உலகில் இருந்து சொல்கிறது’ (பக்.72:2017)என்றுகுட்டிரேவதியின் முதல் தொகுப்பை அம்பை மதிப்பிட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

பெண்ணுடல் ரேவதி கதைகளின் கச்சாப்பொருள். இதனை மூலமாகக்கொண்டு புனைகளில் சில புதிய திறப்புகளை உருவாக்க முயன்றிருக்கிறார். பெண்ணுடல்மீது புனையப்பட்டுள்ள தொன்ம மதிப்பீடுகளை மீளுருவாக்கம் செய்வதற்கான ஒரு தளமாகத் தம் கதைகளைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்.‘சிதறிக்கிடக்கும்

உறுப்புகளை ஒருங்கிணைக்கவும், ஒவ்வோர் உறுப்பின் மீதும் அழுத்தம் தரும் அரசியல் சுமையைக் களைக்கவும் புனைவு ஓர் அகண்ட உலகத்தைத் திறந்து கொடுக்கிறது' (07:2013)என்று முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். கவிதைகளில் பேச இயலாததைக் கதைகளில் விரிவாகப் பேச முயன்றிருக்கிறார். ஒரு நோக்கத்தை ஏற்கனவே வரித்துக்கொண்டு புனைவுக்குள் நுழைந்திருப்பதால் பாலியல் தொடர்பான கதைகளே தொடக்கத்தில் பிரதான இடம் வகித்திருக்கின்றன. கவிதை மொழியிலிருந்து தன்னை முழுமையாக விடுவித்துக்கொள்ளாததால் இவரெழுதிய பல கதைகள் கவிதையின் பிறிதொரு வடிவங்களாக உள்ளன. புனைவுகளில் உரையாடல்கள் மிகக்குறைவு. 'பிங்க் வோட்கா' விதிவிலக்கு. இதனால் சில கதைகள் கட்டுரை மற்றும் பயணக் குறிப்புகளின் உருவங்களாக மாறிவிடுகின்றன.


சுதந்திரத்தை எல்லா வகையிலும் தேடும் பெண்களே ரேவதி கதைகளின் நாயகிகள். 'கட்டுவிரியன்' கதையில் வரும் காயாம்பூ ஒடுக்கப்பட்டவளாக இருந்தாலும் அவளுக்கான சுதந்திரத்தைப் பெறுவதில் அவள் சமரசம் செய்துகொள்வதில்லை. ஒடுக்கப்பட்ட ஒரு பெண்ணின் குறியீடாகக் காயாம்பூ இருக்கிறாள். இவரது பல புனைவுகளில் இப்பெண் தொடர்ந்து இடம்பெறுகிறாள். ஆண்களினும் தனித்துவமான பெண்களே இவரது கதைகளில் நிரம்பியிருக்கிறார்கள். சம்பிரதாயத்துக்கு ஆண்கதாபாத்திரங்கள் புனைவுகளில் வந்துபோகின்றன. இவர்களுக்கான இடத்தை மறுப்பதினூடாகத் தம் புனைவுகளைப் பெண்களுக்கான பிரதிகளாக மாற்ற முயன்றிருக்கிறார். இத்தன்மை பெண் கதைகளில் எழுதப்படாத விதியாக இருப்பதை உணரலாம்.

யதார்த்தத்திற்கும் மாயத்திற்கும் இடைப்பட்ட வெளியில் குட்டிரேவதியின் கதைகள் இயக்கம் கொள்கின்றன. கவிதையின் வீரியத்துடன் தன் கதைப் பயணத்தைத் தொடங்கியவர், அடுத்தடுத்த தொகுப்புகளில் கதைக்கென ஒரு மொழியை உருவாக்கிக் கொள்ளும் பிரக்ஞையுடன் செயல்பட்டிருக்கிறார். கனவை நிஜத்துடன் ஒன்றுகூட்டும் ரசவாதத்தைச் சில புனைவுகளில் செய்து பார்த்திருக்கிறார். 'விரல்கள்' அந்த வகையில் சிறப்பாகக் கூடிவந்த கதையாகக் கருதலாம். ஆண் விரல்களின் வெவ்வேறு விதமான தொடுதல்கள் குறித்து குட்டிரேவதி தொடர்ந்து எழுதிக்கொண்டே இருக்கிறார். இது, கனவில் தொட்ட விரல்களால் கருவைச் சுமந்த எமிலியின் கதை அன்று. துறவைத் தழுவிக்கொண்ட கிறித்தவப் பெண்களின் அகப்பிரச்சினையைப் பற்றியது. கிறித்தவ மதத்தின் தொன்மை இக்கதைக்குப் பின்னணியாக இயங்கியுள்ளது. 'எந்த ஆணின் விரலும் உன்னைத் துன்புறுத்தாமல் இருக்கவே நான் உன்னை இங்கு விட்டுப்போகிறேன்' என்ற அம்மாவின் குரலில் வெளிப்படும் நம்பிக்கையை எமிலியால் காப்பாற்ற முடியவில்லை. இந்தக் கதையில் வரும் எமிலிக்கு மரியாளின் தொன்மம் ஏற்றப்படுகிறது. யதார்த்தத்தில் இப்படியொரு நிகழ்வுக்குக்கிறித்தவச் சமூகம் எவ்வித எதிர்வினையை நல்கும் என்ற கேள்விக்கான விடையும் இக்கதையில் உள்ளது. தொன்ம மதிப்பீட்டிற்கு நிகழ்காலத் தன்மையை அளிக்கும்போது அந்த மதிப்பீடு அடையும் இடம்தான் இக்கதை என்பதாகவும் புரிந்துகொள்ளலாம். குட்டிரேவதியின் சிறுகதையில் தனித்துத் தெரியும் கதைகளுள் ஒன்றாக 'விரல்கள்' இருக்கும். சவாலான முயற்சியாக இதனைச் செய்து பார்த்திருக்கிறார். தொன்மத்தில் சாத்தியப்பட்ட ஒன்று தற்காலத்தில் நிஜமாகும்போது அதனை எதிர்கொள்வதிலுள்ள சங்கடமும் அந்நிஜத்தின்மீது எழுப்பப்படும் சந்தேகங்களும் மிக சுவாரஸ்யமானவை.

சிறுமிகள் தொடர்ந்து நெருக்கமான உறவுகளால் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுவதை ரேவதியின் கதைகளில் பரவலாகக் காணமுடிகிறது. வலிந்து திணிக்கப்படுவதாகத் தெரியவில்லை. கள யதார்த்தம் அப்படித்தானே இருக்கிறது என்ற தொனிதான் இக்கதைகளை வாசிக்கும்போது ஏற்படுகிறது. அப்பா-மகள் இடையிலான தொன்ம மதிப்பீடுகளின்மீது தற்காலத்தில் பெரும் விரிசல் விழுந்திருப்பதை இவரது கதைகள் வெவ்வேறு தொனியில் பேசிக்கொண்டே இருக்கின்றன. பெண் உடலுக்கு முன்னால் உறவுகளின் புனித முகமூடிகள் நொடிந்து வீழ்ந்து பல மாமாங்கங்கள் ஆகிவிட்டதை நவீன இலக்கியங்கள்தாம் நினைவூட்டின. 'விரல்கள்', 'ஆண்' என அடுத்தடுத்த கதைகளில் இப்பிரச்சினைகள் பற்றி எழுதியிருக்கிறார். இளம்வயது பாலியல் சீண்டல்கள் பெண்களின் ஆழ்மனதில் ஓர் ஆறாத வடுவாகத் தங்கிவிடுவதைப் பெண்கள் பலரின் கதைகளில் காண முடிகிறது. 'ஆண்' கதையில் வரும் அருணாவிற்கும் இது பெரும் பிரச்சினையாக உருவெடுக்கிறது. அவள் கணவனின் விரல் படும்போதெல்லாம் அந்த இளம்வயது சம்பவம் துரத்துகிறது. இறுதியில் பைத்தியமாவதாகக் கதை முடிகிறது. குட்டிரேவதியின் பெரும்பான்மைக் கதைகள் உடலைப் பிரதானப்படுத்தி, அதன்மீது நிகழும் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்துஅவதானித்திருக்கிறது.

'முழுமதி', 'கந்தகப் பூ', 'கண்கள்' ஆகிய மூன்று கதைகளையும் சங்க அகமரபின் தொடர்ச்சியாக எழுதியிருக்கிறார். மரபிலக்கியத்தின் மீதுள்ள குட்டிரேவதியின் ஈடுபாடு இதனைச் சாத்தியப்படுத்தியிருக்கிறது. சங்க இலக்கியமும் பாரம்பரிய மருத்துவ முறைகளும் இவர் கதைகளுக்குள் ஊடாடும்போது புனைவுகள் செவ்வியல் தன்மையை அடைகின்றன. தம் உடலைக் கையாளுவதில் அக்காலத்தில் பெண்களுக்குச் சுதந்திரம் இருந்தது. தாம் விரும்பிய ஆடவனுடன் அப்பெண்கள் களவொழுக்கத்தில் ஈடுபட்டனர். திருமணத்திற்கு முன்பே உடலிணைதல் ஒழுக்க மீறலாகக் கருதப்படாத காலம் அது. மணச் சடங்குகள் கட்டாயமாக்கப்படாத சூழல் அப்போதிருந்தது. தெய்வம் முன்னின்று இருவரையும் புணர்ச்சிக்கு உட்படுத்தியதாக நம்பினர். இதனை இயற்கைப் புணர்ச்சியென்றும் தெய்வப் புணர்ச்சியென்றும் பெயரிட்டு மகிழ்ந்தனர். தொல் சமூகத்தில் பெருவிருப்பத்தின் காரணமாக இரு உடல்களும் ஒன்று சேர்ந்ததில் அன்பைத் தவிர வேறெந்த நோக்கமும் பின்புலத்தில் இயங்கவில்லை. பிற்காலத்தில் இத்தன்மை இல்லாமல் போனது.

அந்த அகத்திணை மரபின் வழித்தோன்றல்களாக இக்கதைகளின் பெண்கள் விளங்குகின்றனர். காமத்தின்மீது கட்டப்பட்டுள்ள தொல்மதிப்பீடுகளை இப்பெண்கள் சிதைக்க முயலுகின்றனர். தொடர்ந்து தம் கதைகளினூடாக இந்தக் கலகத்தைக் குட்டிரேவதி செய்து வருகிறார். காமத்தின் நெருப்பு தீண்டிய பெண் உடல் வெளிப்படுத்தும் மொழியைக் கதைகளில் பிடிக்கும் முயற்சியாகவும் இக்கதைகளை வாசிக்கலாம். ஔவையார், அள்ளூர் நன்முல்லையார் உள்ளிட்ட சங்கப் பெண் புலவர்கள் வெளிப்படுத்திய உணர்வெழுச்சியை உள்வாங்கிக் கொண்டவர்கள் இக்கதைகளின் பெண்கள். கொடிச்சி, ஆய்ச்சி, உழத்தி, நுளைச்சி, மறத்தி போன்ற சங்ககாலப் பெண்களின் நவீன குரல்களை இவரது கதைகள் எதிரொலிக்கின்றன. காமத்தைக் கடக்கச் சொற்களின்றித் தவிக்கும் தீவிரத் தன்மை சங்கக் கவிதைகளைப் போல இவரது சிறுகதைகளிலும் வெளிப்படுகிறது. தொடர்ந்து இந்த வட்டத்திற்குள்தான் பெரும்பான்மைக் கதைகள் சுற்றி வருகின்றன.



‘தூமலர்’, பெண்கள்மீது இச்சமூகம் நிகழ்த்தும் வன்முறையின் மூல வடிவத்தை வேறொரு கோணத்தில் ஆராயும் கதை. ‘கற்பூரம்’, ‘அமிலம்’ ஆகிய இரண்டு கதைகளும் வளர்ந்த பிள்ளைகள் இறுதியில் அம்மாவைப் புறக்கணிக்கும் கதைக்களனை உள்ளடக்கமாகக் கொண்டவை. இக்கதைகளும் உறவுகள்மீது போர்த்தப்பட்டுள்ள புனித பிம்பங்களை அசைத்துப் பார்ப்பவை. ‘கற்பூரம்’ கதையில் வரும் இரயிலில் ஊதுபத்தி விற்கும் அந்த நபரை நானும் சென்னைப் புறநகர் இரயிலில் பலமுறைப் பார்த்திருக்கிறேன். அவர் பேசும் வசனங்கள் அப்படியே இக்கதையில் இடம்பெற்றுள்ளன. அகத்தின் உட்சிடுக்குகளை மொழிப்படுத்திய ரேவதி, புறச்சூழல்கள்மீதும் கவனம் செலுத்தியிருக்கிறார் என்பதற்காக இதனைக் குறிப்பிடுகிறேன்.

குட்டிரேவதி, கதைகளுக்காகக் காத்திருப்பதில்லை; ஒரு நிகழ்வின்மீது தன் மொழித் திறனை நுட்பமாக நுழைத்துக் கதையாகப் பின்னி அந்த நிகழ்வைப் பத்திரபடுத்திக் கொள்கிறார். கதையை மொழியிலிருந்து விடுவிக்கும் முயற்சியிலும் வெற்றி பெற்றிருக்கிறார் என்றே கருதுகிறேன். அடுத்து, யதார்த்தத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் கதைமாந்தர்களுக்கே இவர் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். அவர்கள் தங்களை மீள்கட்டமைத்துக்கொள்ளும் முன்னெடுப்புகளைத் தொடர்ந்து செய்கின்றனர். அந்த முன்னெடுப்பு பெண் உடலைத் தொடர்ந்தே இயங்குகிறது. இதன் விளைவு என்னவாக இருக்கும் என்ற கேள்விக்குக் காலத்திடம்தான் கைக்கட்டி நிற்க வேண்டும்.

குட்டிரேவதியின் நான்காவது சிறுகதைத் தொகுப்பான ‘இயக்கம்’, அவரது முந்தைய தொகுப்புகளில் இருந்து வேறுபட்டது. தொடக்கத்தில் பெண்ணுடலையும் அது வெளிப்படுத்தும் ரகசிய சமிக்ஞைகளையும் புனைவுகளாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பார். முந்தைய புனைவுகளின் பாதிப்புகளிலிருந்து தன்னை முற்றாகத் துண்டித்துக்கொண்டு புதிய களங்களில் சிறுகதைகளை எழுதியிருக்கிறார். கதைகளுக்கேற்ப மொழியிலும் கூற்றுமுறையிலும் வித்தியாசத்தைக் கூட்டியிருக்கிறார். காதலில் மயங்கி வீட்டைவிட்டு வெளியேறிய மஞ்சுளாவின் கதைதான் ‘ஆறு.’ மஞ்சுளாவிற்கு ஐந்து குழந்தைகள்; வேலைக்குச் செல்லாத குடிகார கணவன் என பெண்கள் எதிர்கொள்ளும் புறச்சித்திரங்கள் கதைக்குள் பயணப்பட்டாலும், ஏழுபேரின் பசிக்காக மஞ்சுளா செய்யும் செயல் புதியதாக இருக்கிறது. பண்ணையாரின் முன்பு நிர்வாணமாக நிற்கிறாள்; பண்ணையார் பார்த்துக்கொண்டே இருப்பார். அவருக்கு அவ்வளவுதான் சாத்தியம். மஞ்சுவின் கணவனுக்கும் இது தெரியும். மஞ்சுவிற்கும் தம் குழந்தைகளின் பசிக்கு முன்பாக இச்செயல் குற்றமாகத் தெரியவில்லை. தாலி என்ற ஒன்றைக் கட்டிவிட்டுத் தினந்தோறும் தன் அனுமதியின்றி தன்னைவன் புணர்ந்துகொண்டிருக்கும் கணவனை இவளால் தடுக்க முடியவில்லை. ஏனெனில் அந்த உறவு நிறுவனமயப்படுத்தப்பட்டது. இவளால் அதனைத் தகர்க்க முடியாது. ஆனால் பண்ணையார் வீட்டில் நடப்பது இவள் அனுமதிக்குப் பிறகுதான். இந்தப் புள்ளிதான் கதையின் மையமாக இருக்க வேண்டும். இங்கே காமம் என்பது கிடைக்காதவருக்கு இடப்படும் உணவாக முன்னிறுத்தப்படுகிறது. மனிதர்களுக்குள் இரண்டுவிதமான பசி எப்போது இருந்துகொண்டே இருக்கும். இவ்வுலக இயக்கத்திற்கு இவ்விரு பசிகளுமே ஆதார வித்து. வழக்கமாக இதுபோன்ற நிகழ்வுகள் நகரம் சார்ந்த இடங்களில் நடைபெறுவதாகவே புனைவுகள் எழுதப்பட்டிருக்கின்றன. இக்கதையின் களம் கிராமம். ஆனால் கதையின் முடிவு ஏமாற்றமாக இருக்கிறது.

சமகாலத்தை எழுதுவதிலும் குட்டிரேவதி முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். ‘சுயமுகம்’ என்ற கதை கொரோனா எனும் பெருந்தொற்றினூடாக வெளிப்பட்ட சிலரின் சுயமுகத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. கடந்த இரண்டாண்டுகளில் இப்பிரச்சினை குறித்து நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்நோய் புனைவுகளிலும் கலந்துவிட்டிருக்கிறது. கொரானாவின்

முதல் அலையில் இந்நோய் தாக்கிய மனிதர்கள்மீது சக மனிதர்கள் காட்டிய குரோதம், மனிதர்களின் மற்றொரு முகத்தை நேரடியாகக் காணநேர்ந்தது. இந்த வெறுப்பு மதம் சார்ந்தும் வெளிப்பட்டது. இந்தக் கண்ணியிலிருந்தே இக்கதை எழுதப்பட்டுள்ளது. இந்தக் கதையின் முடிவுகூட உணர்ச்சிவசப்பட்டு எடுக்கப்பட்டதுதான். புனைவுக்கு ஒட்டாமல் இரு கதைகளின் முடிவுகளும் செயற்கையாக இருக்கின்றன. கதையின் முடிவுகளுக்குப் புனைவாசிரியர் சரியான நியாயம் செய்யவில்லை என்ற வாசிப்பிலும் அணுகலாம். 'இயக்கம்' சிறுகதை தனித்துத் தெரிந்தாலும் வாசிப்பில் ஒன்றச் செய்யவில்லை. முன்னெடுப்பான உரையாடல்கள் கதைக்கு வெளியே துருத்திக்கொண்டு நிற்கின்றன. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட தோற்றம் வாசிப்பில் இக்கதைக்குப் பின்னடைவை ஏற்படுத்துகிறது.

'புயல்', 'பெருந்திணை' ஆகிய இரு கதைகளும் தனித்துத் தெரிபவை. இரண்டின் கருப்பொருளும் பெருந்திணைக் காதல்கள்தாம் என்றாலும் 'புயல்' சிறுகதை இருளர் சமூகத்தின் பெண்கள் எதிர்கொள்ளும் தொடர் பிரச்சினைகளை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறது. திருட்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு வன்புணர்ச்சி செய்யப்பட்ட இருளர் சமூகத்தைச் சார்ந்த மாசி என்ற பெண்ணின் கதை 'புயல்.' அறுபத்தைந்து வயதான சுகுமாரன்தான் இவர்களுக்காகக் குரல் கொடுக்கிறார். தவறு செய்தவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கிறார். மனைவியை இழந்த சுகுமாரனுடன் எஞ்சிய வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ள நினைக்கிறாள் மாசி. இக்கதையின் முடிவுமீதுகூட விமர்சனம் உண்டு. கடற்கரையில் ஓர் ஆணும் பெண்ணும் நெருக்கமாக உரையாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுள் ஆண் திருமணமானவர். பொருந்தாதுக் கழிந்துபோன ஒரு காதல் அந்தக் கடற்கரையில் அழகாகக் கூடிவருகிறது. அவர்களது உரையாடலில் அவ்வளவு அந்நியோன்யம். சமூகம் இப்படியிருந்தால் நன்றாக இருக்குமென்ற ஆசைதான் ரேவதியை இப்படியொரு கதையை எழுத தூண்டியிருக்கிறது.கற்பனையும் யதார்த்தமும் இணையும் தருணங்களில் ஏற்கனவே கட்டமைக்கப்பட்டுள்ள சமூக ஒழுங்குகள் இரண்டிற்கும் இடையில் ஒரு சுவரை எழுப்பிக்கொண்டே இருக்கின்றன. சமூக ஒழுங்குகளை உடைப்பது ஆணுக்கு எளிதாகவும் பெண்ணுக்குக் கடினமாகவும் இருப்பதை ரேவதியின் கதைகள் பல இடங்களில் சுட்டிக்காட்டுகின்றன. இவ்விரு கதைகளும் அப்படியொன்றைத்தான் தொனிப்பொருளாகக் கொண்டிருக்கின்றன. யதார்த்தத்தில் இப்படியொரு வாழ்க்கை சாத்தியமா என்ற கேள்வியும் இக்கதைகளுக்குள் அடக்கம். ஆனால் மரபு மனம் இக்கதைகளின் பெண்களிருவருமே திருமணமானவர்களாகக் காட்டவில்லை. இதற்கு இன்னும் சில மாமாங்கங்கள் ஆகும்.

அரவாணிகளின் உளவியல் பிரச்சினையை மையப்பொருளாக்கி எழுதப்பட்ட 'தலை' என்ற சிறுகதையும் குறிப்பிடத்தக்கவை. 'என் புருஷன் வேற பொண்ண, வேற அரவாணியக்கூடத் திரும்பிப் பாக்கக்கூடாது. அப்படின்னா அவன் என்ன பொண்ணாவே பாக்கலன்னு தோணிரும். கத்தியால என் கழுத்த வெட்டி சிரமறுத்துக்கனும்னு தோணும்' என்ற அரவாணி சுதாவின் உரையாடல்தான் இக்கதையை முடித்தும் வைக்கிறது. கூவாகத்தில் நடைபெறும் சடங்கு இக்கதைக்குப் புராணீகத் தன்மையைக் கொடுக்கிறது. தொன்மமும் நடப்பியலும் மோதவிட்டு கதையை முடித்திருக்கிறார். அரவான், அவனை ஏமாற்றிய கண்ணன் என வாசிப்பதற்கும் மேற்கொண்டு உட்செல்வதற்கும் இடம்தரும் கதை. 'பூநீறு' ரேவதியின் தொழில் சார்ந்த புனைவு. இதுபோன்ற கதைகளும் தற்போது அதிகளவில் எழுதப்படுகின்றன. பாரம்பரிய மருத்துவத்தின் எழுச்சி பொதுமக்களால் தற்காலத்தில் நன்றாக உள்வாங்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில் பூநீறின் தன்மைகள் குறித்தும் அதன் மருத்துவப் பயன்கள் குறித்தும் எழுதப்பட்ட கதையாக இதனைக் கருதலாம்.

தொடக்கத்தில் குட்டிரேவதி எழுதிய ஒவ்வொரு கதையையும் வெவ்வேறு உருவத்தில் காமம்தான் இயக்கியிருக்கின்றன. இக்கதைகளுக்கு அவர் பயன்படுத்திய மொழி தனித்துவமானது; மொழியுடன் இவர் நிகழ்த்தும் உரையாடல்கள்தாம் கதைகள் என்ற இடத்திலும் குட்டிரேவதியின் கதைகளை நிறுத்தலாம்.கவிதையின் சரடுகளுடன் தொடர்ந்து செல்லும் நீரூற்றைப்போல அவர் மொழியைக் கையாண்டிருக்கிறார். அடுத்தடுத்த வாசிப்புகளிலும் மிச்சமிருக்கும் நுட்பம் இவரது கதைகளில் வெளிப்படுகிறது. நுட்பமாகப் புரிந்துகொள்ளும் வெளியை ஒவ்வொரு கதையும் உருவாக்கிச் செல்கிறது. அனுபவக்குறிப்புகளாகச் சில புனைவுகள் தேங்கிப்போவதையும் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். ஏனெனில் வெறும் மொழிப்புலமையைக் கொண்டு ஒரு காத்திரமான கதையைக் கட்டமைக்க முடியாது. பிற்காலத்தில் புறப்பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறுகதைகளை எழுதியிருக்கிறார். அன்பிற்கும் அது உருவாக்கும் அசைவுகளுக்கும் இடையில் புனைவுகளை ஊடாட விட்டிருக்கிறார். முதல் மூன்று தொகுப்புகளில் இந்த வேறுபாட்டை அந்த அளவுக்குப் பார்க்க முடியவில்லை. குட்டிரேவதியின் இந்த வளர்ச்சி கவனத்தில் கொள்ளவேண்டியவை.

**பயன்பட்ட நூல்கள்**


1. அம்பை, உடலெனும் வெளி, கிழக்குப் பதிப்பகம், சென்னை, பதி.2017
2. குட்டிரேவதி, நிறையஅறைகள் உள்ள வீடு, பாதரசம் வெளியீடு, சென்னை, பதி.2013
3. குட்டிரேவதி, விரல்கள், நற்றிணை பதிப்பகம், சென்னை, பதி.2018
4. குட்டிரேவதி, மீமொழி, எழுத்துப் பிரசுரம், சென்னை, பதி. 2020
5. குட்டிரேவதி, இயக்கம்,எழுத்துப் பிரசுரம், சென்னை, பதி.2020



**கட்டுரையாளர், எழுத்தாளர் சென்னை பட்டாபிராம் டிஆர்.பி.சி.சி.சி. இந்துக் கல்லூரி தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்**